# இந்தியக் குடிமக்களாகிய நாம்

பாடநூல் - 1




## குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி

வான்முகில்

திருநெல்வேலி

## அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக் குழந்தைகளுக்கான

# உறுதிமொழி

**அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினராகிய நான்,**

- இந்திய அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் சமத்துவம், சமூக நீதி, சமதர்மம், சனநாயகம், சமயச் சார்பின்மை, பன்மைத்துவம் போன்ற உன்னத மதிப்பீடுகளை உயிர் மூச்சாக மதிப்பேன்.
- சாதி, சமயம், இனம், நிறம், பாலினம், பிறப்பிடம், தகுநிலை போன்ற எவற்றின் அடிப்படையிலும் யாரிடமும் ஒருபோதும் பாகுபாடு காட்டமாட்டேன்.
- 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, அனைவரோடும் சமமாகப் பழகுவேன்.
- எவ்வகையான சுரண்டலையும், ஆதிக்கத்தையும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.
- எந்தச் சூழ்நிலையிலும் வன்முறையில் ஈடுபடமாட்டேன்.
- அரசமைப்பு உறுதிப்படுத்தும் தனிமனித உரிமைகள் உள்ளிட்ட பிற அடிப்படை மனித உரிமைகளை மதித்து நடப்பேன்.
- அரசமைப்பின்படி குடிமக்களுக்கு உள்ள அனைத்து கடமைகளையும் என்னளவில் உளப்பூர்வமாக நிறைவேற்றுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.

**குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி**

**Constitutional Rights Education Programme (CRE)**

## குழந்தைகளுக்கான
## அரசமைப்பு உரிமைக் கல்வி

### பாடநூல் - 1

# இந்தியக் குடிமக்களாகிய நாம்

## WE, THE PEOPLE OF INDIA

வான்முகில்

15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல்
திருநெல்வேலி - 627 011



## பாடநூல் உருவாக்கக் குழு

**ஆக்கம் :**
முனைவர் இ. தேவசகாயம்
முனைவர் லெ. பெர்னாட்

**ஒருங்கிணைப்பு :**
ம. பிரிட்டோ
கா. கணேசன்

**உதவி :**
ச. மோகன்
கா. பிரியா

**பதிப்பு :**
சனவரி 2022

**வடிவமைப்பு :**
எழுத்துக் கலையகம், திருநெல்வேலி.

**வெளியீடு :**
**வான்முகில்**
15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல்
திருநெல்வேலி – 627011
தமிழ்நாடு.

**தொடர்பு கொள்ள :**
94426 18117 | 9994368503

# முன்னுரை

“அரசமைப்பு உரிமைகளைப் பண்பாடாக வளர்த்தெடுப்போம்!” என்ற முழக்கத்தோடு எமது வான்முகில் அமைப்பு குழந்தைகள் மத்தியில் அரசமைப்பு உரிமைக் கல்வியை முன்னெடுத்துள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் மதிப்பீடுகளையும், அது உத்திரவாதப்படுத்துகிற அடிப்படை உரிமைகளையும் குழந்தைகள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்; சமூக அக்கறையும் நல்ல மனித மதிப்பீடுகளும் கொண்ட குடிமக்களாக இவர்கள் உருவாக வேண்டும் என்ற உயரிய நோக்கில் இவ்வுரிமைக் கல்வி கொண்டு செல்லப்படுகிறது. பள்ளிகளில், வகுப்பறைகளில், விடுதிகளில், வீதிகளில், விளையாட்டு அரங்கங்களில் இத்தகைய மதிப்பீடுகள் வெளிப்பட வேண்டும் என்ற பேரார்வத்தால் உந்தித் தள்ளப்பட்டு, இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் வழித்தடத்தை, அரசு அங்கங்களின் செயல்படும் முறையை, அடிப்படைக் கோட்பாடுகளை, நாட்டின் எதிர்காலத்தை, அதன் திசைவழியைத் தீர்மானிக்கும் சாராம்சங்களைக் கொண்டது, அந்த நாட்டின் அரசமைப்புச் சட்டம். இந்திய நாட்டின் அரசமைப்புச் சட்டம் பல உன்னத மதிப்பீடுகளை உயர்த்திப் பிடிக்கிறது. சமத்துவம், சமூக நீதி, சமதர்மம், சனநாயகம், பன்மைத்துவம், சமயச்சார்பின்மை, அடிப்படை மனித உரிமைகள், கூட்டாட்சித் தத்துவம் போன்ற பல்வேறு கொள்கைகளை அச்சாணிகளாகக் கொண்டு நம் அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அண்ணல் அம்பேத்கர் தலைமையில் இயங்கிய அரசியல் சாசன உருவாக்கக் குழு மிகச் சிறப்பான ஒரு அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்து நமக்கு கொடுத்திருக்கிறது. ஏற்றத்தாழ்வு மிக்க இந்தத் துணைக்கண்டம் ஒரு சமத்துவ, சமதர்ம, சமயச்சார்பற்ற, சனநாயகக் குடியரசாக மலர வேண்டும் என்ற பெருங்கனவுகளோடு இவ்வரசமைப்பை இம்மண்ணுக்கு வழங்கியிருக்கிறது. ஆனால் இந்த அரசமைப்புச் சட்டத்தின் அம்சங்களும் அடிப்படைக்கூறுகளும் பெரும்பான்மை மக்களை இன்னும் சென்றடையவில்லை என்பது தான் நிதர்சனமான உண்மை. இச்சூழலில் தான் அரசமைப்பு உரிமைக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து இதனை குழந்தைகள் மத்தியில் கொண்டு செல்ல எமது அமைப்பு முன்வந்திருக்கிறது.

பகைமையும், வெறுப்பும், ஏற்றத்தாழ்வுகளும், பாகுபாட்டு எண்ணங்களும் மக்களை பல்வேறு கூறுகளாகத் துண்டாடி, சமூக அமைதியை சீர்குலைக்க முனையும் இன்றையச் சூழலில், சமத்துவச் சிந்தனைப் போக்குகளும், சனநாயக நெறிமுறைகளும் வாழ்வியல் கூறுகளாக மாற வேண்டும். இத்தகைய பின்னணியில் குழந்தைகளிடம் இயல்பாக இருக்கக்கூடிய நற்பண்புகளை, மதிப்பீடுகளை மென்மேலும் வளர்த்தெடுக்கவும், அவற்றை அரசமைப்பு உரிமைகளின் கண்ணோட்டத்தில் அணுகுவதற்குமான ஒரு தளமாக இக்கல்வி பயன்படும்.

கடந்த ஆண்டே தொடங்கப்பட வேண்டிய இத்தகைய பெருமுயற்சி கொரோனா பெருந்தொற்றுச் சூழலாலும், பொது முடக்கங்களாலும் முழுமையாக நடைமுறைப்படுத்த இயலா நிலை உருவாகியது. இதற்கான பாடநூல் தயாரான நிலையிலும், பள்ளிகள் திறக்கப்படாததால் இத்திட்டத்தை முறையாகக் கொண்டு செல்வதில் பல சிரமங்கள் இருந்தன. பள்ளிகளில் மட்டுமல்லாமல், வீதிகளிலும் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு இக்கல்வியை கொண்டு செல்லும் முயற்சியை வான்முகில் அமைப்பு முனைப்போடு மேற்கொண்டு வருகிறது. தமிழகம் மற்றும் புதுவையில் 17 மாவட்டங்களில் 125 இடங்களில் 10 குடிமைச் சமூக அமைப்புகளின் உதவியோடு கடந்த ஆண்டு அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களைத் தொடங்கியது.

ஆறு, ஏழு, எட்டு ஆகிய வகுப்புகளில் படிக்கும் குழந்தைகளை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள இப்பாட நூல் மிகவும் எளிமையாகவும், பல்வேறு செய்முறைப் பயிற்சிகள், கதைகள், வரலாற்று மற்றும் உண்மை சம்பவங்கள், கலந்துரையாடல்கள், குறிப்புகள் மூலம் குழந்தைகளுக்குப் புரியும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டம், பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்கள் போன்றவற்றில் இடம் பெறும் முக்கியமான உரிமை சார்ந்த பிரிவுகள் பாடநூலில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

எட்டுப் பாடங்களை உள்ளடக்கிய இந்த முதல் பாடநூல் “இந்தியக் குடிமக்களாகிய நாம்” என்ற தலைப்பில் ஆறாம் வகுப்பு பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்காக எளிமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் உருவாக்கத்தில் பல்வேறு கல்வியாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சமூக அக்கறை கொண்ட ஆசிரியப் பெருமக்கள் ஆக்கப்பூர்வமாக பங்கெடுத்ததை இங்கு நன்றியோடு குறிப்பிட வேண்டும். மனித உரிமைக் கல்வி நிறுவனத்தின் இயக்குனராக 15 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய பேராசிரியர் இ.தேவசகாயம் இப்பாடநூல் வெளிவர வித்திட்டவர். முனைவர். லெ.பெர்னார்ட் இப்பாடநூலை உருவாக்கி அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கியவர். இது நூலாக வெளிவருவதற்கும், இதனை வடிவமைப்பதற்கும், செழுமைப்படுத்துவதற்கும் பல்வேறு வகைகளில் தொடர்ச்சியாக பங்காற்றிய இத்திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. கா.கணேசன், உறுதுணையாக இருந்த மாநில துணை ஒருங்கிணைப்பாளர் திருமிகு. க.பிரியா, திரு. ப. இராஜன், மெய்ப்புத் திருத்தத்தில் உதவிய திரு. ச.மோகன், முதற்கட்ட வடிவமைப்பில் உதவிய திரு.ஜெயராமன், திரு.ஜெயக்குமார், கருத்துக்கள் வழங்கிய அனைத்துக் களப்பணியாளர்கள், அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற நெறியாளர்கள் மற்றும் வான்முகில் பணியாளர்கள் ஆகியோருக்கும் எம் நன்றி. குறிப்பாக 17 மாவட்டங்களில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களைத் தொடங்கி எம்மோடு சிறப்பாக வழிநடத்திவரும் குடிமைச் சமூகக் குழுக்களின் இயக்குநர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

இக்கல்வித்திட்டத்திற்கு ஊக்கமாக அமைந்து எங்களுக்கு பல்வேறு வகைகளில் வழிகாட்டி இக்கல்வியை சிறப்பாக கொண்டு செல்ல உதவி வரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தரும், எமது மாநில ஆலோசனைக் குழுவின் தலைவருமான முனைவர் வே.வசந்திதேவி அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி. இப்பாட நூலை வெளிக்கொண்டு வர அதன் ஆரம்பக் கட்டத்திலிருந்து கருத்துக்களை வழங்கி எங்களுக்கு ஆதரவு நல்கிய திருமிகு. கண குறிஞ்சி, பேரா. அ. ஜான் பீட்டர், திருமிகு.ஓவியா, திருமிகு. சுபத்திரா, அருள்முனைவர். ஜான் கென்னடி மற்றும் ஆசிரியர்கள் திரு.தமிழாசான், திருமிகு.சாந்தசீலா, திருமிகு.சொர்ணலதா, திருமிகு.சாந்தி உளிட்ட அனைவருக்கும் வான்முகில் அமைப்பு சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோல ஆக்கப்பூர்வமான கருத்துக்களை வழங்கிய மனித உரிமைக் கல்வி ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகள். இப்பாட நூலின் வடிவமைப்பில் கூடுதல் கவனம் எடுத்துக் கொண்டு மிகச் சிறப்பாக வடிவமைத்துள்ள எழுத்து கலையகம் நிறுவனர் திரு. திருநாவுக்கரசு, உதவியாக இருந்த திரு.வர்கீஸ் ஆகியோருக்கும் எம் நன்றி.

**ம. பிரிட்டோ**
திட்ட இயக்குனர்
அரசமைப்பு உரிமைக் கல்வி
வான்முகில்

அரசமைப்பு உரிமைக் கல்விக்கென உருவாக்கப் பெற்றுள்ள இவ்வழிகாட்டி நூலினை உரியோர் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்வடைகிறேன். உரிமைக் கல்வி ஒரு பாடநூல் கல்வியாகவோ, வகுப்பறைக் கல்வியாகவோ, மனப்பாடம் செய்து ஒப்புவிக்கச் செய்யும் தேர்வு சார்ந்த கல்வியாகவோ இருக்க முடியாது என்பதில் நாங்கள் தெளிவாக உள்ளோம். எனினும் மானுடர்க்குரிய கல்வியை வெறும் வாய்மொழிக் கல்வியாகச் சுருக்கி கற்போரின் அறிதிறனை சோதித்தல் முறையன்று என்பதனால் இக்கையேடு.

மானுட உரிமைகள் மானுடர் அனைவர்க்கும் உரியன. உரிமைகளே மானுடத்தின் உயிர்ப்பண்பு எனப் போற்றப்படுகின்ற நிலையில், இவ்வுரிமைகளைக் காக்க வரலாற்றில் தோன்றிய உயர் மனிதர்கள் பலர்! இவர்கள் எழுதிச் சமைத்த ஆவணங்களும் பல! இன்னும் தேசங்களின் விரிவாக்கத்தில் காப்பரண்களாய் தோன்றிய அரசியல் அமைப்புச் சட்டங்கள், ஊர் கூடி தேரிழுத்தல் எனும் கருத்தாக்கத்திற்கு உருகொடுத்திட முயன்றதன் விளைவாய் உலகோர் ஒருங்கிணைந்து உருவாக்கிய அகில உலக மனித உரிமைப் பிரகடனம், தொடர்ந்து உருவாக்கப்பட்ட மனித உரிமைச் சாசனங்கள், உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் என்பனவெல்லாம் மனித உரிமைகளை வென்றெடுக்கும் கவசங்களாயின எனினும் சர்வதேச சமூகங்களில் இக்கவசங்கள், மனித உரிமைப் பாதுகாப்பில் மிகப்பெரிய சலனங்களை ஏற்படுத்திய நிலையில், மனித உரிமைகளை ஒரு கலாச்சாரமாக வளர்த்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் உருவானதே மனித உரிமைக் கல்வி. மேற்கண்ட மனித உரிமைக் காப்புக் கவசங்கள் உரிய விளைவைத் தரா நிலையில், அய்க்கிய நாட்டவை மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகளை (1995 - 2005) அறிவித்தது. சமூகத்தின் அனைத்து தரப்பினர்க்கும் மனித உரிமைகளைப் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டு செல்லும் வகையில் விரிவான திட்டங்களை வகுத்தது. இத்திட்டத்தை உளப்பூர்வமாக ஏற்று, நடைமுறைபடுத்துவதாக ஏற்றுக் கொண்ட நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. மனித உரிமைக் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் இப்போது அறிமுகமாகவிருக்கும் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டமும் அமைகிறது.

அரசமைப்பு என்பது வெறும் சட்டத் தொகுப்பு அல்ல. அரசமைப்பு ஒரு நாட்டின் அடையாளம். ஒரு நாடு தான் செல்லும் வழியைத் தீர்மானிக்கும் ஆற்றல் கொண்டது. ஒரு நாட்டின் பண்பு இது. எழுத்து வடிவிலான இவ்வமைப்பு உள்ளடக்கிய இதன் பண்புகள் மக்கள் மயமாதலில்தான் இதன் வெற்றியிருக்கிறது என்பதனை அனைவரும் அறிவர்.

சட்டப் புத்தகங்களிலும், நீதிமன்ற ஆவணங்களிலும் உள்ளடங்கிப் போன உரிமைக் கூறுகளை குடிமைச் சமூகங்களுக்கும், மக்களோடு எப்போதும் களமாடுவோர்க்கும், பள்ளிக் குழந்தைகளுக்கும் கொண்டு செல்வதும் இதன்மூலம் அரசமைப்பு தரும் உரிமைச் சட்டங்களை வாழ்வறமாக மாற்றுவதுமே நோக்கமாகும்.

அரசமைப்பு உரிமைகளை வெறும் பாடத்திட்டத்துள் அடக்கிவிட முடியாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். கற்றல், கற்பித்தல் எனும் வளமையான முறையைத் தாண்டி, வாழ்வியலோடு இயைந்த ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பதால், உரிமைகள் மதிப்பீட்டின் அடிப்படையில் தரப்பட்டுள்ளன. இப்பாடங்களை உற்று நோக்குவோர், இப்பாடங்களை வெறும் மதிப்பீட்டுக் கல்வியாகப் பார்க்க நேரலாம். தரப்பெறும் மதிப்பீடுகளின்

பின்னணியில் அரசியல் நோக்கும் இருப்பதைக் காண இயலும். கற்கவிருக்கும் மாணாக்கர், சமூக ஆர்வலர், குடிமைச் சமூகக் குழுக்கள் அனைவரும் ஏற்கும் வகையில், பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இனிவரும் காலம், மக்களின் காலமாக, அரசமைப்பு உறுதி செய்யும் சனநாயக, சமதர்ம, சமயச்சார்பற்ற கோட்பாடுகளைத் தூக்கிப் பிடிக்கும் காலமாக அமைதல் வேண்டும் என்பதே எம் அவா.

இக்கையேடு உருவாக துணை நின்ற அனைத்து நண்பர்களையும் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம். வான்முகில் முன்னெடுத்த இம்முயற்சியை வரலாறு எப்போதும் நினைவு கொள்ளும். இக்கையேடு செம்மையுறும் வழியில் துணை நின்ற முனைவர். லெ. பெர்னாட் அவர்களுக்கும் அவரோடு தோள் கொடுத்த தோழர்களுக்கும் நன்றி.

இக்கையேடு ஒரு முடிவல்ல, ஒரு துவக்கமே என்ற நிலையில் இப்பணி தொடர வேண்டி ......

**முனைவர் இ. தேவசகாயம்**
தலைவர், பாடத்திட்ட குழு,
அரசமைப்பு உரிமைக் கல்வி
வான்முகில்.

# பாடநூல் அறிமுகம்

**அன்புடையீர்,**

வணக்கம்

அரசமைப்பு உரிமைக் கல்வி எனும் இவ்வுரிமைக் கல்வியை ஆறாம் வகுப்பு குழந்தைகளிடமிருந்து இந்தக் கல்வியாண்டில் தொடங்குகிறோம்.

## உரிமைகளைக் கற்பிக்க முடியுமா?

கற்பிக்கப்பெறும் உரிமைகளைக் குழந்தைகளால் புரிந்துகொள்ள முடியுமா? என்ற கேள்வியால் மூன்று இயல்களில் எட்டுப் பாடங்களை இப்பாடநூல் கொண்டுள்ளது. முதல் இயலில், மானிட உரிமைகளுக்கான பின்புலத்தை அலசுகிறோம். உரிமைகள் எங்கேயோ தோன்றுவன அல்ல. மாறாக இவை இயல்பானவை; உடன்பிறந்தவை; அனைவர்க்குமானவை. மனித ஏக்கங்கள் இயல்பானவை. எனவே முதல் பாடப்பகுதியில் மானிடர்க்குரிய இயல்பான மனித ஏக்கங்கள் பற்றிப் பேசுகிறோம். மனிதனின் அடிப்படையான தேவைகளைப் பற்றி உரையாடவுள்ளோம்.

மனிதர்கள் இயல்பாகவே சமூகமாக வாழ்பவர்கள். எனவேதான் ‘‘மனிதனை ஒரு சமூக விலங்கு’’ என்பர். மனிதன் வாழும் இச்சமூகம் ஒற்றைச் சமூகம் அன்று. மாறாக பல்வேறு வேறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு பன்மைச் சமூகமாகும். இப்பன்மைச் சமூகத்தில் வாழும் மனிதர்களின் மாண்பு இயல்பானது; இயற்கையானது. மனித ஏக்கங்கள், சமூக வாழ்வு, பன்மைச் சமூகம், மனித மாண்பு ஆகிய இந்நான்கும் மனிதனின் இயல்பான பண்புகள்.

## இவ்வியல்பான பண்புகள் காக்கப் பெறுகின்றனவா?

இவ்வியல்பான பண்புகள் ஏன் மதிக்கப்படுவதில்லை? பல்வேறு வகைகளில் ஏன் குறுக்கும் நெடுக்குமாய் மீறப்படுகின்றன என்பதைத்தான் இரண்டாம் பாடப்பகுதியில் பேசுகிறோம். மீறல் ஏற்பட முன்தீர்மானம் அல்லது முன்முடிவு மிக முதன்மைக் காரணியாக உள்ளது. மனதில் வளரும் இம்முன்தீர்மானக் கருத்துகளின் விளைவாகப் பிறரை நாம் வார்த்தைகளால் புண்படுத்துகிறோம். செயல்களால் துன்புறுத்துகிறோம்; இதன் விளைவாக இயல்பான சமூகம் சிதைவுறுகிறது; பிளவுறுகிறது.இயற்கையான பண்புகளை உள்ளடக்கிய இப்பன்மைச் சமூகத்தைக் காக்கும் வழி என்ன? காக்கும் வகை என்ன?

மேற்கண்ட பண்புகள்தான் அரசமைப்பில் உரிமைகளாகின்றன. மனித வாழ்க்கைக்குத் தேவையான மெய்யியல், நற்பண்புகள் ஆகியவை அரசமைப்பில் சட்டவடிவு பெற்றுள்ளன.

அவை தோன்றியவை அல்ல. மாறாக

நம்முள் ஏற்கெனவே உள்ளவை. அவை வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதை நோக்கியே இந்த அரசமைப்பு உரிமைக் கல்வி.

**பாடநூல் உருவாக்கக் குழு**

அரசமைப்பு உரிமைக் கல்வி

# உள்ளடக்கம்


பக்கம் எண்

**அ. இயல்புகள்**

1. மனித ஏக்கங்கள் 01
2. சமூக வாழ்வு 11
3. பன்மைச் சமூகம் 20
4. மனித மாண்பு 29

**ஆ. முரண்கள்**

5. முன்தீர்மானம் 41
6. புண்படுத்தும் வார்த்தைகளும் துன்புறுத்தும் செயல்களும் 51
7. பிளவுபடும் சமூகம் 68

**இ. அரண்கள்**

8. இந்தியக் குடிமக்களாகிய நாம் 78



# 1. மனித ஏக்கங்கள்

**மனித வாழ்நிலையில் ஏக்கத்தையும் விருப்பத்தையும் எளிதில் புறந்தள்ளிவிட முடியாது**

– ஜார்ஜ் எலியெட்

**நோக்கங்கள்:**

- மனிதர்களின் முதன்மை உணர்வான “ஏக்கங்கள்” பற்றி அறிந்து கொள்ளல்.
- ஏக்கங்கள் அனைவர்க்கும் உரியவை என்பதைப் புரிந்து கொள்ளல்.
- நமது முதன்மைத் தேவைகள் எவ்வாறு “ஏக்கங்களாக” மாறுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளல்.

**குழந்தைகளே!**

இப்பாடத்தில் மனிதர்களின் மிக முதன்மை உணர்வான "ஏக்கங்கள்" பற்றித் தெரிந்து கொள்வோமா? நமது தேவைகள் நிறைவேறாதபோது அவை ஏக்கங்களாக மாறுகின்றன. மனித ஏக்கங்களை முழுமையாகப் புரிந்துகொள்ள கீழ்க்கண்ட உரையாடலைக் கவனமாகப் படிக்கவும். படித்தபிறகு உங்களுக்கும் இதுபோன்ற ஏக்கங்கள் உள்ளனவா என்று சிந்திக்கவும்.

குழந்தை : அம்மா !அம்மா .....!

அம்மா : ஏம்மா கத்துற?

குழந்தை : நம்ம தோட்டத்தில இருந்த முள்ளுச் செடியை வெட்டினேல்ல !

| | | |
|---|---|---|
| அம்மா | : | ஆமா, அதுக்கென்ன? |
| குழந்தை | : | அந்தச் செடி மறுபடியும் துளிர்த்திருக்கும்மா ! |
| அம்மா | : | ஐயய்யோ! அதை உடனே வெட்டணுமே! |
| குழந்தை | : | வாம்மா, வெட்டுவோம். (அம்மா அரிவாளை எடுத்துச் சென்று வெட்டுகிறாள். சிலநாட்கள் கழித்து தோட்டத்திற்கு விளையாடச் சென்ற குழந்தை, செடி மீண்டும் துளிர்த்திருப்பதைப் பார்த்து வியக்கிறாள். தாயிடம் ஓடி வருகிறாள்.) ஏம்மா, இந்தச் செடி வெட்ட வெட்டத் துளிர்க்குது? |
| அம்மா | : | அது அப்படித்தான் |
| குழந்தை | : | சொல்லும்மா ! (சிணுங்குகிறாள்) |
| அம்மா | : | அந்தச் செடிக்கும் உயிர் இருக்கு. அதனாலதான் |
| குழந்தை | : | உயிர் இருக்கா ?! |
| அம்மா | : | உயிர் இருப்பதால்தான் சாகக்கூடாதுன்னு நினைக்குது |
| குழந்தை | : | ஏன் செத்துப் போகக் கூடாதுன்னு நினைக்குது?அந்தச் செடியால யாருக்கும் எந்தப் பயனுமில்லையே ! |
| அம்மா | : | நமக்குப் பயனில்லை தான். ஆனால், அந்தச் செடிக்கும் உயிர் இருக்கே. |
| குழந்தை | : | அதனால..... |
| அம்மா | : | அதுக்கும் உயிர் இருப்பதால்தான் உயிர் வாழணும்னு ஏக்கமிருக்கு! |
| குழந்தை | : | இந்த ஆசை முள்ளுச் செடிக்குமட்டுந்தான் இருக்கா. |
| அம்மா | : | கண்ணு ! உனக்கு ரொம்ப அறிவு. என்னமா கேள்வி கேட்கிற? |
| அப்பா | : | என்னம்மா செல்லம்? |
| குழந்தை | : | நம்ம தோட்டத்தில ஒரு முள்ளுச்செடி இருந்துச்சுல்ல, அதைப் போனவாரம் அம்மா வெட்டினாங்க. இன்னைக்கு அது திரும்பவும் துளிர்த்திருக்குப்பா அதுதான் நமக்கு வேண்டாமே - ஏம்மா திரும்பவும் வளருதுன்னு கேட்டா, அம்மா சொல்றாங்க, அதுக்கு வாழணும்னு ஆசையிருக்காம். ஏக்கமிருக்காம். அது என்னப்பா ஏக்கம்? ஆசை? |
| அப்பா | : | உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் வாழணும்னு ஆசையும் ஏக்கமும் இருக்குமா. இந்த ஏக்கம் எல்லார்க்கும் பொதுவானதுமா ! |
| குழந்தை | : | ஏக்கம் இயற்கையானதுன்னா, நாம அதை வெட்டுறது தப்புதானப்பா. |
| அம்மா | : | சரியாச் சொன்ன ! |

| | | |
|---|---|---|
| குழந்தை | : | இந்த ஏக்கம் செடிகளுக்கும் உண்டுன்னு சொன்னா, மனுசங்களுக்கும் இருக்கும் தானப்பா? |
| அப்பா | : | கட்டாயமாக எல்லோர்க்கும் உண்டு |
| குழந்தை | : | உனக்கு ஏக்கம் உண்டாம்மா? |
| அம்மா | : | எனக்குமுண்டு, உன் அப்பாவுக்குமுண்டு, உனக்குமுண்டு |
| குழந்தை | : | எனக்குமா? எனக்கு ஏக்கமே இல்லைம்மா! |
| அப்பா | : | இல்லையில்லை! உனக்குமுண்டு! |
| குழந்தை | : | அது எப்படிப்பா? |
| அப்பா | : | அம்மாவும், அப்பாவும் நீ கேட்டதெல்லாம் வாங்கித் தரணும்னு நினைக்கிறேல்ல? உன்னைத் திருவிழாவுக்குக் கூட்டிட்டுப் போகணுமுன்னு நினைக்கிறேல்ல? மிட்டாய் வாங்கித் தரணுன்னு நினைக்கிறேல்ல, இதெல்லாம்தான் ஆசை. இந்த ஆசை எல்லாம் நிறைவேறணும் என்ற ஏக்கமிருக்கத்தானே செய்யும். |
| குழந்தை | : | இதுதான் ஏக்கமா! |
| அப்பா | : | இவை மட்டுமல்ல, சிலருக்கு நிறைய படிக்கணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்கு நல்லா விளையாடணும்னு ஏக்கம் இருக்கும். சிலருக்கு நோய் ஏதும் இல்லாமல் இருக்கணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்கு அம்மா அப்பா அன்பாக இருக்கணும்னு ஏக்கமிருக்கும். சிலருக்குச் சுதந்திரமா இருக்கணும்னு ஏக்கமிருக்கும். இப்படி எத்தனையோ ஏக்கங்கள் இருக்கு. |
| குழந்தை | : | இதுக்கெல்லாம் நாம என்னப்பா செய்யுறது? |
| அப்பா | : | நாம மனுசங்கதானே, அதனால நம்ம ஏக்கங்களைப் பற்றி மட்டும் கவலைப்படாமல், பிறருடைய ஏக்கங்களைப் பற்றியும் கவலைப்படணும். அவங்க ஏக்கங்களை நாம் புரிஞ்சுக்கணும். |
| குழந்தை | : | பக்கத்துவீட்டு மல்லிகாவின் அப்பாவும் அம்மாவும் காலையிலேயே வயலுக்கு வேலைக்குப் போவதால் அவளுக்குக் காலையில சரியான உணவு கிடைப்பது இல்லை. அதனாலேயே அவ உடம்பு மெலிந்திருக்கு. காலையில நல்ல உணவு வேண்டும் என்ற ஏக்கம் மல்லிகாவுக்கு இருக்கத் தானே செய்யும்! |
| அம்மா | : | ஆமாம். கட்டாயமிருக்கும். இதைத்தான் வாழ்வுக்கான ஏக்கம்னு சொல்றோம். நாம சத்தான உணவை நாள்தோறும் சரியாக எடுத்துக் கொண்டால்தான் நாம் நலமுடன் இருப்போம். |

குழந்தை : அதுசரிம்மா. இந்த மாதிரி வாழ்வுக்கான ஏக்கங்கள் எப்போவெல்லாம், எப்படியெல்லாம் நம் மனசுக்குள்ள வெளிப்படும்னு சொல்லுங்கப்பா.

அம்மா : நல்ல கேள்வி. இந்த ஏக்கம் நாம் பொறந்ததுலேயிருந்து இருக்குது. எப்போதுமே நமக்குள்ளேயே இருக்கும். ஆனா, ஒரு மனிதர் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போது அது தெளிவாக வெளிப்படுறதைப் பார்க்கலாம். இதோபாரு, சில செய்தித்தாள்கள் வச்சிருக்கேன். அவற்றில் கொடுக்கப்பட்டுள்ள சிலசெய்திகளை நான் படிக்கிறேன். கவனமாக் கேளு. நான் சொன்னது உனக்குப் புரியும்.

## ஏக்கம் -1

**திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளத்தைச் சேர்ந்த இளம் பெண்:** "என் அப்பா எப்போதுமே குடிச்சிட்டுதான் இருப்பாரு. வீட்டுக் கஷ்டத்தால அஞ்சாப்பு வரைக்கும்தான் படிக்க முடிஞ்சது. அப்பத்தான் மில் வேலைக்குக் கூட்டிட்டுப் போனாங்க. மூணு வருஷம் வேலை பார்த்தா 50,000 தருவதாச் சொல்லிக் கூட்டிட்டுப் போனாங்க. வேலை பாக்கும்போதே, தையல், கம்யூட்டர், கைத்தொழில் கத்துத் தர்றதாச் சொன்னாங்க. ஆனா, இதுவரைக்கும் எதுவுமே சொல்லித்தரலை. முதல் ஆறு மாசம் எந்தப் பிரச்சனையும் இல்ல. அப்புறம், எட்டுமணி நேர வேலையைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கூட்டி 16 மணி நேரம் வேலை பார்க்கச் சொன்னாங்க.



ஒருநாள் கூட எனக்கு விடுமுறை கொடுக்கமாட்டாங்க. உடம்புக்கு முடியல என்றாலும் வேலைக்குக் கண்டிப்பாபோய் ஆகணும். தங்குறதுக்கு சரியான இடவசதி செய்து தரல. சாப்பிடக்கூட நேரம் இருக்காது. பஞ்சுமில்

என்பதால் சின்னச் சின்ன பஞ்சு மூக்கு வழியாக உள்ளே போனதால் மூச்சு விட சிரமமா இருக்கு. கல்யாணத்துக்குப் பணத்தைச் சேர்க்கலாம் என்ற கனவுல வேலைக்குப் போனால் நோயைத்தான் வாங்கிட்டு வந்திருக்கோம். நாலரை வருசம் வேலை பார்த்து வெறும் 38,000 ஆயிரம் ரூபாய்தான் சம்பாதிக்க முடிந்தது. இப்போ, எங்க வாழ்க்கையையே இழந்திட்டு நிற்கிறோம்".

**(பஞ்சாலையில் வேலைசெய்த பாதிக்கப்பட்ட பெண்களின் மாநாட்டில் பகிர்ந்து கொள்ளப்பட்ட உண்மைச் சம்பவம்)**

### உங்களுக்குத் தெரியுமா?




உலகில் பிறக்கும் மனிதர் அனைவரும் சுதந்திரத்தோடும், தன்மரியாதையோடும் உள்ளார்ந்த உரிமைகளோடும் பிறக்கின்றனர். இவர்கள் அனைவருமே பகுத்தறிவும் மனசாட்சியும் இயல்பிலேயே பெற்றவர்கள். எனவே மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரத்துவ உணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.

பிரிவு-1, அகில உலக மனித உரிமைப் பிரகடனம் - 1948

### சிந்தனைக்கான கேள்விகள்

- பஞ்சாலைகளில் வேலை செய்யும் இளம்பெண்கள் எவ்வகையான சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள்?
- உங்கள் பகுதியில் பெண் குழந்தைகள் வேலைக்குச் செல்கிறார்களா? ஆம் எனில் எவ்வகையான வேலைகளுக்குச் செல்கிறார்கள்?

## ஏக்கம் 2 அய்லான்

சிரியா நாட்டில் ஐந்தாண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்தது. அதனால் மக்கள் பலர் கொல்லப்பட்டனர். உயிருக்குப் பயந்து வேறுநாடுகளுக்கு அகதிகளாகத் தஞ்சம் புகுவது நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. அவ்வகையில் சிரியாவில் முடிதிருத்தும் பணி செய்துவந்த அப்துல்லா குர்தி என்பவர் தன் இரு மகன்கள், மனைவி மற்றும் 14 பேருடன் துருக்கி வழியாக கிரீஸ் நாட்டிற்குப் படகில் சென்றார். அப்போது படகு திடீரென மூழ்கியது. அனைவரும் கடலில் விழுந்தனர். இது பற்றி அப்துல்லா கூறியதாவது, "கோஸ்தீவில் இருந்து 4 கி.மீ. தொலைவில் எங்கள் படகு வந்தபோது, பேரலையால் படகு தூக்கி வீசப்பட்டது. நாங்கள் அணிந்திருந்த லைப் ஜாக்கெட் போலியானது. அதனால் அனைவரும் தண்ணீரில் மூழ்கினோம்".

“படகின் ஒரு பகுதியைப் பிடித்தபடி நானும் என் மனைவியும் குழந்தைகளைக் காப்பாற்ற கடைசிவரை கடுமையாகப் போராடினோம். முதல் ஒருமணி நேரத்தில் என் மூத்த மகன் காலிப் எனது கைகளை விட்டுச் சென்றான். இரண்டாவது மகன் அய்லானையாவது காப்பாற்றிவிடலாம் என்று அவனைத் தண்ணீருக்கு மேலே தூக்கிப் பிடித்திருந்தேன். அவனைக் காப்பாற்ற எவ்வளவோ போராடினேன். ஆனால் அவனும் எனது கையிலேயே இறந்துவிட்டான். என் மனைவியையாவது காப்பாற்றலாம் என்று நினைத்தேன். அவளும் என்னைவிட்டுப் போய்விட்டாள். எல்லாவற்றையும் இழந்துவிட்டேன். இனிமேல் உலகத்தையே எனக்குத் தந்தால்கூட எனக்கு எதுவுமே வேண்டாம்”.



படகு முழுமையாக மூழ்கி அதில் பயணம் செய்த பலரும் இறந்துவிட்டனர். அவ்வாறு இறந்தவர்களின் உடல்கள் ஒவ்வொன்றாக கடற்கரைகளில் ஒதுங்கின. அவ்வுடல்களில் ஒன்றுதான் அய்லான் என்ற அந்த சிறிய குழந்தை. உலகத்தையே உறைய வைத்த அவன், உலகில் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட மக்களின் சாட்சியாக எப்போதும் இருப்பான்.

### சிந்தனைக்கான கேள்விகள்

- மக்கள் ஏன் ஒரு நாட்டை விட்டு வேறு நாட்டுக்குச் செல்கிறார்கள்?
- அகதிகள் என்பவர்கள் யார்?
- அய்லான் போன்ற சிறு குழந்தைகள் இறக்கக் காரணமென்ன என்பதை வகுப்பறையில் கலந்துரையாடவும்.
- கடலில் மூழ்கியோரின் ஏக்கங்கள் என்னவாக இருந்திருக்கும்?
- தனித்துவிடப்பட்ட தந்தையின் ஏக்கம் என்னவாக இருந்திருக்கும்?

**குழந்தை:**

இந்த இரண்டு செய்திகளைப் படிச்சபிறகு ரொம்ப கவலையா இருக்குப்பா. ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலேயும் எவ்வளவு சிக்கல்கள், போராட்டங்கள், ஏக்கம் இருக்குன்னு இப்பத்தான் புரிஞ்சுதுப்பா.

### உங்களுக்குத் தெரியுமா?

- குழந்தை உழைப்பு எதிர்ப்புப் பிரச்சாரம் (Campaign Against Child Labour), 2020 செப்டம்பர் முதல் நவம்பர் வரை, 24 மாவட்டங்களில் நடத்திய கள ஆய்வில், தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 94 விழுக்காடுக் குழந்தைகள் குடும்பத்தின் பொருளாதாரச் சூழல் மற்றும் அழுத்தத்தால் வேலைக்குச் செல்வதாகத் தெரிவித்துள்ளார்கள்.



- தமிழகத்தில் 28.2 விழுக்காடாக இருந்த குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை கொரோனா நோய்த் தொற்றுக் காலத்தில் 79.6 விழுக்காடாக அதிகரித்துள்ளதாகக் குழந்தைகள் உழைப்பு எதிர்ப்புப் பிரச்சாரம் நடத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

## ஏக்கங்கள் பலவிதம்

உயிர்களுக்கு வாழணுங்கிற ஏக்கம் பொதுவானது என்று பார்த்தோமல்லவா? இந்த உயிர்களுள் மனிதனுக்கு நிறையவே ஏக்கங்கள் இருக்குன்னு உங்களுக்குத் தெரியும். இவை என்னன்னு கண்டுபிடிப்போமா?

### 1. உடல் சார்ந்த ஏக்கம்

எனக்குக் காய்ச்சல் வரக்கூடாது; சளி பிடிக்கக் கூடாது; தலைவலி வரக்கூடாது. கொரோனா நோய்த் தொற்றால் நான் பாதிக்கப்படக்கூடாது. நான் நல்லா வலிமையாக இருக்கணும்.

### 2. பொருளுக்கான ஏக்கம்

எனக்கு என் நண்பனின் சட்டைபோல நல்ல சட்டை வேணும். எனக்கு எல்லா புத்தகங்களும் பள்ளிக்கூடம் திறந்தவுடனே அப்பா அம்மா வாங்கித் தரணும். தினமும் மிட்டாய் வாங்கக் காசு வேணும், கலர் பென்சில் வேணும்.

### 3. உறவுக்கான ஏக்கம்

எங்க அம்மா, அப்பா எங்கிட்ட அன்பாக இருக்கணும். எங்க வாத்தியாரு எங்கிட்ட நல்லாப் பேசணும். என் வகுப்புல உள்ள மத்த மாணவர்கள் எங்கிட்ட நல்லாப் பழகணும்.

### 4. அறிவுக்கான ஏக்கம்

நிறையப் படிக்கணும், நல்லாச் சொல்லித் தருகிற ஆசிரியர் வேணும். எல்லா வகையான புத்தகங்களும் எனக்கு வேணும்.




**5. படைப்பதற்கான ஏக்கம்**

எனக்கு ஓவியம் வரைய ரொம்ப ஆசை. எந்தக் காட்சியைக் கண்டாலும் வரையணும்னு துடிப்பேன். எங்க வீட்ல நான் படம் வரைவதைக் கண்டாலே படிடா, படிடான்னு திட்டுவாங்க. எனக்கு எப்போதும் படம் வரையணும்னுதான் ஏக்கமாயிருக்கு. எனக்குப் பாட்டுப்பாட ஆசை; நல்லா மைக்ல பேச ஆசை.

**6. சமத்துவ வாழ்வுக்கான ஏக்கம்**

எங்கூடப் படிக்கிற பசங்க நிறைய காசு வச்சிருப்பாங்க. எப்படிடா கிடைக்குதுன்னு கேட்டா வீட்ல நோட்டு வாங்கணும்; புத்தகம் வாங்கணும்னு பொய் சொல்லி காசு வாங்கினேன்னு சொல்வாங்க. எனக்கு இதெல்லாம் பிடிக்காது. நான் எப்போதும் உண்மைதான் பேசணும்னு ஆசைப்படுவேன். அதேமாதிரி எங்கூட படிக்கிற பையங்க சிலரு மத்தியானம் சாப்பாடுகூட கொண்டு வருவதில்லை. ஏன்னு கேட்டா வீட்ல கஷ்டமாம். இதைப் பார்க்கும்போது ரொம்ப கஷ்டமாக இருக்கு. ஒருவர் நல்லா சாப்பிடறதும்; இன்னொருவர் பட்டினி கிடப்பதும் ஏன்? இரண்டு பேரும் சமமாக வாழனும்னு எனக்கு ஏக்கமாக இருக்கு. எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கணும்.

**7. சமூக மதிப்புக்கான ஏக்கம்**

14 வயது நிரம்பிய சுகுணாவின் தந்தை தூய்மைப் பணியாளராய் வேலை செய்கிறாரு. “நான் எட்டாம் வகுப்புவரை படித்தேன். அதற்குப் பிறகு போதிய வசதி இல்லாததால் படிப்பை நிறுத்திட்டேன். ஆனால், தொடர்ந்து

படிக்கவேண்டும் என்கிற ஆசை இருந்தது. அதுமட்டுமல்ல, ஒரு மருத்துவராக வேண்டும் என்று கூட ஆசைப்பட்டேன். ஆனா முடியவில்லை". இது சுகுணாவின் ஆசை.

### 8. சுதந்திரத்திற்கான ஏக்கம்

என் பெயர் மீரா. நான் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறேன். என் தம்பி எட்டாம் வகுப்பில் படிக்கிறான். ஒவ்வொரு நாளும் மாலையில் என்னுடைய தம்பி தெருவிலுள்ள நண்பர்களோடு ஓடியாடி விளையாடுவான். ஆனால், என்னை மட்டும் தெருவில் விளையாடப் போகக் கூடாது. வீட்டிலேயே இருக்க வேண்டும்ணு என் அம்மா கட்டுப்படுத்துறாங்க. எனவே, வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்கிறேன். என் தம்பியைப் போல நானும் சுதந்திரமா என் தோழிகளோடு வெளியில் சென்று விளையாட வேண்டும்ணு ஆசையாக இருக்குது.

### உங்களுக்குத் தெரியுமா?

- ஏறக்குறைய 100 கோடிக் குழந்தைகள் பல்வேறு விதமான வறுமைச் சூழலில் எவ்வித அத்தியாவசிய சேவைகளும் கிடைக்காமல் வாழ்கின்றனர்.
- பள்ளிகள் மூடப்பட்ட போது, குறைந்தது 463 கோடிக் குழந்தைகள் இணையவழிக் கற்றலைக் கூட அணுக முடியவில்லை.
- 5 வயதுக்குட்பட்ட 70 இலட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- பள்ளிகள் மூடப்பட்டதால், 37 கோடிக் குழந்தைகள் சத்தான உணவை பெறமுடியாத நிலை.
- கோவிட்-19 காரணமாக, இந்தப் பத்தாண்டு இறுதிக்குள் சுமார் 1 கோடி குழந்தைத் திருமணங்கள் நிகழலாம்.

- 2020 இல் கொரோனா காலக்கட்ட சூழலில் யுனிசெப் பன்னாட்டு அமைப்பின் ஆய்வறிக்கை (https://data.unicef.org/covid-19-and-children)

## பயிற்சிகள்

### 1. புதிய சொற்களைப் பழகுவோம்



உயிர், துளிர்த்தல், சுதந்திரம், வளர்ச்சி, வாழ்வு, உறவு, தேவை, உரிமை, சமத்துவம், மாண்பு, அகதி, ஆசை, ஏக்கம்

### 2. பேசுவோம்!



குழந்தைகளே! உங்களுக்கும் இதுபோன்ற ஏக்கங்கள் இருந்தால் ஒருவர்பின் ஒருவராக வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.

### 3. நடித்துக் காட்டலாமே!



குழந்தைகளே! வகுப்பறையில் குழுவாக அமர்ந்து ஏக்கங்கள் குறித்து கதைகளைத் தயார் செய்து நாடகமாக நடித்துக் காட்டலாம்.

### 4. ஒரு கதை எழுதலாம்



உங்களின் ஏக்கம் அல்லது பிறரின் ஏக்கங்களை ஒரு கதையாக எழுதுங்களேன். எழுதிய கதையை வகுப்பறையில் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும்.

### 5. பாடல் ஒன்றை எழுதிப் பாடவும்



வகுப்பறையில் உள்ள மாணவர்கள் அனைவரும் சமமான குழுக்களாகப் பிரிந்து பலவகையான ஏக்கங்கள் குறித்த பாடலை எழுதிப் பாடவேண்டும்.

### 6. இது என்ன ஏக்கம்?

(எ.கா.) நல்ல சட்டை வேண்டும்

விடை: பொருளுக்கான ஏக்கம்

1) என்னிடம் எல்லோரும் அன்பா இருக்கணும்

விடை : ________ ஏக்கம்

2) நிறையப் படிக்கணும்

விடை : ________ ஏக்கம்

3) தலைவலி, காய்ச்சல் வரக்கூடாது, கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்படக்கூடாது.

விடை : ________ ஏக்கம்

4) என் தோழிகளோடு வெளியில் சென்று விளையாட வேண்டும்.

விடை : ________ ஏக்கம்

**உங்களுக்குத் தெரியுமா?**

- பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் (ஐ.எல்.ஓ) ஆய்வுப்படி, உலகளவில் சுமார் 15.2 கோடிக் குழந்தைகள் குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர், அவர்களில் 7.2 கோடிப் பேர் ஆபத்தான நிலையில் வேலை செய்து வருவதாகத் தெரிவித்துள்ளது.
- இந்தியாவைப் பொறுத்தவரையில் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை பத்துக் கோடியாக உள்ளது. அவர்களில் 5.6 கோடிப் பேர் ஆண் குழந்தைகளாகவும், 4.5 கோடி பேர் பெண் குழந்தைகளாகவும் உள்ளனர்.



# 2. சமூக வாழ்வு

**நாம் வாழும் சமூகத்தில் காணப்பெறும் வறுமை, பொருளாதார நெருக்கடி போன்ற குறைபாடுகளை நேர்செய்து கடந்துசெல்ல நமது சமூக வாழ்நிலையை நமக்குள் கருக்கொள்ளச் செய்ய வேண்டும்**

– முகம்மது யூனுஸ்

**நோக்கங்கள்:**

- சமூக வாழ்வின் தேவைகளைப் புரிந்துகொள்ளல்.
- சமூக வாழ்வின் முதன்மைக் கூறுகளை அறிந்து கொள்ளல்.
- மனிதன் சமூகத்தில்தான் பிறக்கிறான்; வாழ்கிறான்; சமூகத்தில்தான் மடிகிறான் என்பதை உணர்ந்து கொள்ளல்.
- சமூக வாழ்வு இயல்பானது என்பதனை அறிந்துகொள்ளல்.

**குழந்தைகளே!**

இப்பாடத்தில் சமூக வாழ்வு, பன்மைச் சமூகம் ஆகியன பற்றி அறிந்து கொள்ளப்போகிறோம். பாடத்திற்குள் செல்வோமா?

நந்தினியும் வினோத்தும் நகரத்தில் உள்ள ஒரு பள்ளியில் ஏழாம் மற்றும் ஆறாம் வகுப்பு படித்து வருகின்றனர். தேர்வுகள் முடிந்தவுடன் கோடை விடுமுறையில் ஊரில் உள்ள தங்கள் தாத்தா, பாட்டி வீட்டிற்குச் செல்வதற்காகத் திட்டமிட்டனர்.

திட்டமிட்ட பயணநாளும் வந்தது. நீண்டநாட்களுக்குப் பிறகு பெற்றோருடன் ஊருக்குச் செல்வதை நினைத்து இருவரும் மகிழ்ச்சியாக இருந்தனர். அவர்களின் மகிழ்ச்சி முகங்களில் பூரிப்புடன் வெளிப்பட்டது.

தங்கள் தாத்தா பாட்டி வீட்டிற்குச் செல்லும் பேருந்தும் வந்தது. பேருந்தில் ஏறி தங்களுக்கான இருக்கையில் அமர்ந்து கொண்டனர். சற்றுநேரத்தில் பேருந்து நகர ஆரம்பித்தது. வினோத்தும் நந்தினியும் பேருந்தில் நடப்பவற்றைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள்.

அப்போது தாத்தாவின் நண்பர் அப்துல்லா அய்யா அவர்கள் அப்பேருந்தில் ஏறியதைப் பார்த்தவுடன் அவர்களது பெற்றோர் எழுந்து வணக்கம் தெரிவித்தனர். அவரும் வணக்கம் தெரிவித்து தனது இருக்கையில் அமர்ந்தார். அப்துல்லா அய்யாவும் தாத்தாவும் சிறுவயதிலிருந்தே இணைபிரியா நண்பர்கள் என்றும் தானும் அய்யாவின் வீட்டிற்கு அடிக்கடி செல்வேன் என்றும் தனது நினைவுகளை நந்தினியின் அப்பா பகிர்ந்து கொண்டார்.



பேருந்து அடுத்த நிறுத்தத்தில் நின்றது. பயணிகள் சிலர் இறங்கினர். அப்போது காய்கறி விற்கும் செல்லம்மா பேருந்தில் தட்டுத்தடுமாறி ஏற, அவருடைய சுமைகளைச் சிலர் தூக்கிப் பேருந்திற்குள் வைத்தனர். வயதானாலும் உழைத்து வாழவேண்டும் என்ற உறுதியுடன் நாள்தோறும் காய்கறி விற்று வரும் செல்லம்மாவைப் பற்றி சிலர் பெருமிதத்துடன் பேசியதைக் குழந்தைகள் கவனித்து வந்தனர்.

நந்தினியும் வினோத்தும் வேடிக்கைப் பார்த்தபடி வந்தனர். ஆங்காங்கு சிற்றூர்களைப் பேருந்து கடந்து சென்றது. அப்போது நந்தினி தனது அம்மாவிடம் ஊர்கள் எப்படி உருவானது என்றும் அங்கு மக்கள் எப்படி வந்தார்கள் என்றும் வினவினாள்.

அம்மா : மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை அறிய நாம் கொஞ்சம் பின்னோக்கிப் பார்க்கலாமா?

வினோத் : பார்க்கலாம்மா.

அம்மா : ஆதிகால மனிதர்கள் குகைகளிலும், மரங்களிலும் வாழ்ந்து வந்தனர்.

நந்தினி : அவர்கள் இப்போதுபோல ஒரே இடத்தில் வாழவில்லையா?

அம்மா : இல்லை. அவர்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்து கொண்டே இருந்தார்கள்.

வினோத் : எதற்காக இடம்பெயர்ந்தார்கள் அம்மா?

அம்மா : தண்ணீர், உணவு, பாதுகாப்பு போன்ற தேவைகளுக்காக இடம்பெயர்ந்து கொண்டே இருந்தார்கள்.

நந்தினி : ஆதிகால மனிதர்கள் எவ்வகையான உணவுகளை உண்டு வாழ்ந்தனர்?

அம்மா : விலங்குகளை வேட்டையாடியும், மீன்கள், கிழங்குகள், பழங்கள் இவற்றுடன் உண்ணத் தகுந்த தாவரங்களின் தண்டுகள் போன்றவற்றையும் உண்டு வாழ்ந்தார்கள்.

வினோத் : உணவு போன்ற பிற தேவைகளுக்காகத் தொடர்ந்து இடம் பெயர்ந்து கொண்டேதான் இருந்தார்களா?

அம்மா : இல்லை, ஒருகட்டத்தில் நிலையான வாழிடங்களை அமைத்து வாழத் தொடங்கினர். சிறுசிறு குழுக்களாக வாழத் தொடங்கினர். சிறு குழுக்கள் இணைந்து ஒரு சமூகமாக வாழத் தொடங்கினர்.

நந்தினி : சிறு குழுக்களாக வாழத் தொடங்கி சமூகமாக மாறிய அவர்களுக்குள் சண்டையே நடக்கவில்லையா?

அம்மா : அவர்களது குழுக்களுக்குள்ளும் பிறக் குழுக்களோடும் மோதல்கள் அவ்வப்போது நடைபெற்று வந்தன.



வினோத் : இன்றும் அதுபோன்ற மோதல்கள் நடைபெறுகின்றனவா?

அம்மா : நடைபெறவில்லை என்று சொல்லமுடியாது. ஆனால், மனித நாகரிகம் வளர்ந்த இந்தக் காலத்தில் மோதல்கள் ஓரளவு குறைந்து நல்லிணக்கத்துடன் வாழும் சமூகமாக மாறியுள்ளது.

நந்தினி : எப்படி அம்மா?

அம்மா : நாகரிகச் சமூக வாழ்வின் அடிப்படையே பிறருடன் இணக்கமாகச் செல்லுதலாகும். ஆக, நாம் எப்போதும் பிறரைச்சார்ந்தே ஒரு சமூகமாக வாழ்கிறோம். பிறந்தது முதல் நமது தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் ஒருவருக்கொருவர் இணக்கமாக இருக்கிறோம். எப்போதும் பிறருடன் இணையாமல் நம்மால் வாழ இயலாது.

வினோத் : சமூக வாழ்வு பற்றிக் கொஞ்சம் புரியும்படி சொல்லுங்கள் அம்மா?

அம்மா : நம் குழந்தைப் பருவம் முதல்

- நமது பெற்றோர், உடன் பிறந்தவர்கள், உறவினர்கள் என முழுமையாக பிறரைச்சார்ந்தே வாழ்கிறோம்.
- பிறகு, தெருவில் ஒத்த வயதுடைய நண்பர்கள், நம் வகுப்பு மாணவர்கள், விளையாட்டுத் திடல்கள், மன்றங்கள், சமய நிகழ்வுகள் எனப்பல சூழ்நிலைகளில் பிறருடன் இணைந்தே நமது வாழ்க்கை செல்கிறது.
- பிற மனிதர்களுடன் கலந்துரையாடாமல் நம்மால் தனித்து இயங்க இயலுமா?

வினோத் : முடியாது அம்மா

அம்மா : ஆமாம். அப்பா இதைப் பற்றி தெளிவா சொல்றாரு கேளுங்க.

அப்பா : நாம அனைவரும் சமூக வாழ்க்கை மேற்கொள்பவர்கள் தானே! நம்மால் தனித்து இருக்க முடியுமா? முடியாது தானே! அப்படி இருக்கும்போது ஒருவர் குற்றம் செய்தால் என்ன செய்கிறார்கள் என்று தெரியுமா?

நந்தினி : ஆம், தெரியும். கைதுசெய்து சிறையில் அடைப்பாங்க. ஏன் சிறையில் அடைப்பாங்க?

வினோத் : சிறைத் தண்டனை. அவ்வளவுதான் தெரியும் அப்பா.

**அப்பா** : குற்றம் செய்தவர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி சமூகத்திலிருந்து விலக்கி வைத்து தனிமைப்படுத்துதலே சிறைப்படுத்துதலாகும். பொதுவாக ஒரு குற்றத்தில் ஈடுபட்டவரைக் குற்றத்தின் அளவைப் பொறுத்து நீதிமன்றம் தண்டனை விதித்து சிறையில் அடைக்கச் சொல்கிறது. அதன்படியே குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். உடலளவிலான தண்டனைகளைவிட தனிமைப்படுத்துதல் மிகக் கொடுமையான தண்டனை என்பதன் அடிப்படையிலேயே குற்றவாளிகள் சிறைப்படுத்தப்படுகிறார்கள்.

**நந்தினி** : ஆம், தெரியும். கைதுசெய்து சிறையில் அடைப்பாங்க. சமூகவாழ்வு என்ன என்பதை இப்பத் தெரிந்து கொண்டேன் அப்பா.

பேருந்து புறப்பட்டதிலிருந்து தொடங்கிய இவ்வுரையாடல் முடியும் நேரத்தில் அவர்கள் இறங்கவேண்டிய ஊரும் வந்தது. அனைவரும் மகிழ்ச்சியுடன் பேருந்தை விட்டு இறங்கி தாத்தா பாட்டி வீட்டை நோக்கி வீறுநடைபோட்டனர்.

**சமூகவாழ்வின் அடிப்படைக் கூறுகள்:**



**மாணவர்களே!**

கொடுக்கப்பட்டுள்ள தலைப்பின் கீழ் குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடி அவற்றை வகுப்பறையில் பகிரவும்.

- நாம் உண்ணும் உணவு, உடை எவ்வாறு நமக்குக் கிடைக்கிறது என்பதைக் கலந்துரையாடவும்.
- நேரடியாகவும் மறைமுகமாகவும் யாரெல்லாம் அதில் ஈடுபட்டுள்ளார்கள்?
- பிறரின் பங்களிப்பு இல்லாமல் அனைத்தையும் நாமே பெற இயலுமா?

எனவே, மனிதன் சமூகத்தில் பிறக்கிறான்; சமூகத்தில்தான் மடிகிறான். மனிதன் ஒரு "சமூக விலங்கு" என அழைக்கப்படுகிறான். ஒரு சமூகத்தை உருவாக்கும் தகுதி படைத்த உயிரினம் மனிதன். தனிமனிதர்கள் குழுவாக வாழ்கிறார்கள். வாழவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். அப்படி ஒரு சமூகத்தில் இணைந்து வாழும்போது அந்தச் சமூகத்தின் பழக்கவழக்கம், நாகரிகம், பண்பாடு, நடை, உடை, பாவனைகளை ஏற்று வாழ்தலை சமூகமயமாதல் என்கிறோம்.

ஆனால் சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளால் எல்லா மனிதர்களும் ஒரே நிலையில் இல்லை. பல்வேறு காரணங்களால் ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்குமிடையே வேறுபாடு எழுகிறது. சமூகத்தில் ஒருவரின் வாழ்நிலை சார்ந்து மரியாதை வழங்கப்படுகிறது. மற்றொருவருக்கு அதுவே மறுக்கப்படுகிறது. மனிதன் சமூகத்தில் வாழ அவன் வாழ்நிலை விலங்கின் வாழ்விலிருந்து உயர்ந்திருக்க வேண்டியுள்ளது. அந்த உயர்நிலையைச் சமஉரிமையும், கண்ணியமும் பெற்றுத் தருகின்றன.

## சென்னையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும் மீட்புப் பணிகளும்



கடந்த 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் சென்னை மாநகரில் வரலாறு காணாத வகையில் பெரும் மழை பெய்தது. இப்பெரும் வெள்ளத்தால் பலர் இறந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்விடங்களை இழந்து நின்றனர். பலரும் உண்ண

உணவு இன்றி, குடிக்க நீரின்றி பாதிக்கப்பட்டனர். தன்னார்வலர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, குடிநீர், மருந்துகளை வழங்கியதுடன் அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு விரைந்து அழைத்துச் சென்றனர். குழந்தைகள் முதல் பல்வேறு தனிநபர்கள், குழுக்கள், நிறுவனங்கள் ஆகியவை தங்களால் முடிந்த உதவிகளைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கி அப்பெருவெள்ளப் பாதிப்பிலிருந்து மக்கள் மீண்டுவர உதவினர். அதே போன்று கொரோனா பெருந்தொற்றுச் சூழலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிய தன்னார்வலர்கள் பலரையும் நம் பகுதிகளில் பார்த்திருப்போம்!

**உங்களுக்குத் தெரியுமா?**

**வகுப்பறையில் படிக்கவும்**

ஒருமனிதன் தான் தோன்றிய சமூகத்துக்குரிய கடமைகளை முழுமையாக ஆற்றுகின்ற போதுதான் முழு மனிதனாகிறான்.

Universal Declaration Human of Rights

- ஒருமனிதன் தான் பிறந்த நாட்டின் சட்டங்களை மதிக்க வேண்டும். சக மனிதர்களின் உரிமைகளை, சுதந்திரங்களை ஏற்கவேண்டும். இங்கு பொதுஅமைதி, பொதுநலன் என்பன மட்டுமே முதன்மை பெறல்வேண்டும்.
- அமைதி, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நேர்மை ஆகியவை வாழ்வின் மதிப்பீடுகளாகட்டும்.

- பிரிவு - 29, அகில உலக மனித உரிமைப் பிரகடனம் - 1948

### குழுவாக விவாதிக்க

1. துன்பப்படுவோர்க்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது?
2. முன்பின் தெரியாதவர்களுக்கு நாம் ஏன் உதவவேண்டும்?
3. பிறர் துயரத்தில் இருந்தபோது நீங்கள் இதுபோல உதவியுள்ளீர்களா?
4. பிறர் உதவி இல்லாமல் உங்களால் வாழ இயலுமா?
5. எதற்கெல்லாம் நாம் பிறரைச் சார்ந்துள்ளோம்?

கலந்துரையாடலைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ள குறளைப் படித்து அதன் பொருளை அறிந்து கொள்ளுங்கள்.

**திருக்குறள் 315**

"பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள."

ஒருவர் தனது வாழ்க்கையில் அனைத்தையும் இழந்த பிறகு அவரிடத்தில் அன்பும் நட்பும் பாராட்டுவது சுற்றத்தாரிடம் மட்டுமே காணப்படுவது தனி இயல்பு என்றார் வள்ளுவப் பெருந்தகை. இக்குறளின் பொருளை அறிந்து வகுப்பில் கலந்துரையாடுவோமா?

## பயிற்சிகள்



### 1. புதிய சொற்களைப் பழகுவோம்

இணக்கம், பெருந்திரள், சமூகவாழ்வு, பண்பாடு, சமய நல்லிணக்கம், நாகரிகம்.



### 2. பேசுவோம்!

அ) குழந்தைகளே! உங்கள் ஊர் மக்கள், வாழ்க்கை முறைகள் பற்றி வகுப்பறையில் பகிருங்கள்.

ஆ) அவர்கள் எவ்வாறு பிறரைச் சார்ந்துள்ளனர் என்பதை விவரியுங்கள்.



### 3. பட்டிமன்றம் நடத்தலாமே!

எங்கள் தேவையை நிறைவு செய்து கொள்ள எங்கள் குடும்பம் மட்டும் போதுமானது என்று ஒரு குழுவும், பிறரின் உதவி இல்லாமல் தன் தேவைகளை நிறைவு செய்ய இயலாது என்று மற்றொரு குழுவும் உரையாடலாம்.



### 4. படம் வரைந்து கதைசொல்வோம்

"வேற்றுமையில் ஒற்றுமை" என்ற கருத்தை மையப்படுத்தி படம் வரைந்து வகுப்பறையில் பகிரவும்.




### 5. கவிதை ஒன்று எழுதவும்

“சமூக வாழ்வு”

### 6. ஏட்டிக்குப் போட்டி

முதல் நபர் எது சொன்னாலும் இரண்டாவது நபர் மாறாகப் பேசுவார். முதல் நபர் பேசும் வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டாவது நபர் என்ன பேசுவார்?

| (எ.கா.) | முதல் ஆள் | இரண்டாம் ஆள் |
|---|---|---|
| | உறவு | பகை |
| | சேர்வோம் | ___________ |
| | கட்டுவோம் | ___________ |
| | சமாதானம் | ___________ |

**7. பாதையின் குறுக்கே கிடக்கும் கற்கள் எவை? அவற்றை எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| குடும்பம் | ஊர் | சமூகம் | இணக்கம் | பங்கு |
| பகை | சண்டை | பிரிவு | உதவி | ஒற்றுமை |
| வதந்தி | கோபம் | பிடிவாதம் | நட்பு | |

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________

## சிந்தனைக்கான கேள்விகள்

1. பணம், பொருள், கல்வி, அதிகாரம், சாதி, சமய அந்தஸ்து, அடிப்படையில் மட்டும் நட்பு பாராட்டுவது சரியா?
2. நாமும் நமது சுற்றத்தாரும் எவ்வாறு பழகுகிறோம்?
3. சுற்றத்தாரிடம் எவ்வகைகளில் மோதல்கள் வருகின்றன?
4. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை – இப்பலமொழியின் பொருளை விளக்குக.



# 3. பன்மைச் சமூகம்

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!

- கணியன் பூங்குன்றன், புறநானூறு 192

**நோக்கங்கள்:**

- பன்மைச் சமூகத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளல்.
- பன்மைச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகளை விளங்கிக் கொள்ளல்.
- பன்மைச் சமூகத்தின் தேவையை உணர்தல்.

## ஆசிரியர் மாணவர்களின் கலந்துரையாடல்

**குழந்தைகளே!**

இன்று நாம் இவ்வகுப்பில் இந்திய நாட்டைப் பற்றிப் படிக்கப் போகிறோம். நம்ம நாட்டைப் பற்றி நமக்கெல்லாம் என்ன தெரியும்னு உங்களைச் சோதிக்கப் போறேன். நீங்க ஒவ்வொருவராக எழுந்து நின்று நம் நாட்டைப் பற்றிய ஒருகருத்து சொல்லணும்! என்ன?



மாணவன் 1 : இந்தியா பெரிய நாடு

மாணவன் 2 : காந்தி பிறந்த நாடு

மாணவன் 3 : இந்தியா ஒரு துணைக்கண்டம்

மாணவன் 4 : இந்தியாவின் தலைநகர் தில்லி

மாணவன் 5 : இந்தியாவில் பல மொழிகள் பேசப்படுகின்றன

மாணவன் 6 : இங்கு பல இனத்தவர் வாழ்கின்றனர்

மாணவன் 7 : இங்கு பல சமயங்கள் இருக்கின்றன

ஆசிரியை : அருமை. வேறு ஏதாவது உண்டா?

மாணவன் 8 : இங்கு பல வகையான பழக்கவழக்கங்கள் இருக்கின்றன.

மாணவன் 9 : நாம் ஒற்றுமையாக இருக்கிறோம்.

ஆசிரியர் : எல்லோரும் நல்லாச் சொன்னீங்க. ஒரு கேள்வி கேட்கலாம்னு நினைக்கிறேன். சில மாணவர்கள், இந்நாட்டில் பல மொழி பேசுறவங்க இருக்கிறாங்க, பலசமயம் சார்ந்தவங்க இருக்கிறாங்க, பல இனத்தவர்கள் இருக்கிறாங்கன்னு சொல்றீங்க. ஒரு நாட்டில் இப்படிப்பட்ட பல மொழிகளும், பல இனங்களும், வெவ்வேறு பண்பாடுகளும், இருப்பதாக சொல்ற நீங்க, நாம் ஒற்றுமையாக இருக்கிறதா சொல்றீங்க. அது எப்படி?

மாணவன் 1 : இப்படிப் பல்வேறு பிரிவுகள் இருப்பது அவ்வளவு நல்லது இல்லைன்னு நான் நினைக்கிறேன். இப்படி இருந்தா ஒற்றுமையே இருக்காது. ஒரே குழப்பமாகத் தானிருக்கு.

மாணவன் 3 : அது தப்பு. எங்கள் தோட்டத்தில் பலவிதமான மலர்ச்செடிகள் உள்ளன. வெவ்வேறு மலர்ச்செடிகள் இருப்பதால்தானே தோட்டம் அழகாயிருக்கு!

மாணவன் 4 : ஆனால், எல்லாச் செடிகளும் எண்ணிக்கையில் சமமாக இல்லையே! ஒரு செடி அதிகமாக இருக்கு. இன்னொரு செடி மிகக் குறைவா இருக்கு. எல்லாச் செடிகளையும் சமமாகப் பார்க்க முடியுமா?

ஆசிரியர் : ஒரு சில மலர்கள் அதிகமாக இருக்கலாம். பலமலர்கள் குறைவாக இருக்கலாம். ஆனா, எல்லா மலர்களும் சமமாகப் பேணிக் காக்கப்பட வேண்டும். குறைவாக இருந்தாலும், நிறைய இருந்தாலும் எல்லா மலர்களுக்கும் உயிருண்டு. ஆகவே, எல்லாச் செடிகளுக்கும் உயிர்வாழ உரிமையுண்டு என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அதுபோலத்தான் நாட்டிலும் பெரும்பான்மை, சிறுபான்மை என்று பார்க்காமல், சாதி வேறுபாடு பார்க்காமல், உயர்ந்த மொழி, சாதாரண மொழி என்று பார்க்காமல் நடந்து கொண்டோமானால் நாட்டில் சண்டையே இருக்காது.

மாணவன் 5 : சமமாக நடத்தினால் ஒற்றுமை வந்திடுமா?

ஆசிரியர் : சமமாக நடத்தும் போது உறுதியா பாகுபாடு இருக்காது. அதுமட்டுமல்ல, நம்மிடையே உள்ள வேற்றுமைகள் இயற்கையானவை என ஏற்றுக் கொள்ளணும். ஒருவர் தனது தாய்மொழியைப் பேசவும், தான் விரும்பிய சாமியைக் கும்பிடவும் உரிமை உண்டென்பதை ஏற்க வேண்டும். அவரவர்க்குரிய தனித்த அடையாளங்களையும் மதிக்கவேண்டும். அப்படிச் செய்தால் குழப்பமே இருக்காது.

மாணவர் : இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கம்மா....

ஆசிரியர் : தோட்டத்தில் பலவகை மலர்கள் இருக்கிற மாதிரிதான் நாட்டிலும் பலவகை மனிதர்கள் இருப்பாங்க. எல்லாரும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது. ஆனா, ஒற்றுமையாக இருக்க வேண்டும் புரிந்ததா?

மாணவர் : அப்படின்னா, இந்தியாவின் அழகே, இந்தப் பன்மைத் தன்மையில்தான் இருக்கிறதா?

ஆசிரியர் : ஆமாம். இதனால்தான் நம் நாடு ஒரே நாடாக இருந்தாலும், பல மாநிலங்களாகப் பிரிந்திருக்கிறோம். அவரவர் மொழியையும், பண்பாட்டையும் பாதுகாக்க அரசமைப்புச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மாணவர் : நாங்களும் இதனைப் பாதுகாக்க முயற்சி செய்வோம். நமக்குள் காணப்பெறும் வேற்றுமைகளை மதித்து, ஒற்றுமை காக்க முயற்சி செய்வோம்.

நாம் இதுவரை வகுப்பறையில் உரையாடியதைத் தொடர்ந்து பன்முகத் தன்மையை மேலும் புரிந்துகொள்ள சில சான்றுகளைப் பார்ப்போமா?

## நிகழ்வு - 1

### மத நல்லிணக்கத்தைப் போற்றும் வைகை கிராமம்

இராமநாதபுரம் மாவட்டம், உத்திரகோசமங்கை அருகே வைகை என்ற ஊரில் அனைத்து மக்களும் வணங்கி வரும் பத்திரகாளியம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலுக்குப் பின்புறம் இசுலாமியர்களின் தர்கா உள்ளது. இன்றுவரை இந்து- இஸ்லாமியர் எனப் பாகுபாடின்றி அனைவரும் கோவிலிலும் தர்காவிலும் வழிபாடு நடத்தி வருகின்றனர். கோவிலில் வழிபாடு நடத்திய பிறகுதான் தர்காவில் 'பாத்தியா' ஓதுவார்கள். பத்திரகாளியம்மனுக்குப் பொங்கல் வைக்கத் தேவையான அனைத்துப் பொருட்களையும் இஸ்லாமிய மக்கள் வாங்கித் தருகிறார்கள். பல தலைமுறைகளாக இந்த வழக்கம் தொடர்ந்து வருகிறது. சமய நல்லிணக்கத்திற்குச் சான்றாக விளங்குகிறது, இந்தக் கிராமம்!



## சிந்தனைக்கான கேள்விகள்

1. வைகை ஊரில் உள்ளது போன்ற கோவில்கள் அல்லது நிகழ்வுகள் ஏதேனும் உங்கள் ஊரில் நடைபெறுகிறதா?
2. இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு நாம் ஏன் முக்கியத்துவம் தரவேண்டும்?
3. சமய நல்லிணக்கம் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

## நிகழ்வு - 2



வடகிழக்கு மாநிலமான மணிப்பூரைச் சேர்ந்தவர் டி.மைக்கேல்லா ஜதாங் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஒருநாள் தன் நண்பர்களுடன் ஒரு சாலையோர உணவகத்தில் இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ஒரு கும்பல் கன்னடத்தில் ஏதோ கேட்க அவர்கள் இந்தியில் பதில் கூறினர். அதற்கு அக்கும்பல் நீங்கள் கர்நாடகாவில் சம்பாதிக்கிறீங்க. ஆனால், கன்னடம் மட்டும் தெரியாதா என்று கூறி கடுமையாகத் தாக்கியுள்ளனர். அவர்கள் வடகிழக்கு மாநிலத்தைச் சார்ந்தவர்கள் என்றனர். ஆனால் அந்த கும்பலோ, அதைப் பொருட்படுத்தவில்லை; கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

- பத்திரிகைச் செய்தி

## சிந்தனைக்கான கேள்விகள்

- பலமொழிகள் பேசும் நம் நாட்டில் மொழி அடிப்படையில் மனிதர்களைப் பாகுபடுத்துவது சரியா?
- உங்கள் பகுதியில் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்துள்ளனவா? ஆம் எனில் வகுப்பில் பகிரவும்.

### நல்லிணக்க நாள் உறுதிமொழி:




ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 20ஆம் நாள் சமய நல்லிணக்க நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்நாளில் அனைவரும் நல்லிணக்க நாள் உறுதிமொழி எடுத்துக் கொள்கிறோம்.

**உறுதிமொழி**

“நான் சாதி, சமய, இன, மொழிப் பாகுபாடு எதுவுமின்றி, இந்தியாவில் அனைத்து மக்களின் உணர்வார்ந்த ஒற்றுமைக்கும்,நல்லிணக்கத்திற்கும் பாடுபடுவேன் என்று உளமார உறுதிமொழி எடுத்துக் கொள்கிறேன். மேலும் எங்களுக்கிடையேயான அனைத்து வேறுபாடுகளையும் அமைதி வழியிலான பேச்சுவார்த்தைகள் மூலமாகவும், அரசமைப்புச் சட்ட வழிமுறைகளைப் பின்பற்றியும் தீர்வு காண்பேன் என்றும் உறுதி அளிக்கிறேன்.”

**மாணவர்களே!**

உங்கள் பகுதியில் உள்ள பிற வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்றுள்ளீர்களா? அவ்வாறு சென்றிருந்தால் அங்கு நிகழ்ந்தவற்றை வகுப்பறையில் பகிரவும்.

இந்நாட்டில் பன்முகத் தன்மைகொண்ட சமூகத்தைத் தொடர்ந்து தக்கவைக்க நாம் வேறுபாடுகளை ஏற்று, பாகுபாடுகளுக்கு இடந்தராமல் இணக்கத்துடன் வாழ உறுதியேற்போம்.

குழந்தைகளே! "ஊர் கூடித் தேர் இழுத்தல்" என்று ஏன் கூறுகிறார்கள் என்பதை உங்கள் பெற்றோரிடம் கேட்டு வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும். இவ்வகுப்புகளில் இதுவரை என்னென்ன பார்த்தோம் என்பதைக் கொஞ்சம் நினைவுபடுத்திக் கொள்வோம். எல்லோர்க்கும் வாழவேண்டும் என்ற ஏக்கம் இருக்கிறது. இந்த ஏக்கம் தனிமனிதர்களின் ஏக்கங்களாக இருக்கலாம். குழுவாக இணைந்தும், இசைந்தும் சமூக



வாழ்வை மேற்கொள்ளும் மனிதர்கள் தங்களுக்குள் இருக்கும் இயற்கையான வேறுபாடுகளை மதித்து, அவர்களை ஏற்று வாழ்வதையே பன்மைச்சமூகம் என்கிறோம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இனம், நிறம், பாலினம், மொழி, சமயம், அரசியல் கோட்பாடு, நாடு, சமூகப் பின்னணி, சொத்து, பிறப்பு, பிற தகுநிலை என்பன போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி இப்பிரகடனத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து உரிமைகளும், சுதந்திரங்களும் அனைவர்க்கும் உரியன.




பிரிவு - 2, அகில உலக மனித உரிமைப் பிரகடனம், 1948

## பயிற்சிகள்

**1. அடிப்படைச் சொற்கள் (வாசிக்கும் பயிற்சி) (ஒவ்வொரு மாணவரும் ஒரு சொல்லை உரக்க வாசிக்க வேண்டும்)**

| | | |
|---|---|---|
| தகுநிலை | பன்மை | சமூகம் |
| சமயம் | இனம் | மொழி |
| வேற்றுமை | ஒற்றுமை | இயற்கை |
| தோட்டம் | மலர்கள் | அழகு |
| பாகுபாடு | சுதந்திரம் | சமத்துவம் |

**2. உரக்கச் சொல்லுவோம்!**

"வேற்றுமையில் ஒற்றுமை"

"வேறுபாடுகளை மதிப்போம்! பாகுபாடுகளைக் களைவோம்!"

"சட்டத்தின் முன் அனைவரும் சமம்"

"சமூக நல்லிணக்கமே நாட்டின் ஒற்றுமை"

"பன்மைச்சமூகமே நமது வலிமை"

**3. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1) வலிமை — தனிமனிதன் / கூட்டம் — விடை : ____________

2) காடு — மரம் / மரங்கள் — விடை : ____________

3) நாடு — ஒரே சமயம் / பல சமயங்கள் — விடை : ____________

4) வீடு — ஒருவர் / பலர் — விடை : ____________

5) மனிதர்கள் — சமம் / பேதம் — விடை : ____________

**4. சரியா? தவறா?**

1) இந்தியா என்பது பல சமயங்கள், பல மொழிகள் உள்ளடங்கிய ஒருதுணைக்கண்டம் ஆகும். __________ (சரி / தவறு)

2) பெரும்பான்மை மக்களும் சிறுபான்மை மக்களும் சமமானவர்களே! __________ (சரி / தவறு)

3) ஒரே நாடு, ஒரே சமயம் என்பதை இந்திய அரசமைப்பு வலியுறுத்துகிறது. __________ (சரி / தவறு)

4) பல வண்ணங்கள் அழகு __________ (சரி / தவறு)

**5. முடியுமா? முடியாதா?**

1) நீ வேறு நிறம்; அவன் / அவள்
வேறு நிறம். நீங்கள் நண்பர்களாக
இருக்க முடியுமா? முடியாதா? ____________________

2) நீ வேறு சமயம்; அவன் / அவள்
வேறு சமயம். நீங்கள் நண்பர்களாக
இருக்க முடியுமா? முடியாதா? ____________________

3) நீ விரும்புவது அமைதி;
அவன் விரும்புவது வன்முறை
நீங்கள் நண்பர்களாக இருக்க
முடியுமா? முடியாதா? ______________________

**6. இவற்றில் உனக்குப் பிடித்த சொற்கள் இரண்டை எழுது.**

சண்டை, அன்பு, ஒற்றுமை
வேற்றுமை, சமூகம், இயற்கை
பன்மை, பாகுபாடு, அழகு

விடை : ______________________

**7. பின்வரும் தொடர்களில் உனக்குப் பிடித்த ஒரு தொடரை எழுது.**

1) அனைவரும் சமம்
2) வேற்றுமைகள் இயற்கையானவை
3) நம் நாட்டின் அழகு பன்மைத்தன்மையில் இருக்கிறது.

விடை : ______________________

**8. நாடகமாக நடித்துக் காட்டலாம்**

மூன்று அல்லது நான்கு குழுக்களாகப் பிரிந்து "வேற்றுமையில் ஒற்றுமையையும் பன்மைச் சமூகத்தின் பயன்களையும்" நாடகமாக்கவும்.



**9. பாடலைப் பாடி பொருளறிக.**

"யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" கணியன் பூங்குன்றனார் எழுதிய புறநானூற்றுப் பாடலை வகுப்பறையில் பாடியபின் அதன் பொருளறிக.

*யாதும் ஊரே! யாவரும் கேளிர்!*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா.....*
*மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (புறம்: 192).*

**உங்களுக்குத் தெரியுமா?**

சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டத்தின் சமமான பாதுகாப்பு அனைவர்க்கும் உண்டு.

– பிரிவு - 14 இந்திய அரசமைப்புச் சட்டம்




# 4. மனித மாண்பு

**மனித மாண்பு விடுதலை உணர்வுக்கு ஒப்பானது. தன் மரியாதையையும் தன் மதிப்பையும் உள்ளடக்கியது.**

**நோக்கங்கள்:**

- மனித மாண்பு இயல்பானது என்பதைப் புரிந்து கொள்ளல்.
- மனித மாண்பின் மேன்மையை உணர்ந்து கொள்ளல்.
- மனித மாண்பைத் தக்க சான்றுகளுடன் அறிந்து கொள்ளல்.

**குழந்தைகளே!**

இப்பாடத்தில் நமது அரசமைப்புச் சட்டம் உறுதிசெய்துள்ள முதன்மையான உரிமையும் நமது உணர்வுகளுடன் மிக நெருங்கிய தொடர்புடையதுமான மனித மாண்பு பற்றித் தெரிந்துகொள்ளப் போகிறோம்.

மக்களின் அடிப்படைத் தேவைகளையே அடிப்படை உரிமைகள் என்று நமது நாட்டின் அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. இயற்கையான இவ்வுரிமைகள் மறுக்கப்படும்போது மனிதரால் மாண்புடன் வாழ இயலாது.

மனித மாண்பு என்பது அனைத்து மனிதர்களுக்கும் உரியது. அது அனைத்து உரிமைகளுக்கும் அடிப்படையானது ஆகும். மனித மாண்பைக்

கண்ணியம், மேன்மை, மானம், மதிப்பு, தன்மரியாதை எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கிறோம். மனித மாண்பு என்பது ஒவ்வொரு மனிதனின் உள்ளார்ந்த உணர்வாகும். இதனால்தான் ஒருவரைத் தரக்குறைவாக நடத்துவது, பேசுவது, தாக்குவது என்பது தனிமனிதனின் மாண்பைப் பாதிக்கும் செயல் என்று கூறுகிறோம்.

மனித மாண்பு பற்றித் தெரிந்துகொள்ள மூன்று சிறந்த தலைவர்களின் வாழ்க்கையில் அவர்கள் மாண்புமீது நடந்த தாக்குதல்களே அவர்கள் நாட்டின் விடுதலைக்காக வீறுகொண்டு போராடக் காரணமாக அமைந்தன.

## தென் ஆப்ரிக்காவில் மகாத்மா காந்திக்கு நேர்ந்தது

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் பணியாற்றியபோது, 1893 ஆம் ஆண்டு சூன் மாதம் 7 ஆம் தேதி அன்று டர்பன் நகரிலிருந்து பிரிட்டோரியாவுக்கு தொடர்வண்டியில் முதல் வகுப்பில் பயணம் செய்தார். வேறு நிறத்தவர் என்பதால் அந்தப் பெட்டியிலிருந்து வெளியேறி மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பயணிக்குமாறு காந்தியை வெள்ளையர்கள் வற்புறுத்தினர்.




காந்தி முதல் வகுப்புக்கான பயணச்சீட்டு வைத்திருப்பதாகக் கூறி இறங்க மறுப்புத் தெரிவித்தார். அதனால் கோபமுற்ற வெள்ளையர்கள் நள்ளிரவில் பீட்டர் மாரிட்ஸ்பர்க் தொடர்வண்டி நிலையத்தில் காந்தியை வலுக்கட்டாயமாக இறக்கிவிட்டனர்.

இது அவருக்கு மிகப்பெரிய அவமானமாக இருந்தது. அந்த நேரத்தில் மனிதத்தை, மனித மாண்பை வெள்ளையர்கள் துச்சமாக எண்ணித் தூக்கியெறிந்ததாக உணர்ந்தார். இந்நிகழ்வால் கொதித்தெழுந்த காந்தி, தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயர்களின் நிறவெறிக்கு எதிராகவும், அடக்கு முறையால் பாதிக்கப்பட்ட கருப்பின மக்களுக்கு ஆதரவாகவும் அற வழியில் போராட்டத்தைத் தொடங்கினார். காந்தியடிகளுக்கு அன்று நேர்ந்ததுதான் இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்டது. இந்தியர்களின் மாண்பைக் காக்கத் துணையாகவும் நின்றது.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒருவரின் அந்தரங்கம், குடும்பம், இல்லம், கடிதங்கள் - இவற்றில் சட்டத்திற்குப் புறம்பாகக் குறுக்கீடு செய்ய எவர்க்கும் உரிமையில்லை. ஒருவரின் மாண்புக்கும், நற்பெயருக்கும் களங்கம் கற்பிக்க எவர்க்கும் உரிமை இல்லை. இம்மாதிரியான முறையற்ற குறுக்கீடுகளிலிருந்து பாதுகாப்புப் பெற அனைவர்க்கும் உரிமை உண்டு..

- பிரிவு - 12, அகில உலக மனித உரிமைப் பிரகடனம், 1948

## அம்பேத்கருக்குப் பள்ளியில் நிகழ்ந்த அவமதிப்பு



அம்பேத்கர் சிறுவனாக இருந்தபோது வகுப்பில் மற்ற மாணவர்களோடு சமமாக உட்கார வாய்ப்பு மறுக்கப்பட்டது. வகுப்பறையில் ஒரு மூலையில் தனியாக உட்காரவேண்டும். அதிலும் தரையில் உட்காரக் கூடாது. காரணம் தரையில் உட்கார்ந்தால் தரை தீட்டாகிவிடுமாம். அதனால் அவர் வீட்டிலிருந்த கோணிப்பையை எடுத்துவந்து தரையில் விரித்து தனியாகக் கீழே உட்கார்ந்து கல்வி பயின்றார். பள்ளியில் உள்ள பானையில் தண்ணீர் குடிக்கமுடியாது. ஆதிக்க சாதியைச் சார்ந்த ஒருவர்தான் கையில் தண்ணீர் ஊற்றுவார். அதுவும் அங்குள்ள பணியாளரே அதைச் செய்வார். அந்தப் பணியாளர் வரவில்லை, என்றால் தாகத்திற்குத் தண்ணீர் கிடைக்காது என்பதை "No Peon, No water" என வேதனையோடு நினைவு கொள்வார் அம்பேத்கர்.

ஒருநாள் ஆசிரியரின் கட்டளைப்படி கரும்பலகையில் ஒரு கணக்கைப் போட்டுக்காட்ட அம்பேத்கர் சென்றார். உடனே மற்ற மாணவர்கள் கரும்பலகைக்குப் பின்புறம் வைத்திருந்த தங்களின் உணவுப் பாத்திரங்களை ஓடிச்சென்று எடுத்து வைத்துக் கொண்டனர். காரணம் அம்பேத்கர் ஒரு பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர். அவர்களின் பாத்திரத்தை அம்பேத்கர் தொட்டுவிட்டால் தீட்டாகிவிடும் என்று கருதி அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டனர். இது அவருக்குப் ஒரு பெரிய அவமானத்தைத் தந்தது. எத்தனையோ ஒடுக்கப்பட்ட சகோதர சகோதரிகளின் மனிதத் தன்மையும், மனித மாண்பும் இதேபோல் சிதைக்கப்படுகிறது என்பதை உணர்ந்தார். இந்த உணர்வு அவரைப் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும் சாதி ஒழிப்பிற்காகவும் போராடத் தூண்டியது.

**உங்களுக்குத் தெரியுமா?**



யாரும் யாரையும் அடிமையாகக் கொள்ளவோ நடத்தவோ உரிமை இல்லை. அடிமை முறைகளின் அனைத்து வடிவங்களும் தடை செய்யப்பட வேண்டும்.

- பிரிவு - 4, அகில உலக மனித உரிமைப் பிரகடனம், 1948

## ரோசாபார்க்ஸ் விடுதலையின் ஒளி



ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு விதங்களில் பாகுபாடு பார்க்கப்படுகிறது. அவ்வகையில் அமெரிக்காவில் கருப்பினத்தவர்கள் மீது வெள்ளையர்கள் காட்டிய நிறவெறியால் கருப்பின மக்கள் அடைந்த கொடுமைகளுக்கு அளவே இல்லை. இக்கொடுமைகளுக்கு எதிராகப் பலர் போராடியுள்ளனர். அவர்களில் மார்ட்டின் லூதர் கிங், ரோசாபார்க்ஸ் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

கருப்பினத்தவர்கள் கடுமையான ஒடுக்குதலுக்கு உள்ளாவதை ரோசாபார்க்ஸ் சிறுவயதிலிருந்தே பார்த்தே வளர்ந்தார். கருப்பின மக்கள் வசிக்கும் ஒதுக்குப் புறமான இடம், அனைத்துப் பேருந்துகளிலும் சமமாக பயணம் செய்யமுடியாத சூழல், பேருந்தில் பயணம் செய்யும்போது வெள்ளையர்கள் ஏறிவிட்டால் கருப்பினத்தவர் வழியில் இறக்கி விடப்படுவார்கள்.

ஒருநாள் தனது வேலைகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பப் பேருந்தில் ஏறி இருக்கையில் அமர்ந்தார் ரோசாபார்க்ஸ். வெள்ளையர் ஒருவர் பேருந்தில் ஏறியவுடன் இவரை எழுந்திருக்கச் சொல்லி ஓட்டுநர் கூறினார். "பயணச்சீட்டு எடுத்துள்ளேன், அதனால் இறங்கமாட்டேன்" என்று மறுத்து உறுதியுடன் அமர்ந்திருந்தார். ஓட்டுநர் காவல் துறையினரை அழைத்தார். விதிகளை மீறியதாகக் கூறி ரோசாபார்க்சைக் காவலர்கள் கைது செய்தனர்.

ரோசாபார்க்ஸ் கைது செய்யப்பட்ட செய்தி அமெரிக்கா முழுவதும் பரவியது. ஆண்டாண்டு காலமாகத் தங்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகக் கருப்பின மக்கள் போராடத் துணிந்தனர். "மான்ட் கோமரி பேருந்துப் புறக்கணிப்பு" எனும் புகழ்பெற்ற போராட்டம் தொடங்கியது.

பேருந்துகளைப் புறக்கணித்து மகிழுந்தில் சென்றனர். அதற்குப் பணம் இல்லாதவர்கள் நடந்தே சென்றனர். பேருந்தில் சென்று படிக்கும் நிலையில் உள்ள குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பவில்லை. மக்களின் புறக்கணிப்பால் பேருந்துகள் காலியாகச் சென்றன. அரசுக்கு வருமானம் குறைந்தது. தீவிர ஈடுபாடு மிகுந்த போராட்டத்தின் விளைவாக வெள்ளை அரசு பணிந்தது. பேருந்துகளில் அனைத்து இனத்தவர்களும் பயணம் செய்யும் வகையில் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. தங்கள் வெற்றியைக் கருப்பின மக்கள் கொண்டாடினார்கள். ரோசாபார்க்சை கைது செய்த திசம்பர் 1-ஆம் நாள் "ரோசாபார்க்ஸ் நாள்" என கொண்டாடப்படுகிறது.

இனவெறிக்கு எதிராக அறவழியில் போராடி, கருப்பின மக்களின் உரிமைப் போராட்டத்தை வலுவடையச் செய்த ரோசாபார்க்ஸ், 2005ஆம் ஆண்டில் தனது 92 ஆம் வயதில் காலமானார்.

## சிந்தனைக்கான கேள்விகள்

1. மகாத்மா காந்தி தொடர்வண்டியில் இருந்து ஏன் இறக்கி விடப்பட்டார்?
2. அண்ணல் அம்பேத்கருக்குப் பள்ளியில் ஏன் அவமதிப்பு நிகழ்ந்தது?
3. பேருந்திலிருந்து இறங்காததற்கு ரோசாபார்க்ஸ் ஏன் கைது செய்யப்பட்டார்?
4. உங்களுக்கோ அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கோ இம்மாதிரியான நிகழ்வுகள் நடந்துள்ளனவா என்பதை வகுப்பறையில் கலந்துரையாடவும்.
5. இந்த நிகழ்வுகள் உன்னைப் பாதித்ததா?

மேற்கண்ட மூன்று நிகழ்வுகளும் மனித மாண்வு பற்றி இவ்வாறு கூறுகின்றன. "ஒரு மனிதர் பிறரால் மதிக்கப்படவேண்டும். மாண்போடு நடத்தப்படவேண்டும். இது நம் எல்லோரிடமும் இருக்கின்ற ஓர் ஆழமான ஏக்கம். மனிதருடைய அனைத்து ஏக்கங்களின் அடிப்படையே, மாண்போடு வாழ்வதுதான் என்பது ஆகும்."

## மனித மாண்புக்கு இழுக்கேற்படுத்தும் சில நிகழ்வுகள்

### 1. துப்புரவுத் தொழில்:

"தூய்மைப்பணி" என அழகாகச் சொல்லப்படும் மலத்தை அள்ளுதல், சாக்கடையைத் தூய்மை செய்தல் போன்ற பணிகள் சமூக அளவில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது திணிக்கப்படுகின்றன. நகரங்களில் பாதாளச் சாக்கடைகளில் அடைப்பு ஏற்பட்டால், அதற்குள் இறங்கி அடைப்பை

நீக்கும் வேலை ஆண்கள் மீதும், மனித மலத்தைக் கையால் அள்ளிச் சுத்தம் செய்யும் வேலை பெண்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

"என்னுடைய உடம்பின் ஒவ்வொரு பகுதியும் நாறுகிறது. பலமுறை குளித்த பிறகும் நாறுகிறது. என்னால் சோற்றில் கை வைக்க முடியவில்லை, எனக்கு வேறு எந்த வேலையாவது கொடுங்கள். தயவு செய்து இந்த நரகத்திலிருந்து எனக்கு விடுதலை கொடுங்கள்", என்கிறார் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த துப்புரவுத் தொழிலாளி சரசுவதி.

**– பத்திரிகைச் செய்தி**

**சிந்தனைக்கான கேள்விகள்**

- குறிப்பிட்ட சமூக மக்கள் மட்டுமே துப்புரவுப் பணியைச் செய்கிறார்களே, ஏன்?
- ஊரைத் தூய்மையாக வைத்திருப்பது யார் பொறுப்பு?
- உயர் அலுவலர் முதல் துப்புரவுப் பணிவரையிலான அனைத்துப் பணிகளும் அனைவர்க்கும் பொதுவானதாக உள்ளனவா? இல்லையெனில் ஏன்?
- துப்புரவுப் பணியாளர்களுக்கு எம்மாதிரியான பாதிப்புகள் ஏற்படுகின்றன?

**குழந்தைகளே!**

மானிட மாண்பு குறித்த பாவேந்தர் பாரதிதாசனின் பாடலை வகுப்பறையில் பாடி அதன் பொருளை அறிந்து உரையாடவும்.

மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்
மானிடம் என்பது குன்றுதனில்
வாய்ந்த சமத்துவ உச்சியில் நின்று
மானிடருக் கினிதாக - இங்கு
வாய்ந்த பகுத்தறி வாம்விழி யாலே
வான்திசை எங்கணும் நீ பார்!-வாழ்வின்
வல்லமை "மானிடத் தன்மை" என்றேதேர்.



என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.
இப்பாடலை வகுப்பறையில் இணைந்து வாசிக்கவும்.

*சக மனிதர்களின் இழிவைத் துடைக்க முன்வராத மனிதர்கள் பிணங்களுக்கு ஒப்பானவர்கள் என்கிறார் திருவள்ளுவர். (குறள் எண் : 214)*

**2. மனித மாண்பிற்காக ஏங்கும் ஒரு திருநங்கையின் அறைகூவல்:**

“இவ்வுலகில் மிகவும் தூய்மையானது தாயின் நல்இதயமே என்பதாக ருஷ்யக் கவிஞன் சிஷ் ஐத்மேத்தேவ் கூறியிருப்பார். அம்மா இது உண்மைதான், என் இளம் வயதில் அதை உன்னுடன் இருந்து உணர்ந்திருக்கிறேன். இப்போது தொலைவில் இருந்து அறிகிறேன். மகனாக என்னை நீ பெற்றெடுத்த மகிழ்ச்சியில் திளைத்திருப்பாய். நானோ உன்னுடைய மகளாகவே வளர்ந்தேன், மகளாகவே வாழ்வேன்.

அம்மா உனக்கும், எனக்கும் இடையே இருக்குற பிரிவுக்கு நீயும் நானும் காரணமல்ல, உண்மையான காரணம் இந்தச் சமூகம்தான். இச்சமூகத்தில் நிலவும் போலிக்கௌரவங்களும் ஆதிக்க மனநிலையும்தான் காரணம். நான் பாலினம் மாறிப் பிறந்தது உன் தவறோ, என் தவறோ அன்று. அது இயற்கை விதி. இவ்விதியை இவ்வுலகிற்கு எடுத்துச் சொல்ல வேண்டிய இச்சமூகம் தனது கடமையிலிருந்து நழுவுகிறது. இதனால் உன் மகளைப் போன்ற திருநர்கள் அனுபவிக்கும் கொடுமை எழுத்தில் அடங்காது. பிச்சை எடுத்தலும், பாலியல் தொழிலும் என் பாலினத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும் பெருங்கேடு.

இந்தச் சமூகமும், அரசும் கட்டாயம் ஒருநாள் எங்களை ஏற்றுக்கொள்ளும். அப்போது நீ என்னை ஏற்றுக்கொள்வாய். அதுவரையில் உன் இதயத்தில் நீ அடக்கி வைத்திருக்கும் தூய பாசத்தை என் மீது பொழிவாய். உன்னோடும், அப்பாவோடும், அண்ணன் தம்பிகளோடும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்பேன்.

அம்மா! எனக்கு நீ வேண்டும். உன்னுடைய பாசமும், அப்பாவின் நேசமும் வேண்டும். அண்ணன் தம்பிகளோடு கூடி விளையாட வேண்டும். யாரும் என் பாலினத்தைக் கொச்சைப்படுத்தாமல் இருக்க வேண்டும். இதனை இந்தச்சமூகம் உணர வேண்டும்”.

*நன்றி: மதிப்பிற்குரிய மங்கை பானு, 2015, ஓரினம் இணையப் பக்கம்.*

### சிந்தனைக்கான கேள்விகள்

**திருநர்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?**

- திருநர்களைப் பற்றிய சமூகத்தின் பார்வை எவ்வாறு உள்ளது?
- திருநர்களை அவமதிக்கும் நிகழ்வுகளைப் பார்த்துள்ளீர்களா? அப்போது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?
- நம் குடும்பத்தில் இவர்களைப் போன்றவர்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

### 3. மனித மாண்பைக் காக்கும் முயற்சிகளைப் பாராட்டுவோம்!



சென்னை வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையப் பணிகளில் 15 திருநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் பயணச்சீட்டு வழங்கல், பயணிகள் சோதனை, ஒழுங்கமைப்பு ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். "சமூகத்தில் எவ்வளவு போராடியும் ஏற்பு ஏதும் கிடைக்கவில்லையே என்ற மனக்குறையுடன் வாழ்ந்து வந்த எங்களுக்கு இவ்வேலைவாய்ப்பு மூலம் முன்னேற்றத்திற்கான வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. அம்மா, அப்பா என அனைத்து உறவுகளால் புறக்கணிக்கப்பட்ட எனக்கு சென்னை மெட்ரோ மேலாண்மை பணி வழங்கி இருப்பது பெருமையாக உள்ளது" என மகிழ்ச்சி பொங்கக் கூறுகிறார் அருண் கார்த்திக்.

*நியூஸ் - 18, 16.02.2021*

**உங்களுக்குத் தெரியுமா?**

யாரையும் சித்திரவதை செய்யக்கூடாது. கொடூரமாக, மனிதத் தன்மையற்று, கேவலமாக நடத்தக் கூடாது. கொடூரமான, மனிதத் தன்மையற்ற, கேவலமான தண்டனைக்கு உட்படுத்தக் கூடாது.

– பிரிவு - 5, அகில உலக மனித உரிமைப் பிரகடனம் - 1948

### 4. தொடரும் தீண்டாமை:



ஈரோடு மாவட்டத்தில் ஒரு ஊர். இங்குள்ள தொடக்கப் பள்ளியில் சத்துணவுப் பணியாளராக பட்டியலின சாதியைச் சேர்ந்த ஒரு பெண் அமர்த்தப்பட்டார். அவ்வூரிலுள்ள உயர் சாதியினர்க்கு இது பிடிக்கவில்லை. இப்பெண் பணியமர்வு செய்யப்பட்டதைக் கடுமையாக எதிர்த்த இவர்கள் தலைமையாசிரியரிடம் அப்பெண்ணை மாற்றச் சொல்லி மனுக் கொடுத்தனர். இதனைத் தலைமையாசிரியர் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே ஆதிக்க சாதியைச் சேர்ந்த ஒருசில பெற்றோர் தங்கள்

குழந்தைகளுக்கு மதிய உணவை வீட்டிலிருந்து கொடுத்து விட்டனர். பல பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு மாற்றுச்சான்றிதழ் கேட்டனர்.

அங்குள்ள இளைஞர்களோ "நாங்க சாதி விசயத்திலே எதையும் விட்டுக் கொடுக்கமாட்டோம். சாதிக்கட்டுமானம் உள்ள எங்க ஊர்ல பட்டியலின சாதியைச் சார்ந்த பெண் சத்துணவு ஆக்கிப் போட்டா யாரு சாப்பிடுவாங்க?"

அவ்வூர்ப் பெண்கள் என்ன சொல்றாங்க? "எங்களுக்குப் பிடிக்கலை. கவர்ன்மென்ட் ஆர்டர் போட்டா போடட்டும். அதுக்காக எங்க வழக்கத்தை மாத்த முடியுமா? அதனாலதான் குழந்தைங்க கையில மதிய சாப்பாடு கொடுத்துவிடுகிறோம்," என்றார்.

குமுதம் ரிப்போர்ட்டர், 13.01.2002

**சிந்தனைக்கான கேள்விகள்**

- சத்துணவு தயாரிக்கும் பெண், பட்டியலின சாதியைச் சார்ந்தவர் என்பதால், ஏன் சாப்பிட மறுக்க வேண்டும்?
- ஒரு மனிதரைச் சாதி அடிப்படையில் அவமதித்தல் எவ்வகையான மனநிலை?

**உங்களுக்குத் தெரியுமா?**

தீண்டாமையைக் கடைப்பிடிப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

- பிரிவு - 17, இந்திய அரசமைப்புச் சட்டம்

### 5. கொத்தடிமைக் குழந்தைகள்:



"இந்தக் குழந்தைகள் ஒன்பது வயசிலிருந்தே தறியில் வேலை செய்றாங்க. அவங்க வேலைக்குச் சேர்ந்ததும் மூவாயிரம் ரூபாய் அட்வான்சா கொடுத்துருவாங்க. அதுவே நம்மள அடமானம் வெச்சமாதிரிதான். காலையிலே ஏழு மணியிலிருந்து ராத்திரி வரைக்கும் தொடர்ந்து

தறியடிக்கணும். ஐம்பது ரூபாயிலிருந்து அறுபது ரூபாய் வரைதான் சம்பளம் கிடைக்கும். அட்வான்சைத் திருப்பிக் கொடுக்கிற வரை இதிலிருந்து மீளமுடியாது. இதேமாதிரி எவ்வளவு குழந்தைகள் அடமானம் வைக்கப்பட்டு காஞ்சிபுரத்தில் கிடக்கிறாங்க தெரியுமா?" என்கிறார் பாதிக்கப்பட்ட ஒருவர்.

**உங்களுக்குத் தெரியுமா?**

மனிதர்களை விற்பது வாங்குவது உள்ளிட்ட அனைத்து வகையான கொத்தடிமை முறைகள் தடைசெய்யப்பட்டுள்ளன. - பிரிவு - 23, இந்திய அரசமைப்புச் சட்டம்

"ஒரு வருசத்திற்கு முன்பு அடமானம் வைக்கப்பட்ட சிறுமி கொடுமை தாங்காம தீ வச்சிக்கிட்டு செத்துப் போயிருச்சு. இன்னொரு பெண் குழந்தை கழுத்துக் காயத்தோடு வேலைக்குப் போகுது. பதினெட்டு மணிநேரத்திற்கு மேலே குழந்தைகள் வேலை பார்த்தாகணும். இந்தக் கொடுமையால் எத்தனைக் குழந்தைங்க இறந்தார்கள் என்று தெரியுமா?

*- குமுதம் ரிப்போர்ட்டர், 18.09.2001*

**சிந்தனைக்கான கேள்விகள்**

1. குழந்தைகள் கொத்தடிமைகளாகும் போது அவர்களின் மாண்பு என்வாயிற்று?
2. இதுபோல் குழந்தைகள் கொத்தடிமைகளாக உள்ள சம்பவத்தைப் பார்த்திருக்கிறீர்களா? கேள்விப்பட்டுள்ளீர்களா? இதுகுறித்து உரையாடுங்கள்
3. கொத்தடிமைக் குழந்தைகள் எவ்வாறெல்லாம் துன்புறுத்தப்படுகிறார்கள்? இவர்கள் பல்வேறுபட்ட மக்களாக இருக்கலாம். ஆனால் இம்மக்களுக்குள்ள பொதுப் பண்பு எது? அதுதான் மாண்பு. மனித மாண்பு மறுக்கப்படும்போது மக்களின் வாழ்வும் வாழ்வுரிமையும் மறுக்கப்படுகின்றன.

**குழந்தைகளே!**

மேற்கண்ட நான்கு நிகழ்வுகளைக் கலந்துரையாடிய பிறகு உங்களுக்கு என்ன தோன்றுகிறது? மனித மாண்பின் முதன்மையை உணர்ந்துள்ளீர்களா? மனித மாண்பு, அடிப்படை மனித உரிமைக் கோட்பாடாகும். மனிதர்கள் அனைவரும் மரியாதைக்குரியவர்கள். ஏனெனில் அவர்கள் மனிதர்கள். மனிதர்களை வயது, பாலினம், பண்பாடு, சமயம், பிறப்பிடம், நிறம், இனம், மொழி, இயலாமை, திறன், சமூகத் தகுநிலை, அரசியல் நிலைப்பாடு என எந்தவகை காரணிகளாலும் பாகுபாடு காட்டக் கூடாது." அனைவரும் சமமாக மதிக்கப்படக் கூடியவர்களே?

## பயிற்சிகள்

### 1. அடிப்படைச் சொற்கள் (வாசித்தல் பயிற்சி)

| | | |
|---|---|---|
| புத்தர் | காந்தி | அம்பேத்கர் |
| சிலை | களிமண் | தங்கம் |
| சாதி | உயர்வு | தாழ்வு |
| பள்ளி | சத்துணவு | தீண்டாமை |
| குழந்தை | அடமானம் | கொத்தடிமை |
| சமத்துவம் | உரிமை | மாண்பு |



### 2. யார்? எது? எப்படி? ஏன்?

1) தேநீர்க் கடைகளில் இரட்டைக் குவளைமுறை இருப்பது சட்டப்படி குற்றம் (ஆம் / இல்லை)

விடை : ________________

2) பள்ளிக்கூடத்தில் தீண்டாமை என்பது ____________ (நிரப்புக)

அ வ ____ ம்

அ நி ____ ம்

### 3. பள்ளியில் குழந்தைகள் அனைவரும் சமமாக அமர்ந்து மதிய உணவு சாப்பிடத் தடையாக உள்ளவர்கள் யார்?

1) தலைமை ஆசிரியர்

2) குழந்தைகள்

3) பெற்றோர்

### 4. கொத்தடிமைகள் எவ்வளவு ரூபாய்க்கு அடமானமாக வைக்கப்பட்டனர்?

விடை : ________________

### 5. கொத்தடிமைகள் எவ்வளவு நேரம் வேலை பார்க்க வேண்டும்?

விடை : ________________

### 6. திருநர்களைச் சமமாக மதிக்க வேண்டும் (ஆம் / இல்லை)

விடை : ________________

### 7. பின்வரும் வார்த்தைகளை உரக்க வாசியுங்கள்

| | | |
|---|---|---|
| சாதிவெறி | திமிர் | தீண்டாமை |
| அகந்தை | மனிதப் பண்பு | சமத்துவம் |
| உரிமை | அன்பு | மனித மாண்பு |

1. இவற்றில் உனக்குப் பிடித்த இரண்டு வார்த்தைகளை எடுத்து எழுது.

____________________ ____________________

2. உனக்குப் பிடிக்காத இரண்டு வார்த்தைகளை எடுத்து எழுது.

____________________ ____________________

## 8. பின்வரும் தொடர்களில் உள்ள செயல்களைக் கவனி

1) எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து உண்பது ______________

2) நீ என்ன சாதி? என்று கேட்பது ______________

3) அப்பாவியைக் கண்டால் கேலி செய்வது ______________

4) ஆசிரியர் அனைத்து மாணவர்களையும் சமமாக நடத்துவது ______________

5) நண்பர்கள் அடிக்கடி வீட்டுக்கு வருவது ______________

பிடித்த செயல்

பிடிக்காதசெயல்

## 9. உங்களுக்கு நேர்ந்தவற்றைப் பகிர்ந்து கொள்ளலாம்!

இப்பாடத்தில் மனித மாண்பு என்றால் என்னவென்று தெரிந்துகொண்டீர்கள். உங்களை அல்லது உங்களுக்குத் தெரிந்த நபர்களை தரக்குறைவாக நடத்திய, பேசிய நிகழ்வுகள் இருந்தால் வகுப்பறையில் பகிரவும்.

## 10. நாடகமாக நடித்துக் காட்டலாம்!

மனித மாண்பைப் பாதுகாக்கும் வகையில் நம்மிடம், வகுப்பில், குடும்பத்தில், ஊரில் ஏற்படவேண்டிய மாற்றங்கள் குறித்த கதை ஒன்றை நாடகமாக ஆக்கி வகுப்பில் நிகழ்த்திக் காட்டுங்கள்.

### உங்களுக்குத் தெரியுமா?

- 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை எந்தத் தொழிற்சாலையிலும், சுரங்கத்திலும், பிற ஆபத்தான தொழிலிலும் ஈடுபடுத்தக்கூடாது.

பிரிவு - 24, இந்திய அரசமைப்புச் சட்டம்

- குழந்தைத் தொழிலாளர் முறைஒழிப்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டப்படி குழந்தைகளின் நலனை மையப்படுத்தித் தொழில்கள் இருக்க வேண்டுமேயன்றி, தொழிற்சாலைகளின் நலன்களை மையப்படுத்திக் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது.




# 5. முன்தீர்மானம்

> "ஒருவரைப் பற்றியோ அல்லது ஒரு சமூகக் குழுவைப் பற்றியோ முன்கூட்டியே ஒரு தப்பான, இழிவான, தாழ்வான கருத்தைத் தீர்மானித்துக் கொண்டு அதையே சரியென்று நியாயப்படுத்தும் மனநிலை; அந்த மனநிலையோடு அந்த நபரை அல்லது சமூகக் குழுவை அணுகுவது முன்தீர்மானமாகும்."

**நோக்கங்கள்:**

- முன் தீர்மானம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
- முன் தீர்மானம் என்பதன் அடிப்படைக் கூறுகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- முன் தீர்மானத்தினால் நாம் வாழும் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்து கொள்ளுதல்.

**குழந்தைகளே!**

முந்தைய பாடங்களில் மனிதர்கள் பல்வேறு இனம், சமயம், மொழி, பண்பாடு, உடை, உணவுமுறைகள் என எண்ணற்ற வகைகளில் வேறுபட்டவர்களாக இருந்தாலும் நாம் அனைவரும் சமமானவர்கள் என்பதைப் படித்தோம். அதேநேரத்தில் மேற்கண்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மக்களில் சிலரை நாம் எதிர் மனநிலையுடன் அணுகுகிறோம். அவ்வாறு அணுகும்போது இயற்கையான வேறுபாடுகளை ஏற்க மறுத்து, அதனையே காரணமாகக் கொண்டு அவர்களுக்கெதிரான தப்பான எண்ணங்களை வளர்த்துக் கொள்கிறோம். இத்தப்பான எண்ணங்களைத்தான் நாம் முன்தீர்மானம் அல்லது முன்முடிவு என்கிறோம். நம் மனதில் இவ்வெதிரான எண்ணங்கள்

எவ்வாறு வளர்கின்றன என்றும் அதன் பாதிப்புகளைத் தக்க சான்றுகளுடன் இப்பாடத்தில் சில உரையாடல்கள் வாயிலாகப் புரிந்துகொள்வோம்.

### முன்தீர்மானம் என்பது

"ஒருவரைப் பற்றியோ அல்லது ஒரு சமூகக் குழுவைப் பற்றியோ முன் கூட்டியே ஒரு தப்பான, இழிவான, தாழ்வான கருத்தைத் தீர்மானித்துக் கொண்டு அதையே சரியென்று நியாயப்படுத்தும் மனநிலை; அந்த மனநிலையோடு அந்த நபரை அல்லது சமூகக் குழுவை அணுகுவது."

## முன்தீர்மான எண்ணங்களும் அவற்றின் வெளிப்பாடுகளும்

### உரையாடல் 01

| | | |
|---|---|---|
| மனைவி | : | நம்ம பையன பக்கத்துல இருக்குற பள்ளிக்கூடத்திலே சேர்க்கலாமா? |
| கணவன் | : | என்னது, கவர்மென்ட் ஸ்கூல்லயா? வேண்டாம்மா |
| மனைவி | : | வீட்டுக்கு பக்கத்துல இருக்கு. பையனுக்கு சிரமமில்லாம இருக்குமே. |
| கணவன் | : | வேண்டாம்மா, அந்த பள்ளிக்கூடத்தில படிக்கிற பசங்க ரொம்ப மோசம். அந்த ஏரியாவுல இருந்து வர்றவங்க மோசமானவங்க. நம்ம பையன் அவர்களோடு சேர்ந்தா கெட்டுப் போய்விடுவான். |
| மனைவி | : | அதெல்லாம் தப்பு, அப்படிச் சொல்லாதீங்க, எல்லாக் குழந்தைகளும் நல்லவங்கதான். நீங்க அவங்கமேல தவறான எண்ணம் வெச்சிருக்கீங்க. யாரைப் பத்தியும் தெரிஞ்சிக்காம, பழகாம அவங்களைப் பத்தி தப்பாப் பேசக்கூடாது. இதற்குப் பெயர் தான் முன்முடிவு அல்லது முன்தீர்மானம். |

### உரையாடல் 02

| | | |
|---|---|---|
| மாணவன் 1 | : | நீ அவன் கூட பேசாத |
| மாணவன் 2 | : | ஏன்டா அவனோட பேசக் கூடாது? |
| மாணவன் 1 | : | அந்தத் தெருக்காரங்க எல்லோரும் சண்டைக்காரங்க! |
| மாணவன் 2 | : | அப்படியெல்லாம் இல்லை, அவன் நல்லவன் தான்டா! |
| மாணவன் 1 | : | அவனுங்க சுத்தமாகவே இருக்க மாட்டானுங்கடா! |
| மாணவன் 2 | : | உனக்கு என்ன கண் சரியாகத் தெரியலையா. அவங்க சுத்தமாகத்தானே இருக்காங்க! |
| மாணவன் 1 | : | போகப் போகப் பாரு, அவன் ஒருநாள் தெருப் புத்தியைக் காட்டுவான். |

மாணவன் 2 : அவன் என் நண்பன்டா, அவனப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். உன்னுடைய மனசுலதான் அழுக்கு இருக்கு. அதனால யாரைப் பார்த்தாலும் தப்பான எண்ணத்தோடு பார்ப்பது தவறு. முதலில் எல்லோரையும் சமமாக மதிக்கணும். எல்லோரிடமும் சமமாகப் பழகணும்.

**சிந்தனைக்கான கேள்விகள்**

- அந்தத் தெருக்காரங்க சண்டைக்காரங்க (உண்மை அல்லது முன்தீர்மானம்)
- அவங்க சுத்தமாகவே இருக்கமாட்டாங்க (உண்மை அல்லது முன்தீர்மானம்)
- அவங்க எப்போதுமே பொய் பேசுவாங்க (உண்மை அல்லது முன்தீர்மானம்)
- பேசாமல், பழகாமல் முழுமையாகத் தெரியாமல் ஒருவரைப் பற்றி முடிவு செய்யலாம் (உண்மை அல்லது முன்தீர்மானம்)

## உரையாடல் 03 (மதிய உணவு இடைவேளையின் போது)

மாணவன் 1 : டேய், ஏன் தனியா உட்காந்திருக்க. இங்க வந்து எங்களோட சேர்ந்து சாப்பிடு.

மாணவன் 2 : டேய் அவனைக் கூப்பிடாதடா, அவனோட நாம சேரக் கூடாது!

மாணவன் 1 : ஏன்டா, அவனும் நம்ம கூடத்தானே படிக்கிறான்!

மாணவன் 2 : இல்லடா, அவன் கையில கட்டியிருக்கிற கயிறப் பாரு, வேற கலர்.

மாணவன் 1 : அதற்கு என்ன?

மாணவன் 2 : அது வேறு சாதி கயிறுடா

மாணவன் 1 : அப்போ, சாதி அடையாளத்திற்காகத் தான் எனக்கு இந்தக் கலர் கயிற அன்னைக்குக் கட்டினியா?

மாணவன் 2 : ஆமாடா, மத்தவங்களோட நாம சேரக் கூடாது. நம்மோட சேர்த்துக்கவும் கூடாது.

மாணவன் 1 : இப்படி சாதியை அடையாளப்படுத்துற எந்த கயிறும் எனக்குத் தேவையில்லடா. நீயே வச்சுக்கோ நான் எல்லோருடனும் சமமா பழகனும்னு நினைக்கிறேன். (தூரத்தில் உள்ள மாணவனை அழைத்துச் சாப்பிட அமருகிறார்கள்)

## சிந்தனைக்கான கேள்விகள்

- பள்ளியில் படிக்கும் தன் நண்பர்கள் அனைவருடனும் சேர்ந்து சாப்பிடத் தடையாக இருப்பது எது?
- இம்மாதிரியான சூழலில் உன் நண்பன் பாதிக்கப்பட்டால் என்ன செய்வாய்?



மேற்கண்ட நிகழ்வுகள் மூலம் நாம் அறியும் உண்மைகள் என்ன? எப்படி முடிவு செய்கிறோம்? முன்தீர்மானக் கருத்துகள் நம்மிடம் நிறைய இருக்கின்றன. பிறரோடும் பிற குழுக்களோடும் பழகும்போது இக்கருத்துகளை மனதில் வைத்துக் கொண்டு பேசத் தொடங்குகிறோம். இத்தகைய மனநிலை நம்மிடையே நல்ல நிலைமையில் உறவை ஏற்படுத்தாமல் நமக்குள்ளே பிரிவினைகளை உருவாக்குகிறது.

## முன்தீர்மானத்திற்கான காரணிகள்

1. **அறியாமை:** பிறர் கூறுவதைப் பற்றிக் கேள்வியே கேட்காமல் அதை அப்படியே உண்மையென்று நம்புவது.
2. **வதந்திகள்:** வதந்திகள் உண்மைதானா என்று கேட்டறியாமல் நம்புவது. பாரம்பரிய பேச்சுவழக்கு, பழமொழிகள், கதைகள், விடுகதைகள் தரும் செய்திகள் போன்றவற்றை அப்படியே உள்வாங்குவது. ஒரு சாராரை அல்லது குழுவினரை அவர்கள் அப்படித்தான் எனப் பொதுமைப்படுத்தி பேசுவது.
3. **பொறாமை:** ஒருவர் மீது கொண்ட பொறாமையால் அவர் மீது எப்பொழுதும் தவறான எண்ணம் கொண்டிருப்பது.
4. **தகு நிலை:** ஆதிக்க சாதி எனத் தங்களைக் கருதுபவர்கள் பிறரைத் துச்சமாகக் கருதுவது; தாழ்வாக மதிப்பது; இளக்காரமாகப் பேசுவது; சாதிப் பெருமை போன்று பணம், பதவி, அதிகாரத்தினால் கிடைக்கும் பெருமைகளும் பலவேளைகளில் காரணங்களாக அமையலாம்.

## மூடநம்பிக்கையால் பெற்ற மகனைத் தீ வைத்து எரித்துக் கொன்ற தந்தை

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் பகுதியைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் ஒருவருக்கு 5 வயதில் ஒரு மகன், 3 மாத ஆண் குழந்தை என இரு குழந்தைகள் இருந்தனர். சோதிடம், மூடநம்பிக்கை போன்றவற்றில் மிகுந்த நம்பிக்கையுடையவராக அவர் இருந்தார். அண்மையில் ஒரு

சோதிடரிடம் சென்று சாதகம் பார்த்துள்ளார். உங்கள் சாதகப்படி உங்களுக்கும் உங்கள் மூத்த மகனுக்கும் ஆகாது. இரண்டு பேரும் ஒன்றாக இருந்தால் ஒத்துப்போகாது என்று சொன்னதுடன் மகனால் உயிருக்கும் ஊறு நேரிடலாம் என்று கூறியிருக்கிறார்.



சோதிடர் கூறியது முதல் மகன் மீது வெறுப்புடன் இருந்து தொடர்ந்து துன்புறுத்தியும் வந்துள்ளார். “சோதிடர் வார்த்தையை நம்பி குழந்தையைத் துன்புறுத்தாதே”, என்று மனைவி கண்டித்துள்ளார். ஆனாலும் மகனைத் துன்புறுத்தியதுடன் ஒரு கட்டத்தில் தனது 5 வயது குழந்தை மீது மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்துள்ளார். தீப்பற்றி அலறித் துடித்த குழந்தையை அக்கம்பக்கத்தினர் மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். ஆனால் மருத்துவம் பலனின்றி அக்குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது. மூடநம்பிக்கையால் அந்த பிஞ்சுக் குழந்தை பல சித்திரவதைகளுக்கு ஆளானதுடன் இறந்தும் விட்ட பரிதாப நிலை.

***தினகரன், 4.3.2021***

## சிந்தனைக்கான கேள்விகள்

- மூடநம்பிக்கைகள் பற்றி உங்களுக்குத் தெரிந்ததைக் கூறவும்.
- உங்கள் பகுதியில் உள்ள சில மூடநம்பிக்கைகள் குறித்து கலந்துரையாடவும்.
- மூட நம்பிக்கையின் பாதிப்புகள் குறித்து வகுப்பில் பகிரவும்.
- மூடநம்பிக்கைகள் ஒழிய மாணவர்களாகிய நீங்கள் என்ன செய்யலாம்?

## உங்களுக்குத் தெரியுமா?

### *சமூக ஊடகங்களில் பரப்பப்படும் வதந்திகள்*



சமூக ஊடகங்களின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. புலனம் (வாட்ஸ்-அப்), முகநூல் உள்ளிட்ட சமூக ஊடகங்களைப் பயன்படுத்தாதவர்களே இல்லை என்று சொல்லலாம். நகர்ப்புறங்களைக் காட்டிலும் கிராமங்களில் இதன் பயன்பாடு அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 2018ஆம் ஆண்டுக் குறிப்பின்படி கிராமங்களில் புலனம் (வாட்ஸ்-அப்) மூலம் பரப்பப்படும் வதந்திகளின் அளவு இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாக ஓர் ஆய்வு தெரிவிக்கின்றது. அதிலும் குழந்தைகள் கடத்தல் மற்றும் பசுவதை போன்ற வதந்திகள் பரப்பப்பட்டு எண்ணற்ற தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. 29விழுக்காட்டினர் புலனத்தில் (வாட்ஸ்-அப்) வரும் தகவல்களை உண்மையா என்று அறியாமல் அப்படியே நம்புகின்றனர். வதந்திகள் மிக மோசமான எதிர்மறை எண்ணங்களையும், விளைவுகளையும் சமூகத்தில் உருவாகக் காரணமாக உள்ளன.

## சிந்தனைக்கான கேள்விகள்

- சமூக ஊடகங்களில் வரும் செய்திகளை அப்படியே நம்புவது சரியா?
- சமூக ஊடகங்களின் நன்மைகள், தீமைகள் பற்றி வகுப்பில் கலந்துரையாடவும்.
- தான் எதிர்கொண்ட அல்லது தெரிந்தவருக்கு நேர்ந்த வதந்திகள் குறித்த பாதிப்புகளைப் பகிரவும்.

### பலியிடப்படும் கருத்தம்மாக்கள்:

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள மொட்டனூத்து எனும் ஊரில் உள்ள ஒரு குடும்பத்தினர்க்கு ஏற்கெனவே இரண்டு பெண் குழந்தைகள் உள்ள நிலையில் மூன்றாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்ததால் அக்குழந்தைக்குக் கள்ளிப்பால் ஊற்றிக் கொன்று புதைத்துவிட்டனர். ஊரில் பிறந்த குழந்தைகளின் உடல்நலத்தை அவ்வப்போது ஆய்வுமேற்கொண்டு தக்க வழிகாட்டலைக் கொடுத்துவரும் செவிலியர் ஒருநாள் தனது வழக்கமான ஆய்வின் போது ஒரு பெண் குழந்தை இல்லாததைக் கண்டு 1098 என்ற எண்ணுக்கு தகவல்

கொடுத்ததன் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டபோது அந்தக் குழந்தைக்குக் கள்ளிப்பால் கொடுத்துக் கொன்றது தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து குழந்தையின் தாய், பாட்டி(அப்பத்தா) ஆகிய இருவரையும் காவல்துறையினர் கைதுசெய்து சிறையில் அடைத்தனர். இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் பெண் குழந்தைகளை மூடநம்பிக்கைகளுக்குப் பலியிடப் போகிறார்கள்?



*- ஜூனியர் விகடன், 20.03.2020*

## சிந்தனைக்கான கேள்விகள்

- ஏன் இன்றும் பெண் குழந்தைகள் கொல்லப்படுகின்றனர்?
- பெண்ணும் ஆணும் சமம் என்று கூறும் அதேநேரத்தில் பெண் குழந்தைகள் மீது நிகழும் தொடர் வன்முறைகளுக்கான காரணங்கள் என்ன?
- கருத்தம்மா என்ற திரைப்படத்தைப் பார்த்துள்ளீர்களா? அதன் கதையை வகுப்பில் கலந்துரையாடவும்.
- நம் சமூகத்தில் பெண் சிசுக் கொலையைத் தடுக்க மாணவர்கள் என்ன செய்யலாம்?

## உங்களுக்குத் தெரியுமா?

***"பிப்ரவரி 24 பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாள்"***

பாலினத்தைத் தெரிவு செய்வதைத் தடை செய்யும் சட்டம் - 1994-இன்படி கருவில் இருப்பது பெண் குழந்தை என்பதை ஒரு மருத்துவர் தெரிவித்தால் அவருக்கு மூன்றாண்டுகள் முதல் ஐந்தாண்டுகள்வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். குழந்தையின் பாலினத்தை அறிய சோதனை நிலையங்களை அணுகும் பொதுமக்களுக்கும் மூன்றாண்டுகள் சிறைத் தண்டனையும், இத்துடன் தண்டத் தொகையும் விதிக்கப்படும்.

**முன்தீர்மானம் கருத்துக்கள் எங்கிருந்து உருவாகின்றன?**




**குடும்பம்:**

பெற்றோர், சகோதர, சகோதரிகள், அத்தை, மாமா, சித்தி, சித்தப்பா உள்ளிட்டோரைச் சுற்றித் தானே குழந்தைகள் வாழ்கின்றனர். இக்குழந்தைகள் தன்னை அறியாமலேயே, குடும்பத்தில் மூத்தோரின் பழக்கவழக்கங்களை, மதிப்பீடுகளை கருத்துக்களை அப்படியே உள்வாங்கிக் கொள்கின்றனர்.

**சமயங்கள்:**

முன் தீர்மானக் கருத்துக்களை உருவாக்குவதில் சமயம் மிக முதன்மைப்பங்கு வகிக்கிறது. சமயத்துள் கடவுள் மட்டும் இருப்பதாக எண்ணக்கூடாது. ஒவ்வொரு சமயத்திற்கும் தனிப்பட்ட வழிபாட்டுமுறை, உணவு, உடை, பழக்கவழக்கங்கள் போன்றவை உண்டு. குழந்தைகள் இச்சமயச் சூழலில் வளர்க்கப்படுகின்ற போது, இச்சடங்குகளின் படி வாழவே தூண்டப் பெறுகின்றனர். இச்சடங்குகளே உயர்ந்தவை, நாம் வணங்கும் கடவுளே உயர்ந்தது என்ற கருத்து குழந்தைப் பருவத்திலேயே சொல்லித் தரப்படுகின்ற போது, பிற சமயஞ் சார்ந்த அனைத்தையும் இக்குழந்தை தவறாகப் பார்க்கிறது.

**நண்பர் வட்டம்:**

குடும்பச் சூழலில் வளரும் குழந்தைகள் பெரியவராகின்ற போது பள்ளிக்கூடம், கல்லூரி, விடுதி, பணி செய்யும் இடம் போன்றவற்றில் பலதரப்பட்ட மக்களைச் சார்ந்திருக்கின்றனர். சிறியவட்டம் பெரிதாகிறது.

சிலருக்குப் புதிய நேர்வுகள், புதிய கருத்து போன்றவை மாற்றத்தைத் தருகின்றன. சிலர், உலகினுள் நுழைகின்ற போது தான் சார்ந்த சாதி, மதக் குழுவினரோடு மட்டும் உறவுகொண்டு, ஏற்கெனவே குடும்பத்தில் பெற்ற மதிப்பீடுகளை, பார்வைகளை இங்கு நியாயப்படுத்தி நிலைப்படுத்துகின்றனர்.

**வெகுசன ஊடகங்கள்:**

திரைப்படங்கள், அச்சு ஊடகங்கள் மூலம் முன் தீர்மானக் கருத்துகள் வலுப்படுத்தப்படுகின்றன. சாதியக் கலவரங்கள், சமயச் சண்டைகள் போன்ற நிகழ்வுகளைச் சித்தரிக்கின்ற போதும், கதைகள் சொல்லுகின்ற போதும் சில குறிப்பிட்ட சமூகங்களின் தனிப்பட்ட குணங்களை மிகையாக அல்லது எதிராகச் சித்தரித்தல்.

இன்றைய அறிவியலின் மிகப்பெரும் வளர்ச்சியின் ஒரு வெளிப்பாடான சமூக ஊடகங்களின் பங்கு இன்றைய சமூகத்தில் தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. சமூக ஊடகங்கள் மக்களுடனான தொடர்பை எளிமைப்படுத்தியுள்ளன. தகவல் பரிமாற்றம் மிகவும் எளிமையாகியுள்ளது. காலங்காலமாக தனியுடைமையாகி வந்த அறிவுசார் தகவல்கள் இன்று அனைவர்க்குமானதாக மாறியுள்ளன. ஏராளமான நன்மைகள் இருந்தாலும் அதிலும் பாதிப்புகள் இருக்கத்தான் செய்கின்றன. அதிலும் பொய்யான பரப்புரைகள், வதந்திகள், அவதூறுகள், வெறுப்புப் பேச்சுகள் போன்றவை மக்களிடம் எதிர்மறையான எண்ணங்களை வளர்க்கின்றன. எனவே, எதிர்மறையான கருத்துகளைப் புறந்தள்ளி, சமூக நல்லிணக்கத்திற்கு வெகுமக்கள் ஊடகங்களை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவோம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

- “இனம், நிறம், பாலினம், மொழி, சமயம், அரசியல், தேசியம், இயலாமை, பிறப்பு இவற்றின் அடிப்படையில் குழந்தைகள் மீது பாகுபாடு காட்டப்பெறல் கூடாது” பிரிவு-2, ஐ.நா.வின் குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கை - 1989.
- “பெண்கள் மீது சமூக, பண்பாட்டு மரபுவழியாக உருவாக்கப்பட்டிருக்கும் முன்தீர்மானக் கருத்துகளைப் போக்க அரசு முயல வேண்டும்”.

  பிரிவு-5, ஐ.நா.வின் பெண்கள் மீதான அனைத்துவகைப் பாகுபாட்டிற்கெதிரான உலகளாவிய உடன்படிக்கை

## பயிற்சிகள்

### 1. புதிய சொற்களைப் பழகுவோம்

முன்தீர்மானம், அறியாமை, பொறாமை, வதந்தி, தகுநிலை, சமவாய்ப்பு, அவதூறு, பரப்புரை

### 2. பேசலாம் வாங்க!

குழந்தைகளே! உங்கள் பகுதியில் பிறரை எதிர் எண்ணங்களுடன் பேசியதைக் கேட்டுள்ளீர்களா? ஆம் எனில் எம்மாதிரியான முன்தீர்மானக் கருத்துகள் அதில் பொதிந்துள்ளன என்பதை வகுப்பறையில் பகிரவும்.

### 3. கட்டுரை ஒன்றை எழுதுக

முன்தீர்மானக் கருத்துகளுக்கெதிராக மாணவர்கள் என்ன செய்ய வேண்டும்?

### 4. பாடல் பாடுவோம்!

பாடல் ஒன்றை எழுதி வகுப்பில் பாடவும். "முன்தீர்மானம் ஒரு சமூகக் கேடு" என்ற கருத்தை மையப்படுத்தி, குழுவாகப் பிரிந்து பாடல் எழுதி வகுப்பறையில் குழுவாகப் பாடவும்.

### 5. மேடைப் பேச்சு தயார் செய்யவும்

"முன்தீர்மானம் ஒரு சமூகத் தொற்று" என்ற தலைப்பில் மேடைப் பேச்சு தயார் செய்து வகுப்பறையில் பேசவும்.

### 6. சரியான விடையைத் தெரிவு செய்யவும்

- வதந்தியை நம்பி ஒருவரைப் பற்றி முடிவு செய்யலாம்.
  (உண்மை அல்லது முன்தீர்மானம்)
- அறியாமையால் பிறர் கூறுவதை அப்படியே கேட்டு நம்புவது
  (உண்மை அல்லது முன்தீர்மானம்)
- மூத்தோரின் அறியாமை, பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அப்படியே செய்வது (உண்மை அல்லது முன்தீர்மானம்)
- திரைப்படங்கள், சமூக ஊடகங்கள், இதழ்கள் மூலம் வெளிப்படும் முன் தீர்மானங்கள் கருத்துகள் (சரி அல்லது தவறு)

1. ..

2. ..

3. ..

4. ..



# 6. புண்படுத்தும் சொற்களும் துன்புறுத்தும் செயல்களும்

**பிறர் உங்களை நோக்கி வீசும் அனைத்து எதிர்மறைகளாலும் நீங்கள் சோர்வாகி விடாதீர்கள். பிறரின் விரும்பத்தகாத சொற்களும், செயல்களும் உங்களை வீழ்த்த விடக்கூடாது.**

**நோக்கங்கள்:**

- துன்புறுத்தும் செயல்களை எடுத்துக்காட்டுகளுடன் தெரிந்து கொள்ளுதல்.
- புண்படுத்தும் சொற்கள், துன்புறுத்தும் செயல்கள் ஆகியவற்றின் விளைவுகளைப் புரிந்து கொள்ளுதல்.
- ஊக்கப்படுத்தும் சொற்களையும் செயல்களையும் வாழ்நெறியாக்க வழிகாட்டல்.

***ஆசிரியர் மாணவர்களின் கலந்துரையாடல்:***

ஆசிரியர் : குழந்தைகளே! நாம் இன்றைக்கு எந்த ஊருக்குச் சுற்றுலா போறோம்னு தெரியுமா?

குழந்தைகள் : ஆம். தெரியும் அய்யா, சென்னைக்குச் சுற்றுலாவா போறோம்!

ஆசிரியர் : சென்னையில் என்னவெல்லாம் பார்க்கலாம்னு சொல்லுங்களேன்.

குழந்தைகள் : நான் சொல்றேன், நான் சொல்றேன்

ஆசிரியர் : ஒவ்வொருவராகச் சொல்லுங்க!

குழந்தைகள் : வண்டலூர் விலங்கியல் பூங்கா, மெரினா கடற்கரை, கிண்டி பூங்கா, தலைவர்கள் நினைவிடங்கள், வடபழனி முருகன் கோவில், சாந்தோம் தேவாலயம், சென்னை விமான நிலையம் இன்னும் பல இடங்கள்.

ஆசிரியர் : ஆகா! நிறைய இடங்களைச் சொல்லியிருக்கீங்க. பார்ப்போம். நாம இப்ப எந்தச் சாலையில் பயணம் செய்கிறோம்னு தெரியுமா?

குழந்தைகள் : தெரியும் அய்யா. தேசிய நெடுஞ்சாலையில் பயணம் செய்கிறோம். சாலையில் குறிப்பிட்ட இடைவெளியில் 1330 குறள்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர் : நன்று. நம் பயணத்தில் சில குறள்களையும் அதன் விளக்கங்களையும் பார்ப்போமா? வள்ளியூர் நகரைக் கடந்தவுடன் ஒரு குறள் எழுதப்பட்டிருக்கிறது. அதில் புண்படுத்தும் சொல் குறித்து வள்ளுவப் பெருந்தகை இவ்வாறு கூறுகிறார்.

**திருக்குறள்**

**"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு"**

மேற்கண்ட குறளின் பொருள் என்னவெனில் தீயினால் ஏற்படும் காயத்தின் தழும்பு இருந்தாலும் உள்காயம் ஆறிவிடும். ஆனால் தீய சொல்லால் உண்டாகும் வடு என்றும் ஆறாமல் நம் மனதை வருத்திக் கொண்டே இருக்கும்.

குழந்தைகள் : நல்லா சொன்னீங்க, அய்யா

ஆசிரியர் : நம்ம வீட்டில், பள்ளியில் நம்மிடம் அனைவரும் நல்லபடியாக பேசினால் நம்ம மனதும் நல்லா இருக்கும். அதே நேரத்தில் நம்மைப் புண்படுத்தும் படி பேசினால் நாம் சோர்ந்து போயிடுவோம்தானே. ஒரு செயலைச் செய்தவுடன், நம்மை யாராவது பாராட்டினால் நாம் ரொம்ப மகிழ்ச்சியடைவோம்.

அச்செயலை இன்னும் சிறப்பாகச் செய்யணும்னு எண்ணம் ஏற்படும். அதுவே நாம் ஒரு செயலைச் செய்யும் போது நம்மை யாராவது மட்டம் தட்டினால் நாம் முயற்சி செய்வதைக் கைவிட்டு விடுகிறோம்.

குழந்தைகள் : இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள் அய்யா?

ஆசிரியர் : கடந்த பாடத்தில் முன் தீர்மானம் பற்றி படித்திருந்தோம் தானே. அதில் முன் தீர்மானக் கருத்துகள் உருவாக முதன்மைக் காரணங்களான அறியாமை, வதந்தி, பொறாமை, தகுநிலை போன்றவற்றைப் படித்திருப்போம் அல்லவா! அதன் வெளிப்பாடுகளாகத் தான் புண்படுத்தும் சொற்களாகப் பிறர் மீது உமிழ்கிறோம். இது ஒரு மோசமான மனித உரிமை மீறல். அடுத்து ஒரு குறளைப் பார்ப்போமா?

**திருக்குறள்**

**“இனிய உளவாக இன்னாத கூறல்”**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.”**

இனிய சொற்கள் இருக்கும் போது அவற்றை விட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும் போது அவற்றை விட்டுக் காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.

ஆசிரியர் : ஒருவரைப் புண்படுத்துகிறோம் என்றால் நாம் அவர்களைப் பத்தி இழிவாக எண்ணுகிறோம் என்று தானே பொருள். சான்றாக, சாதிப் பெயர் சொல்லி வசவு வார்த்தைகளைப் பலரும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவதைப் பார்த்திருப்போம். அவை மட்டுமல்ல, வேறு எவ்வகையிலெல்லாம் நாம் பிறரைப் புண்படுத்துகிறோம்?

குழந்தைகள்

குழந்தை 1 : பாலின வேறுபாடு

குழந்தை 2 : தோற்றம், நிறம் போன்றவை

குழந்தை 3 : செய்யும் தொழில் வைத்து

குழந்தை 4 : திருமண நிலை, பிறப்பிடம், வாழ்நிலை, உடல்நிலை போன்றவை. இவ்வாறு பல வகைகளில் பிறரைப் புண்படுத்தும் சொற்களை வெளிப்படுத்துகிறோம்.

ஆசிரியர் : சரியாகச் சொன்னீங்க. உங்கள் வாழ்க்கையில் உங்களைப் புண்படுத்தும் நோக்கில் சொற்களை யாராவது பயன்படுத்தியுள்ளனரா? ஆம் எனில் அது உங்கள்



குடும்பத்தில்

வகுப்பில்

நண்பர்கள் குழுவில்

விளையாடும் இடத்தில்

தெருவில்

வழிபாட்டுத்தலங்களில், பிற இடங்களில் நடைபெற்றதா என்பதை எண்ணிப் பாருங்கள்.

உங்கள் வீட்டில் அல்லது ஊரில் பிறர் மீது எவ்வகையான வசைச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் அதற்கான காரணங்களையும் உங்களுக்குத் தெரிந்த அளவில் ஒவ்வொருவராகச் சொல்லவும்.

உங்களுக்கும் இதுபோன்ற அனுபவங்கள் இருந்தால் வகுப்பில் பகிரவும்.

குழந்தை 3 : பெண்களும் ஆண்களுக்கு நிகரானவர்களே. அவ்வாறு இருக்கும் போது பெண்களை இழிவுபடுத்துவதும், கேலி செய்வதும் அன்றாடம் நடக்கிறதே! ஏன் அய்யா?

ஆசிரியர் : சரியா கேட்டாய்! நான் ஆண்; அதனால் எனக்கு நீ அடிமை என்ற மோசமான எண்ணங்களும் முன்தீர்மானக் கருத்துகளும் இதற்குக் காரணமாக அமைகின்றன. இதனால் நம் சமூகம் கண்டிப்பாக மேம்பாடு அடையாது என்பதே உண்மை. அப்படி இருக்கும் போது பிற்போக்கான எண்ணங்களையும் அதனால் விளையும் புண்படுத்தும் சொற்களையும் நம் மனதிலிருந்து தூக்கி எறிவது தானே சரியாக இருக்கும். குழந்தைகளாகிய நாம் தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில் மனித உரிமைகளின் அடிப்படையே மற்றவர்களை மதித்தல் என்பதாகும். ஒருவருடைய மனதைப் புண்படுத்துவதும் ஒரு வகை மனித உரிமை மீறல்தான்.

## உங்களுக்குத் தெரியுமா?

"இனம், மொழி, சாதி, சமயம், பாலினம், வட்டாரம், பொருளாதாரம், உடல் நிலை, பிறப்பிடம் போன்ற எவற்றின் அடிப்படையிலும் யாரையும் பாகுபடுத்தக் கூடாது"

- பிரிவு - 15, இந்திய அரசமைப்புச் சட்டம்

## குழந்தைகளே! நீங்கள் புரிந்து கொள்ள சில நிகழ்வுகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

**கமலாவின் கதை:**



ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் கமலா என்னும் மாணவி கருப்பாக இருப்பாள். அவளுக்குப் பற்கள் கொஞ்சம் நீளமாகவும் இருக்கும். அவள் எப்போதும் சோர்ந்து காணப்படுவாள். அவளை ஆசிரியை விசாரித்த போது அவளது வீட்டில் பெற்றோரும் உறவினர்களும் இவளது தோற்றத்தை வைத்துத் திட்டுவது வழக்கம் என்பது தெரிய வந்தது. இவளுக்கு வயது ஐந்து இருக்கும் போது இவளுடைய தங்கை இறந்து போனாள். அவள் செக்கச் செவேலென்று இருப்பாளாம். அப்போது கமலாவின் பெற்றோர் கமலாவைப் பார்த்து, "இந்தச் சனியன் செத்திருக்கக் கூடாதா? என்னுடைய அழகான பிள்ளையை ஆண்டவன் எடுத்துக்கிட்டானே" என்று கூறிய சொற்கள் கமலாவின் உள்ளத்தில் ஆழமான காயத்தை ஏற்படுத்தின. அன்றிலிருந்து அவள் அந்தச் சொற்களை நினைத்து வாழ்வில் சோர்ந்து விட்டதாகவும், எந்த இறப்புச் செய்திகளைக் கேட்டாலும் தன் பெற்றோர் கூறிய கடும் சொற்கள் நினைவிற்கு வருவதாலும் அழுகிறேன் என்று ஆசிரியையிடம் பகிர்ந்து கொண்டாள்.

குழந்தை 1 : கமலாவின் நிறத்தை வைத்துப் பாகுபடுத்துவது சரியா?

பதில் ______________________________

குழந்தை 2 : நிறம் தகுதிக்கான அளவுகோலா?

பதில் ______________________________



**ஆசிரியர்** : மாணவர்களாகிய நீங்கள்தான் இதற்கு விடை காண வேண்டும். உங்களுக்கும் இதுபோன்ற அனுபவங்கள் ஏற்பட்டதுண்டா?

அடுத்து ஒரு நிகழ்வைப் பார்ப்போமா? புண்படுத்தும் சொற்கள் பல நேரங்களில் நம் மனதில் ஆறாத வடுவை ஏற்படுத்தும். மட்டம் தட்டும் சொற்களையும் அதன் பாதிப்புகளையும் பார்ப்போமா?

## மட்டம் தட்டும் சொற்கள்




அழகிப்பட்டி உயர்நிலைப் பள்ளி. மதிய உணவு நேரம். ஆங்காங்கே வளர்ந்திருக்கும் மர நிழலில் மாணவர்கள் கூட்டங் கூட்டமாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களுள் முத்து, பாண்டி, வேலு மூவரும் தனியே ஒரு குழுவாக ஓரிடத்தில் சாப்பிடுவார்கள். இம்மூவரும் நல்ல நண்பர்கள். எப்போதும் சேர்ந்தே இருப்பர்; சேர்ந்தே பள்ளிக்கு வருவர்; சேர்ந்தே வீட்டுக்குப் போவர். பள்ளியில் பொதுவான விளையாட்டுகளில் மற்ற மாணவர்களோடு சேர்ந்து விளையாடினாலும், சாப்பிடும் போது மட்டும் தனியாகத்தான் சாப்பிடுவர். சாப்பிடும் போது தம் பள்ளி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வர்.



ஒருநாள், இவர்கள் எப்போதும் தனியாக அமர்ந்து சாப்பிடுவதைக் கண்ட தலைமையாசிரியர், ஏன் நீங்க மூணு பேர் மட்டும் தனியாகவே உக்காந்து சாப்பிடுறீங்க என்று கேட்டார். மூவருக்கும் எப்படிப் பதில் சொல்வதென்று தெரியவில்லை. தைரியமாகச் சொல்லுங்கப்பா என்று தலைமையாசிரியர் மீண்டும் கேட்டார். முத்து எழுந்து "மற்ற மாணவர்கள் எங்களைக் கேலி செய்றாங்க, அதனாலதான்" என்றான். "ஏன் கேலி செய்றாங்க?" என்று தலைமையாசிரியர் கேட்ட போது, "எங்களிடம் சுத்தம் இல்லையாம்; எங்கள் உணவு சுத்தமில்லாத உணவாம்; எங்களிடம் ஒழுக்கம் இல்லைன்னு ரொம்ப மோசமாக கேலி செய்றாங்க. மற்ற மாணவர்கள், எங்களை எப்போதும் ஒதுக்கியே வைக்கிறாங்க. நல்லா தேர்வு எழுதி நிறைய மார்க் வாங்கினாலும், காப்பியடிச்சிருப்பீங்க என்று கேலி செய்கிறாங்க" என்று சொன்னான்.

## வகுப்பறை உரையாடல்

குழந்தை 1 : பாகுபாட்டு உணர்வுடன் கேலி பேசுவது சரியான செயலா அய்யா?

குழந்தை 2 : ஒதுங்குதல், ஒடுக்குதல் என்றால் என்ன அய்யா?

ஆசிரியர் : பிறர்படும் வேதனையை எப்போதாவது உணர்ந்துள்ளீர்களா? ஒவ்வொருவராகப் பேசவும்.

நாம் எப்போதும் பேசும் சொற்களில் ஒரு சொல் தீய சொல்லாக இருந்து பிறருக்கு துன்பம் விளைவிக்குமானால் அப்பேச்சில் உள்ள நல்ல சொற்களும் தீயவையாகி விடும் என்றார் வள்ளுவப் பெருந்தகை.

ஒன்றானுந் தீச்சொல் பெருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும் - குறள்

புண்படுத்தும் சொற்களும் மனித உரிமை மீறலே என்று நாம் இதுவரை பார்த்தோம்.

இதுவரை நாம் புண்படுத்தும் சொற்கள் அவற்றின் விளைவுகள் ஆகியவற்றைப் பார்த்தோம். அடுத்து ஊக்கப்படுத்தும் சொற்களால் நாம் எவ்வாறு வலுப்பெறுகிறோம் என்று பார்க்கப் போகிறோம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

உடல் ரீதியான, மன ரீதியான மற்றும் பாலியல் வன்முறைகள், சுரண்டல், புறக்கணித்தல், அவமானப்படுத்துதல் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கப்பட ஒவ்வொரு குழந்தைக்கும் உரிமையுண்டு.

- பிரிவு - 19, குழந்தை உரிமைகளுக்கான ஐ.நா.வின் உடன்படிக்கை - 1989

## ஊக்கப்படுத்தும் சொற்கள்



இராணி பத்தாம் வகுப்பில் படிப்பவள். மிகவும் துடிப்பானவள். எல்லாத் திறமைகளும் அவளிடம் இருந்தன. எப்போதும் வகுப்பில் முதல் மாணவியாகத் திகழ்பவள். நாடகம் நடிப்பது என்றால் அவளுக்கு மிகவும் பிடிக்கும். எந்தவொரு செயலையும் முன்னின்று நடத்தும் தலைமைப் பண்பு உடையவள். இவள் ஒருமுறை தன் குழு

நண்பர்களுடன் தன்னுடைய வளர்ச்சியைப் பற்றி பகிர்ந்து கொண்டாள்.



“நான் ஐந்து வயதாயிருக்கும் போது என் சித்தி என்னைப் பார்த்து நீ உன் பெயரைப் போலவே எப்போதும் இராணியாய் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்க எப்போதும் முயற்சி செய்ய வேண்டும்” என்று தட்டிக் கொடுத்தார்கள். அன்று முதல் என் உள்ளத்தில் ஒரு புதுத்தெம்பு ஏற்பட்டது. இன்று எல்லாவற்றிலும் முன்னுக்கு வர வேண்டும் என்ற ஆவல் என்னுள்ளத்தில் உள்ளது. இதற்குக் காரணம் எனது சித்தியின் உற்சாகப்படுத்திய சொற்கள்தான் என்று பெருமிதமாகக் கூறினாள்.

ஆசிரியர் : இராணியை ஊக்கப்படுத்திய சொற்கள் எவை?

______________________________

ஆசிரியர் : உங்களை ஊக்கப்படுத்திய சொற்கள் எவை?

______________________________

## கனவுகள் மெய்ப்பட

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் குழந்தைகளிடம் உரையாடும் போது, “அன்பான மாணவர்களே, கனவு காணுங்கள்”, என்று சொல்லுவார். “அதாவது உறக்கத்தில் வருவதல்ல கனவு, உன்னை உறங்க விடாமல் செய்வது தான் கனவு.”



ஒவ்வொரு மாணவனும் மாணவியும் தாம் என்னவாக ஆக வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்துக் கொண்டு அந்த நிலையை அடையும் வரை ஓய்வு இல்லாமல் உறக்கம் மறந்து தொடர்ந்து பாடுபட வேண்டும். அப்போதுதான் அவர்களின் இலக்கை எளிதாக அடைய முடியும் என்பது அவரின் கருத்தாக இருந்தது. இந்தியாவில் உள்ள பல இலட்சம் இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையில் வெற்றிகரமாகப் பயணிக்க அப்துல் கலாம் அவர்களின் தன்னம்பிக்கை அளிக்கும் சொற்கள் ஊக்கமாக இருந்தன என்றால் மிகையாகா.

## சிந்தனைக்கான கேள்விகள்

- அப்துல் கலாம் அவர்களின் ஊக்கப்படுத்திய சொற்கள் எவை?

  பதில் : ______________________________

- கனவு என்பது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று அப்துல் கலாம் கூறினார்?

  பதில் : ______________________________

- இலக்கை அடைய நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அப்துல் கலாம் கூறினார்?

  பதில் : ______________________________

## துன்புறுத்தும் செயல்கள்

குழந்தைகளே! முந்தைய பாடத்தில் முன்தீர்மான எண்ணங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்று பார்த்தோம். முன்தீர்மான எண்ணங்கள் எவ்வாறு மோசமான வார்த்தைகளாக வெளிப்படுகின்றன என்பதைப் பற்றியும் பார்த்தோம். இப்பாடப் பகுதியில் சொற்கள் எவ்வாறு செயல்களாக மாறுகின்றன என்று பார்க்கப் போகிறோம்.




துன்புறுத்தும் செயல்கள் என்பன “ஒரு குழுவால் அல்லது தனியொருவரால் ஒரு குழு மீது அல்லது தனியொருவர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் அல்லது மோசமாக நடந்து கொள்ளும் செயலாகும்”

பொதுவாகத் துன்புறுத்தல் என்பது பல வகையாக உள்ளன. அவை

1. வார்த்தை வழி துன்புறுத்தல்கள்
2. உடல் வழி துன்புறுத்தல்கள்
3. பாலியல் வழி துன்புறுத்தல்கள்
4. உணர்வு வழி துன்புறுத்தல்கள்

துன்புறுத்தல் என்பது தாக்குதல், காயத்தை ஏற்படுத்துதல், கடுந்துன்பம் உருவாக்குதல், தொல்லை கொடுத்தல், ஒதுக்குதல், தனிமைப்படுத்துதல், சிறை வைத்தல், அச்சம், கடுமையான வலியை ஏற்படுத்துதல் போன்றவையாகும்.

துன்புறுத்தும் செயல்களை மேலும் புரிந்து கொள்ள செய்தித்தாள்களில் வந்த சில உண்மை நிகழ்வுகளைப் பார்ப்போமா? இவ்வுண்மை நிகழ்வுகளுக்கான காரண காரியங்களைக் குழுவாக அமர்ந்து கலந்துரையாடவும்.

### நிகழ்வு - 01

உத்தரப்பிரதேச மாநிலம், மொராதாபாத்தில் திருமணமான 3 மாதங்களில் கணவர் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார். இந்த நிலையில் பெண்ணின் கணவர் வீட்டார், வரதட்சணை கேட்டு நாள்தோறும் சித்திரவதை செய்ததுடன், தலையை மொட்டை அடித்துத் துன்புறுத்தியுள்ளனர்.



### நிகழ்வு - 02

அம்பத்தூர் அருகே உள்ள மீனம்பேடு என்ற பகுதியில் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பேர் மது குடித்துக் கொண்டிருந்தனர். அதற்கு அருகில் உள்ள வீட்டைச் சார்ந்த இரண்டரை வயது குழந்தை ஒன்று



விளையாடிக் கொண்டிருந்தது. அக்குழந்தையை அழைத்த இருவரும் அக்குழந்தையை மது குடிக்க வைத்துள்ளனர். குழந்தையைக் காணாத அக்குழந்தையின் அம்மா குழந்தையைத் தேடிய போது தொழிலாளர்கள் அருகில் குழந்தை இருந்தது. குழந்தையைத் தூக்கிய போது மது வாடையும் மயக்கமும் இருந்துள்ளது. குழந்தையின் அம்மா உடனே காவல் துறையிடம் புகார் தெரிவித்ததன் அடிப்படையில் மது கொடுத்த இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## நிகழ்வு - 03

“என் பேர் முருகன், தேனி மாவட்டம் பெரியகுளம் பக்கத்தில் உள்ளது என்னுடைய ஊர். எங்க ஊர்ல நிறைய பையன்கள் ஆந்திராவில் உள்ள பல முறுக்கு கம்பெனிகளில் வேலைக்குப் போயிருக்காங்க. என்னையும் ஒரு நபர் வந்து கேட்டார். வீட்ல கஷ்டமா இருந்ததால எங்கம்மா 20 ஆயிரம் வாங்கிக் கொண்டு என்னை ஆந்திராவில் உள்ள முறுக்கு கம்பெனிக்கு வேலைக்கு அனுப்பினாங்க. போனவுடன் கொஞ்ச நாள் நல்லா இருந்தது. அப்புறம்தான் தெரிந்தது. அது எவ்வளவு மோசமான நரகம் என்று.

நான் காலையில நாலு மணிக்கு எழுந்து வேலையை ஆரம்பிக்கணும். காலையிலேயும் மத்தியானமும் கொஞ்ச நேரம் தான் சாப்பிட விடுவாங்க. மத்த நேரம் முழுவதும் வேலை செஞ்சிக்கிட்டே இருக்கணும். வேலையில சின்னத் தப்புன்னா கூட அடிப்பாங்க. தூங்க இராத்திரி 11 அல்லது 12 மணி ஆகும். மத்தவங்க மாதிரி நாங்க வெளியில போக முடியாது. ஒரு முறை முதலாளி நான் சரியா வேலை செய்யலன்னு சொல்லி, முறுக்கு வெந்துட்டு இருக்கிற எண்ணெயை என் உடம்புல ஊத்திட்டாரு. சூடான எண்ணெய். உடம்பு முழுவதும் வெந்துடுச்சி. தயவு செய்து யாரும் வேலைக்குப் போகாதீங்க. பள்ளிக்கூடத்துக்கு போங்க.

– முறுக்கு கம்பெனிக்கு வேலைக்குப் போன ஒரு சிறுவனின் வாக்குமூலம்

**உங்களுக்குத் தெரியுமா?**

சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறையில் இல்லாமல் வேறு விதத்தில் ஒருவரின் உயிரையோ அல்லது அவரின் தனி மனித சுதந்திரத்தையோ பறிக்கக்கூடாது.

– பிரிவு 21, இந்திய அரசமைப்புச் சட்டம்

மேலே பார்த்த நான்கு நிகழ்வுகளைப் படித்திருப்பீர்கள். இப்போது கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைப் படித்து வகுப்பில் பகிர்ந்து கொள்வோம்.

## சிந்தனைக்கான கேள்விகள்

1. வரதட்சணை கேட்டுத் துன்புறுத்துவது சரியான செயலா?
2. வரதட்சணை வாங்குவது பற்றி உங்கள் கருத்து என்ன?
3. குழந்தைக்கு மதுவை ஊற்றிய செயலை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?
4. குழந்தைகளுக்குப் போதைப் பொருட்களைக் கொடுப்பதால் எவ்வகையான பாதிப்புகள் ஏற்படுகின்றன?
5. வீடுகளில் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை நிகழ்வுகள் நடைபெறுகின்றனவா?
6. எந்தெந்த வகைகளில் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் நிகழ்கின்றன?
7. குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதால் அவர்கள் இழக்கும் உரிமைகள் என்னென்ன?
8. உங்கள் பகுதியில் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனரா?
9. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிய உங்களது பரிந்துரைகள் என்ன?

இப்பாடத்தில் புண்படுத்தும் சொற்கள், துன்புறுத்தும் செயல்கள் யாவும் மனித உரிமை மீறலே என்று பார்த்தோம். அகில உலக மனித உரிமை உடன்படிக்கைகளும், நம் நாட்டு சட்டங்களும், நம் அரசமைப்புச் சட்டமும் உரிமை மீறல் இல்லாத சமத்துவ சமூகத்தை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. ஆனால் சமூக ஒற்றுமைக்குத் தொடர்ந்து சவாலாகப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவை பற்றி அடுத்தப் பாடமான “பிளவுபடும் சமூகம்” என்ற பாடத்தில் பார்ப்போம்.

### எது பாதுகாப்பான தொடுதல்?

தவறான தொடுதல் எது என்பதை உணர்ந்து குழந்தைகள் அவற்றை தவிர்க்க வேண்டும். குழந்தைகளே! உங்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் தொடுதல்கள் பாதுகாப்பற்ற தொடுதல் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் உடலைத் தொட யாருக்கும் உரிமையில்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். பாதுகாப்பற்ற தொடுதல் சம்பவங்கள் நிகழ்கையில் உடனே உங்கள் பெற்றோர், தலைமையாசிரியர் அல்லது பள்ளி ஆசிரியர் அல்லது குழந்தைகள் உதவி எண் 1098க்குத் தெரிவிக்க வேண்டும். உங்களுக்குப் பாதிப்பு ஏற்படும்போது அதனை வெளியே சொல்லாமல் அமைதி காத்தால் அது உங்களுக்கு மேலும் அதிகமான, மோசமான பாதிப்புகளையே ஏற்படுத்தும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

## நம் உடல் உறுப்புகளைத் தெரிந்து கொள்வோம்




## பயிற்சிகள்

**1. புதிய சொற்களைப் பழகுவோம்**

| | | |
|---|---|---|
| தொடுதல் | திட்டு | குழந்தைத் தொழிலாளர் |
| வரதட்சணை | சோர்வு | உரிமை மீறல் |
| ஊக்கம் | பாராட்டு | தெம்பு |
| ஆவல் | உற்சாகம் | முயற்சி |

**2. உன் வாழ்க்கையில் உன்னை ஊக்கப்படுத்திய சொற்களைப் பட்டியலிடுக.**

| ஊக்கப்படுத்தியவர்கள் | ஊக்கப்படுத்திய சொற்கள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

**3. உன் வாழ்க்கையில் உன்னைக் காயப்படுத்திய சொற்களைப் பட்டியலிடுக.**

| காயப்படுத்தியவர்கள் | காயப்படுத்திய சொற்கள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

**4. சமூகத்தில் பிறரை எவ்வாறெல்லாம் புண்படுத்துகிறார்கள்? எடுத்துக்காட்டுகளுடன் வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.**

1) பாலின வேறுபாடு

2) தோற்றம்

3) தொழில்

4) திருமண நிலை

5) பொருளாதார நிலை

6) பரம்பரை

7) பெயர்

8) சாதி

9) சமயம்

10) வட்டாரப் பேச்சு வழக்கு

**5. பிறரை உற்சாகப்படுத்தும் சொற்களை அல்லது சொற்றொடர்களை எழுதி, வகுப்பில் படித்துக் காட்டவும் (உம்.) நீ கெட்டிக்காரி.**

| | |
|---|---|
| 1. | 2. |
| 3. | 4. |
| 5. | 6. |
| 7. | 8. |
| 9. | 10 |

### 6. தொடரும் சொற்கள்

ஒரு சொல்லைத் தொடர்ந்து வரும் மற்ற சொற்களைக் கண்டறிக.

| | | | |
|---|---|---|---|
| 1. | சூடு | கா___ம் | த______பு |
| 2. | புண் | வ___ | க______ர் |
| 3. | சாதி | உய______ | தா___வு |
| 4. | சாதி வெறி | அக___பா___ம் | கொ___மை |
| 5. | சிறுவன் | அ___ச்___ல் | அவ______ப்பு |
| 6. | ஏழை | ஏ___ள___ | கே___ |
| 7. | பள்ளி | ந___பு | அ___பு |
| 8. | சாதி | பி___வு | ச___டை |
| 9. | சொல் | செ___ல் | வா______கை |
| 10. | மனிதன் | உ___மை | மா___பு |

### 7. மனிதத் தன்மையற்ற செயல்களை வட்டமிட்டுக் காட்டவும்

1. தேநீர்க் கடையில் சிலருக்கு மட்டும் தனிக் குவளையில் தேநீர் தருதல்
2. ஒருவரைப் பார்த்து கேலியாகச் சிரித்தல்
3. நட்புடன் சிரித்தல்
4. பாகுபாடு இல்லாமல் பழகுதல்
5. சிறுவர்களை விற்பனை செய்தல்
6. சிறுவர்களுக்குச் சூடு போடுதல்
7. சாதிப் பாகுபாடு பார்த்தல்
8. கூடி விளையாடுதல்

### 8. ஊக்கப்படுத்தும் சொற்களைத் தனியே வட்டமிட்டுக் காட்டவும்

1. பெஞ்சு மேல் ஏறு !
2. நீ உருப்பட மாட்டாய் !
3. நிச்சயம் வெற்றி பெறுவாய்!
4. நன்று ! அப்படித்தான் !
5. உன் கையெழுத்து அழகாக இருக்கிறது!
6. தோல்வியை நினைத்துக் கலங்கக் கூடாது!

**9. ஒவ்வொரு குழுவிலும் தேவையற்ற ஒரு சொல் உள்ளது. அதை அடித்து விட்டுப் பொருத்தமான சொல்லை எழுது.**

| | | | |
|---|---|---|---|
| (எ.டு) | பள்ளி | சாதி | மாணவர் |
| | (1) முயற்சி | உற்சாகம் | வசவு |
| | (2) மலர் | செடி | சுடுகாடு |
| | (3) அறிவு | முயற்சி | கேடு |
| | (4) சமூகம் | மனிதர்கள் | சாதி |
| | (5) அறிவியல் | கட்டுக்கதை | வளர்ச்சி |

**10. நாடகமாக நடித்துக் காட்டலாம்!**

குழந்தைகளே!

புண்படுத்தும் சொற்கள், செயல்கள் ஒரு வன்முறை ஆகும். இத்தகைய வன்முறை மனித உரிமை மீறல் என்பதைக் குறிப்பிடும் கதைகளை மையப்படுத்தி நாடகம் ஒன்றை உருவாக்கி வகுப்பறையில் நிகழ்த்திக் காட்டுங்கள்.





# 7. பிளவுபடும் சமூகம்

**இனம், நிறம், பிறப்பு, சாதி, தேசிய இனம், பாலினம், வசிப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுத்திப் பார்ப்பது, பிரிவினையை ஏற்படுத்துவது, ஒதுக்குவது, கட்டுப்பாடு விதிப்பது, முன்னுரிமை அளிப்பது போன்றவை பாகுபாடு ஆகும்.**

**நோக்கங்கள்:**

- சமூக வாழ்வின் தேவையைப் புரிந்து கொள்ளல்.
- மனிதன் சமூகத்தில் பிறக்கிறான்; வாழ்கிறான்; சமூகத்தில்தான் மடிகிறான் என்பதை உணர்ந்து கொள்ளல்.
- மனிதனுக்கு சமூக வாழ்வு என்பது இயல்பானது என்பதனை அறிந்து கொள்ளல்.

**குழந்தைகளே!**

முதல் மூன்று பாடங்களில் மனிதர்களின் இயல்புகள், அனைவரும் பன்மைச் சமூகத்தில் கூட்டாக வாழக் கூடியவர்கள் என்று கடந்த பாடங்களில் பார்த்தோம். அதே நேரத்தில் முன் தீர்மானக் கருத்துகளும் தொடர்ந்து புண்படுத்தும் சொற்களும், செயல்களும் எவ்வாறு சமூகத்தைப் பிளவுபடுத்தி உள்ளன என்பதைப் பார்த்தோம். இப்பாடத்தில் நம் சமூகம் எவ்வாறெல்லாம் பிளவுபட்ட சமூகமாக உள்ளது என்பதைப் பார்ப்போம்.

நம்நாடு இயற்கையான பல வேறுபாடுகளை உள்ளடக்கிய பன்முகப் பண்பாடு கொண்ட நாடு என்று ஏற்கெனவே பார்த்தோம். எதையெல்லாம்

நாம் பலம் என்று இதுவரை நினைத்து வருகிறோமோ அவையெல்லாம் இன்று இச்சமூகம் பிளவுபடக் காரணமாக உள்ளன.



சாதி, சமயம், மொழி, இனம், பாலினம் எனப் பல்வேறு கூறுகளால் ஒரு மனிதன் சக மனிதனைப் பாகுபடுத்துவதைப் பார்க்கிறோம். உரிமைகள் அனைத்தும் அனைவர்க்கும் உரியன என்று இந்திய அரசமைப்பு உத்தரவாதப்படுத்தியுள்ளது. ஆனால் மனிதர்களுக்குள் ஒரு சிலருக்கு உரிமைகள் முழுமையாகக் கிடைக்கின்றன. அதே வேளையில், பலருக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. உரிமைகள் மறுக்கப்படும் போது இச்சமூகம் பண்பட்டதாக இருக்குமா என்று சிந்தித்துப் பாருங்கள்.



## பாகுபாடு என்பது



இனம், நிறம், பிறப்பு, சாதி, தேசிய இனம், பாலினம், வசிப்பிடம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றின் அடிப்படையிலும் வேறுபடுத்திப் பார்ப்பதும், பிரிவினையை உண்டு பண்ணுவதும், ஒதுக்குவதும், கட்டுப்பாடு விதிப்பதும் (அல்லது) முன்னுரிமை அளிப்பதும் பாகுபாடு ஆகும்.

இந்த பாகுபாடு அரசியல், பொருளியல், சமூக, பண்பாடு போன்ற பொதுவாழ்வின் அனைத்துத் தளங்களிலும் வெளிப்படுவதாகவும், இப்பாகுபாடுகள் பல்வேறுபட்ட, மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மறுப்பதாகவும் அமையும் அல்லவா?



“இது ஒரு மனித உரிமை மீறல் தானே?”

சமூகத்தின் எதிர்மறையான பாகுபாட்டு எண்ணங்களால் சமூகம் எவ்வாறு பிளபடுகிறது என்பதை சில சான்றுகளுடன் பார்ப்போம்.

## நிகழ்வு - 1

நாகப்பட்டினம் மாவட்டம் திருநாள் கொண்டச்சேரியில் பட்டியல் சாதி மக்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வாழ்கின்றனர். பட்டியல் சாதி மக்களில் யாரேனும் இறந்தால் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் உள்ள கடலாழி ஆற்றங்கரையில் உள்ள சுடுகாட்டில்தான் அடக்கம் செய்யவேண்டும். சுடுகாட்டிற்குக் கொண்டு செல்ல சரியான சாலை வசதிகள் இல்லை. மிகுந்த இன்னலுக்கு இடையேதான் ஒவ்வொரு முறையும் இறந்தவர்களை அடக்கம் செய்யவேண்டும். இந்நிலையில் குஞ்சம்மாள், அவரது கணவர் 100 வயதுடைய செல்லமுத்து ஆகியோர் அடுத்தடுத்த சில மாதங்களில் இறந்தனர். இறந்தவர்களை மரியாதையுடன் அடக்கம் செய்ய பொதுப் பாதை வழியாகக் கொண்டு செல்ல வேண்டும் என்று முடிவெடுத்தனர். ஆனால் அங்கு வாழும் அதிக எண்ணிக்கையிலான பிற சாதியைச் சார்ந்தவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவே, பொதுப்பாதையில் கொண்டு செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

-நன்றி, விடுதலை இணைய இதழ்.

சாதிகள் இல்லையடி பாப்பா–குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்தமதி கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.
- மகாகவி பாரதியார்.



மேற்கண்ட பாரதியின் பாடலை வகுப்பறையில் அனைவரும் சேர்ந்து பாடி அதன் பொருளை அறிந்து கொள்ளவும்.

**சிந்தனைக்கான கேள்விகள்**

இந்தியக் குடிமக்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமம். ஆனால், சிலருக்கு மட்டும் ஏன் பொதுப் பாதைகள், கிணறுகள், விளையாட்டுத் திடல்கள் போன்றவை மறுக்கப்படுகின்றன. இதனை வகுப்பறையில் கலந்துரையாடவும்.





**உங்களுக்குத் தெரியுமா?**

சமயம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் இந்தியக் குடிமகன் எவரையும் கட்டுப்படுத்துவதோ, ஒதுக்குவதோ, அல்லது நிபந்தனைக்கு உட்படுத்துவதோ கூடாது.

– பிரிவு-15 (2), இந்திய அரசமைப்புச் சட்டம்

## நிகழ்வு - 2

என் பெயர் பிரபா. 1990 ஆம் ஆண்டு எனக்குத் திருமணம் நடந்தது. 1999 ஆம் ஆண்டு திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பால் என் கணவர் இறந்தார். எனக்கு ஏழு வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. நான் என் பெற்றோர் வீட்டுக்குச் சென்று அம்மாவுடன் தங்கிக் கொண்டேன். ஒருநாள் நான்

தண்ணீர் எடுக்கக் குடத்தை எடுத்தேன். உடனே என் தாய், “இன்னும் சிறிது நேரம் கழித்துச் செல், காலை நேரமாக இருப்பதால் இப்போது ஊரார் எல்லோரும் குளத்திற்கு வருவர், நம்மைப் பார்த்தால் அபசகுனம் எனக் கூறுவர்; நான் சொல்வதைக் கேளம்மா”, என்றாள்.




**சிந்தனைக்கான கேள்விகள்**

- கணவரை இழந்த பெண் சாலையில் எதிரே வந்தால் ஏன் அபசகுனம் என்று சொல்கிறார்கள்?
- மூடநம்பிக்கை, சடங்கு, பழக்கவழக்கங்கள் அடிப்படையில் மனிதர்களைப் பாகுபடுத்துவது சரியா?
- இது போன்ற நிகழ்வுகளை உங்கள் பகுதிகளில் பார்த்ததுண்டா? ஆம் எனில் வகுப்பில் கலந்துரையாடவும்.

## நிகழ்வு - 3

இன்று நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் உணவின் பெயரால் தாக்குதல்களும் கொலைகளும் நிகழ்ந்து கொண்டே வருகின்றன. இந்த நாட்டில் உள்ள மக்கள் பல்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்டவர்கள். அனைவரும் ஒரே வகையான உணவுகளை உண்பவர்கள் அல்ல. பல்வேறு வகையான உணவு முறைகளைக் கொண்ட மக்கள் வாழ்கின்றனர்.

மாநிலத்திற்கு மாநிலம் உணவு முறைகள் வேறுபடும். சிலர் மரக்கறி உணவுகளை உண்பர். பலர் இறைச்சி உணவையும் சேர்த்து உண்பர். இது அவரவர் உரிமை. ஆனால் இன்று உணவின் பெயரால் பலவகையான தாக்குதல்கள் அதிகரித்து வருவது கவலை அளிக்கும் செயலாகும். நாம் உண்ணும் உணவை யார் முடிவு செய்வது? நாம் தானே. இன்று உணவின் பெயரால் நடைபெறும் தாக்குதல் இந்திய அரசமைப்பு வலியுறுத்துகிற பன்மைச்சமூகத்திற்கு விடுக்கப்பட்ட அறைகூவலாகவே உள்ளன.

### சிந்தனைக்கான கேள்விகள்

- உணவின் பெயரால் தாக்குதல் நடத்துவது சரியா?
- ஒருவரின் உணவுப் பழக்க வழக்கத்தைப் பிறர் மீது திணிப்பது சரியான செயலா?
- உங்களின் உணவு முறைகள் பற்றி வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.




இவ்வுலகில் பிறந்து வாழும் ஒவ்வொருவரும் செய்யும் தொழில் வேறு வேறாக இருக்கலாம். ஆனால் அனைவரும் சம தகுதியும், சம உரிமையும் வாய்க்கப் பெற்றவர்கள் என்று உலகப் பொதுமறையாம் திருக்குறள் உலகிற்குப் பறைசாற்றுகிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

என்றார் வள்ளுவப் பெருந்தகை.



குழந்தைகளே! சமூக வாழ்வு என்ற பாடத்தைக் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க. மனிதனைச் சமூக விலங்குன்னு பார்த்தோம். சமூகம் இல்லைன்னா மனிதனே இல்லைன்னு சொன்னோம். மனிதன் உறவை, சொந்த பந்தங்களைத் தேடுகிறவன் என்றெல்லாம் பார்த்தோமே. இரக்கம், அன்பு, பாசம் எல்லாம் உள்ளவன்னு சொன்னோமே, அவையெல்லாம் எங்கே போயிற்று?

நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள் என்று சொல்கிறோம். நாம் இந்நாட்டில் பல மொழிகள் பேசுகிறோம். பல சமயங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். நாம் என்றைக்காவது சண்டை போடவேண்டுமென்று நினைக்கிறோமா? இல்லையே. ஒற்றுமையாகத்தானே இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம்?

பள்ளிக் கூடத்திலே முருகன், முபாரக்கோடும், முபாரக் ஜோசப்போடும் சேர்ந்து விளையாடுகிற போது, ஒரு போதும் சமயங்களைப் பார்க்கவில்லையே? ஒரே வகுப்பில் சேர்ந்து தானே உட்கார்ந்திருக்கிறோம். நாம் சமயத்தை வைத்து நம் நண்பர்களை உருவாக்கவில்லையே. ஆனால் சில இடங்களில் சமயத்தின் பெயரால் வன்முறைகளும் மனிதர்கள் கொல்லப்படுவதும் எதற்காக?

## உங்களுக்குத் தெரியுமா?

இந்தியக் குடிமக்கள் அனைவரும் அவரவர் மனசாட்சிப்படி அவர்கள் விரும்புகிற சமயத்தைப் பின்பற்ற உரிமை உண்டு. பொது அமைதி, சமூக ஒழுங்கு முறைமை, நலவாழ்வு ஆகியவற்றிற்கு உட்பட்டு, ஒருவர் ஒரு சமயத்தைத் தழுவவும், பின்பற்றவும், பரப்பவும் அனைவர்க்கும் உரிமையுண்டு.

- பிரிவு - 25, இந்திய அரசமைப்புச் சட்டம்

## பயிற்சிகள்

### 1. புதிய சொற்களைப் பழகுவோம்

பாகுபாடு, வேறுபாடு, குடிமக்கள், சமத்துவம், சகோதரத்துவம், நல்லிணக்கம், பன்மை, முன்னுரிமை, தீண்டாமை, ஆதிக்க உணர்வு, உணவுப் பழக்கம்

### 2. எழுதுவோம் பேசுவோம்

நாம் அனைவரும் இந்தியராக ஒற்றுமையாக ஒரே மனநிலையுடன் வாழத் தேவையானவை எவை எவை என்று தனித்தனியாக எழுதி வகுப்பில் பகிரவும்.

### 3. உரக்கச் சொல்வோம்




- இந்தியா ஓர் பன்மைச் சமூகம் என்பதில் பெருமிதம் கொள்வோம்.
- நம் தாய் மொழியைப் போற்றுவோம்.
- நாம் அனைவரும் சமயங்களால் வேறுபட்டவர்கள். ஆனாலும் சட்டத்தின் முன் நாம் அனைவரும் சமம்.
- சாதிவெறி என்பது நமது சமூகத்தைப் பிளவுபடுத்துகிறது. அது பண்பட்ட சமூகத்தை உருவாக்காது. சமூகத்தைப் பிளவுபடுத்தும் சாதிவெறியைத் தூக்கி எறிவோம். பண்பட்ட சமூகத்தை உருவாக்குவோம்.

- சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- ஆண் பெண் சரிநிகர் சமம் என்போம்.
- வேற்றுமையே நம் வலிமை.
- பன்மையைப் பாதுகாப்போம்; பாகுபாடுகளை வேரறுப்போம்.

### 4. குழுச் செயல்பாடு

நம் சமூகம் பிளவுபடாமல் "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற உணர்வை வெளிப்படுத்தும் ஓவியத்தைக் குழுவாக வரைந்து வகுப்பறையில் காட்சிப்படுத்திப் பகிர்ந்து கொள்ளவும்.

### 5. சொற்களால் மரத்தை வரைதல்

குழந்தைகளே! சமமான குழுக்களாகப் பிரிந்து ஒரு பெரிய மரத்தை வரையவும். அதில் இச்சமூகம் பிளவுபடாமல் இருக்கத் தேவையான கிளைகளை வரையவும். பிளவுப்படுத்தும் காரணங்களை வெட்டி அகற்றக்கூடிய கிளைகளை வரையவும். பின்னர் வகுப்பில் இதைப் பற்றிக் கலந்துரையாடவும்.



**6. மேடைப் பேச்சுக்கான தலைப்புகள் தரப்பட்டுள்ளன. தெரிவு செய்து பேசுக.**

குழந்தைகளே! சமமான குழுக்களாகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவும் .

- வேற்றுமையில் ஒற்றுமை
- ஒற்றுமையே நம் வலிமை!
- நாம் விரும்பும் சமத்துவச் சமூகம்
- சமய நல்லிணக்கம்
- தமிழால் ஒன்றிணைவோம்!
- நம்மைப் பிளவுபடுத்தும் பிரிவினை சக்திகள்

போன்ற தலைப்புகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து இரண்டு பக்கம் மேடைப் பேச்சு உருவாக்கவும்.

**7. படம் வரைக**

குழந்தைகளே! சமமான குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் நம் நாட்டின் பன்மைக் கூறுகளை (சமயம், மொழி, உணவு, உடை, விழாக்கள்) வரைந்து வகுப்பில் பகிரவும்.

**8. ஓரங்க நாடகம்**

உங்கள் பகுதியில் நிலவும் ஏதாவது ஒரு வேறுபாட்டை வைத்து ஓர் ஓரங்க நாடகம் நிகழ்த்தவும்.






# 8. இந்தியக் குடிமக்களாகிய "நாம்"

**சட்டத்துறை, நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை போன்ற அரசின் பல்வேறு அங்கங்களை அரசமைப்புச் சட்டம் உருவாக்குவதோடு நின்றுவிடுகிறது. இவற்றை மக்களும், அரசியல் கட்சிகளுமே சிறப்பாக இயங்க வைக்க முடியும்.**

**நோக்கங்கள்:**

- நமது உள்ளார்ந்த இயல்புகள் எவ்வாறு அரசமைப்பு தரும் உரிமைகளாகின்றன என்பதை அறிந்து கொள்ளல்.
- அரசாட்சிக்கும் மக்களாட்சிக்கும் இடையேயான வேறுபாட்டை அறிந்து மக்களாட்சியின் பெருமையைப் புரிந்து கொள்ளல்.
- இந்திய அரசமைப்பின் உயரிய மதிப்பீடுகள் பற்றி அறிந்து கொள்ளல்.

*குழந்தைகளே!*

இப்பாடத்தில் நாம் சனநாயகம் பற்றியும் சனநாயகப் பண்புகளை உள்ளடக்கிய மக்களாட்சி அரசமைப்பு, அரசமைப்பின் முகப்புரை பற்றியும் அறிந்து கொள்ளப் போகிறோம். கீழ்க்காணும் உரையாடலைக் கவனமாகப் படிக்கவும்.

ஆசிரியர் : முதல்ல சனநாயகம் என்றால் என்ன?

மாணவர் 1 : மக்கள் எல்லோர்க்கும் இடம் அளிப்பது

மாணவர் 2 : அனைவரும் பங்கேற்பது

மாணவர் 3 : சாதி, சமயம், இனம், பாலினம் பிறப்பிடம் என்று பார்க்காமல் அனைவரும் சமமாகக் கலந்து கொள்வது

மாணவர் 4 : கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்க அய்யா?

ஆசிரியர் : 18 வயது வந்தவர்கள் தேர்தல் நேரத்தில் வாக்களிக்கப் போவதைப் பார்த்துள்ளீர்களா?

மாணவர் 5 : பார்த்திருக்கோம் அய்யா.

ஆசிரியர் : சரியாகச் சொன்னீங்க! நம்நாட்டில் 18வயது நிறைவடைந்தவர்கள் அனைவரும் தாம் விரும்பிய ஒருவர்க்குத் தனது வாக்கைச் செலுத்த உரிமையுள்ளது. "ஒரு வாக்கு ஒரு மதிப்பு" என்பது நமது சனநாயகத்தின் அடிப்படையாகும். 18 வயது மட்டுமே இங்கு தகுதியாகப் பார்க்கப்படுகிறது. சாதி, சமயம், இனம், மொழி, பணம், பிறப்பிடம், நிறம், தகுநிலை என எதனடிப்படையிலும் ஒருவருக்கு ஓர் வாக்கு கூடுதலாக வழங்கப்படுவது இல்லை. மாறாக அனைவருக்கும் சமமாக ஓர் ஓட்டு மட்டுமே வழங்கப்படுகிறது. எவ்வளவுதான் பணம் வைத்திருந்தாலும் அவருக்கும் ஒரு வாக்கு; ஒரு எளிய ஏழைக்கும் ஒரு வாக்கு என்பதே சனநாயகம் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

மாணவர் 6 : சனநாயகம்ன்னா என்ன என்பதை அமெரிக்க நாட்டின் முதல் அதிபர் ஆபிரகாம் லிங்கன் அவர்கள் கூறியதைச் செய்தித்தாளில் படித்திருக்கேன் அய்யா. அதை அப்படியே சொல்றேன்.

**மக்களால்**
**மக்களுக்காக**
**மக்களே நடத்தும் ஆட்சிதான் சனநாயக ஆட்சி**
என்று கூறுகிறார்.

ஆசிரியர் : ஆட்சி அதிகாரம் அனைத்தும் மக்களை மையப்படுத்தியே உள்ளன. மக்கள் நலன்தான் முதன்மை. சரியாகச் சொல்லியுள்ளீர்கள். வாழ்த்துகள், குழந்தைகளே!

இப்ப நாம் சனநாயகம் என்ற வார்த்தை எப்படி உருவானது என்பதைப் பார்ப்போமா? சனநாயக ஆட்சியை ஆங்கிலத்தில் டெமாக்ரசி (Demoracy) என்று கூறுகிறோம்.

**டெமாக்ரசி** என்ற சொல் **டெமோஸ் (Demos)** கிராசியா **(Kratia)** என்ற சொற்களிலிருந்து உருவாகின. **டெமோஸ்**

என்பதற்கு **மக்கள்** என்றும் **கிராட்டோஸ்** என்பதற்கு ஆட்சி அதிகாரம் என்றும் பொருள். எனவே **மக்கள் அதிகாரம் கொண்ட ஆட்சி மக்களாட்சி** என அழைக்கப்படுகிறது.



## செப்டம்பர் 15 - பன்னாட்டு சனநாயக நாள்

ஆசிரியர் : குழந்தைகளே! சனநாயகம் பற்றி ஓரளவு புரிந்திருக்கும் என நினைக்கிறேன். அடுத்து சனநாயகத்தின் அடிப்படையான பண்புகளைக் கொஞ்சம் பார்ப்போமா?

**1. முழுமையான பங்கேற்பு**

மக்களின் முழுமையான பங்கேற்பை உத்திரவாதப்படுத்துவது

**2. சமமான வாக்குரிமை**




தேர்தலில் மக்கள் அனைவரும் எவ்விதப் பாகுபாடும் இன்றி சமமான வாக்குரிமை பெற்றிருக்க வேண்டும்.

**3. தேர்வு செய்வதற்கான உரிமை**

தேர்தலில் மக்கள் அனைவரும் தாங்கள் நம்பும் அல்லது விரும்பும் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான உரிமை உள்ளது.

**4. அனைவரையும் உள்ளடக்கியதாக இருத்தல்**

மக்கள் அனைவரையும் எவ்விதப் பாகுபாடுகளுக்கும் இடம் தராமல் ஒற்றுமையாக இருக்கச் செய்தல்.



**5. பன்முகத் தன்மையை மதித்தல்**

நாட்டில் உள்ள பன்முகத் தன்மையான மொழி, இனம், பாலினம், நிலப்பரப்பு, பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை மதித்து நடத்தல்.

**6. பதில் சொல்லும் அரசாங்கம் (Government)**

நாட்டு மக்களுக்குப் பதில் சொல்லும் கடமையுள்ள அரசாங்கம்தான் சனநாயக அரசு.

**7. வெளிப்படைத்தன்மையுள்ள அரசு**

அரசின் திட்டங்களில், அதன் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மை இருக்கும். மக்கள் அனைவர்க்கும் தெரியும் வகையில் அதன் செயல்பாடுகள் தெளிவாக இருக்கும்.

**8. மக்களின் உரிமைகளைக் காக்கும் அரசு**

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் தடுக்காமல் காக்கும் சட்டத்தின் ஆட்சிதான் சனநாயக அரசு.



குழந்தைகளே! கீழே கொடுக்கப்பட்டுள்ள உரையாடலைக் கவனமாகப் படிக்கவும். இவ்வுரையாடலைப் படித்த பிறகு உங்களால் மன்னராட்சிக்கும், மக்களாட்சிக்கும் உள்ள வேறுபாட்டை ஓரளவு புரிந்து கொள்ள முடியும். வாங்க உரையாடலுக்குள் செல்வோம்.

**குழந்தைகளே! இவ்வுரையாடலை வகுப்பில் நாடகமாக்கி நடித்துக் காட்டுங்கள்**

நாடகத்தின் தலைப்பு- மன்னராட்சியும் மக்களாட்சியும்

இடம் : வகுப்பறை

பங்கேற்பாளர்கள்: ஆசிரியர் மற்றும் மாணவர்கள்






இளங்கோ : அனைவருக்கும் வணக்கம். இப்போ நீங்க பார்க்கப்போற நாடகத்தின் பெயர் மன்னராட்சியா? மக்களாட்சியா? எல்லோரும் பாருங்க, மகிழ்ச்சியா இருங்க. ஆனால், சொல்ல வந்த கருத்தை மறந்திடாதிங்க.

பாரி : நம்மை இப்ப யாரு ஆள்றாங்க?

செழியன் : முதலமைச்சர்

இனியன் : இல்ல பிரதம அமைச்சர்

நீதி : சரி சரி. இந்த அமைச்சர்களை அமர்த்தியது யாரு?

பாரி : ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர்

இளங்கோ : ஆளுநரும் குடியரசுத் தலைவரும் யாரை வேணுமின்னாலும் தன் விருப்பப்படி அமர்த்தலாமா?

பாரி : அது முடியாது. எந்தக் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெறுகிறதோ அந்தக் கட்சியின் தலைவரைத்தான் நியமிப்பாரு.

இனியன் : இவங்களை யார் தெரிவு செய்றாங்க?

நீதி : நாம தான். யார் ஆட்சிக்கு வந்தால் நம் நாட்டுக்கு நல்லா இருக்கும் என்று நினைக்கிறோமோ அந்தக் கட்சிக்கு நாம்

வாக்களித்துத் தெரிவு செய்றோம். மக்களின் அதிகமான வாக்கைப்பெற்று பெரும்பான்மையாக வெற்றி பெற்றவங்க தான் ஆட்சிக்கு வர்றாங்க.



நீதி : இப்ப தான் முதன்மையான கட்டத்துக்கு வர்றோம்.. அப்போ நம்மை ஆளும் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது யாரு?

சுதந்திரம் : நாம தான். நாம் என்றால் மக்கள் தான்.

நீதி : அப்போ நம்மை ஆளுகிற அமைச்சர்களை, தலைவர்களை நம்ம விருப்பப்படி தேர்ந்தெடுக்கிறோம். வாக்கு மூலமாகத் தேர்ந்தெடுக்கிறோம். நாம இல்லன்னா யாரும் அமைச்சராக முடியாது, இல்லையா? இதைத்தான் மக்களாட்சின்னு சொல்றோம். நமக்கு யார் நன்மை செய்வாங்க, யார் நம்ம உரிமைகளைக் காப்பாத்துவாங்க என்பதை நாமே முடிவு செய்கிறோம். மக்களே மக்களுக்காக மக்களால் நடத்தப் பெறுகிற ஆட்சி - நாமே எல்லோரும் சேர்ந்து ஆட்சியை அமைக்கிறதுனாலதான் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்னு சொல்லுறோம்.

சுதந்திரம் : இன்னொரு சந்தேகமய்யா. மன்னர்கள்னு சொல்றீங்களே. மன்னர்னு ஒருத்தர் தானே இருக்க முடியும்? எல்லோரும் எப்படி மன்னராக முடியும்?

நீதி : மன்னர்னா ஒருத்தர் தான் இருக்க முடியும். உண்மை தான். மன்னராட்சியிலே எல்லா அதிகாரமும் ஒரு ஆளுட்டதான் இருக்கும். அவரத்தான் மன்னர்ங்கிறோம். மக்கள்

மன்னரைத் தேர்ந்தெடுக்கமாட்டாங்க. வழக்கமா ஒரு குடும்பத்தைச் சார்ந்தவங்களே பரம்பரை பரம்பரையா மன்னராயிருப்பாங்க.

பாரி : மன்னர் தப்பு செய்தா கேள்வி கேட்கலாமா? தவறுக்கு தண்டனையுண்டா?

நீதி : கேட்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. மன்னர் இப்படித்தான் ஆட்சி செய்யனும்னு சொல்ல மக்களுக்கு உரிமையும் கிடையாது. சட்டமும் கிடையாது. மக்களாட்சியிலே நமக்கு என்னென்ன உரிமைகள் இருக்குன்னு உங்களுக்குத் தெரியும். ஆனால் மன்னராட்சியில மக்கள் இப்படித்தான் இருக்கனும்னு கடமைகள் தான் இருக்கும். யாரும் உரிமை பற்றிப் பேச முடியாது.

இளங்கோ : அப்ப மக்களாட்சியில் தான் உரிமைகள் இருக்குமா?

நீதி : ஆம். சரியாச் சொன்னாய். மக்களால் உருவாகும் அரசு மக்கள் உரிமையைக் காப்பத்தனும்ல. ஆகவே தான் மக்களாட்சியை நாம் பாதுகாக்கனும்னு சொல்றோம். மக்களாட்சி மக்களை மதிக்கிற ஆட்சி. எல்லோரையும் சமமாக மதிக்கிற ஆட்சி. இங்குதான் சமத்துவம் இருக்கும்.

இனியன் : மன்னர்கள் எவ்வளவோ பேர் நல்லவங்களா இருந்திருக்காங்களே. அவங்களைப் பத்தியெல்லாம் நாம் வரலாற்றுப் பாடத்திலே படிக்கிறோமே.

நீதி : உண்மை தான். நல்ல கொடைத்தன்மை உள்ள மன்னர்கள் இருந்திருக்காங்க. இரக்கமுள்ளவங்க இருந்திருக்காங்க. கருணையுள்ளவங்க இருந்திருக்காங்க. இல்லைன்னு சொல்லலை. சில மன்னர்களிடம் இதுமாதிரி நல்ல குணங்கள் இல்லைன்னு வச்சுக்குவோம். நாம அவர்களை என்ன செய்ய முடியும்? மாற்ற முடியுமா? முடியாதே. ஆனால் மக்களாட்சி நாமே தேர்ந்தெடுத்த ஆட்சி. தப்பு செய்தாங்கன்னு வைங்க, நம்ம உரிமைகளை மதிக்கலைன்னு வைங்க. அஞ்சு ஆண்டுகளுக்குப் பிறகு, வரும் தேர்தலில் அவங்களை வேண்டாம்னு தேர்ந்தெடுக்காம இருந்திறலாம், இதுதான் மக்களாட்சி.

இன்னொன்றையும் சொல்லணும்.

மன்னர் மக்களுக்குக் கருணையோடும் இரக்கத்தோடும் நல்ல காரியங்கள் செய்யலாம். மக்களாட்சியிலும் இரக்கம், கருணையுள்ளம் வேணும். மறுக்கல. ஆனால் மக்களாட்சியில மக்களுக்கு நல்லது செய்ய வேணுங்கிறது அரசாங்கத்தின் கடமை. இதைச் செய்யலைன்னா மக்கள் அரசைக் கேள்வி கேட்பது அவர்கள் உரிமையாகும். அதற்காகத்தான் அரசமைப்புச் சட்டங்கள் வச்சிருக்கோம். அரசாங்கம் சட்டப்படி நடக்கலைன்னா நீதிமன்றத்துக்குப் போறோம்.

சுதந்திரம் : மக்களாட்சியில இவ்வளவு சிறப்பு இருக்கா? நாங்க வெறும் வாக்களிப்பது மட்டும் தான் மக்களாட்சின்னு நினைச்சிக்கிட்டிருந்தோம். மக்களாட்சிக்கு ஆணி வேரே மக்கள்தான் என்பது இப்பத்தான் புரியுது.

நீதி : மக்களாட்சியிலே நமக்கெல்லாம் என்ன பெயர் தெரியுமா? மன்னராட்சியில நாமெல்லாம் மன்னருடைய குடிகள். குடிகள் மன்னரைச் சார்ந்து அவருக்குக் கீழ்ப்படிந்து தான் இருக்கணும். ஆனா, மக்களாட்சியில நாமெல்லாம் குடிமக்கள். இங்கு குடிமக்களுக்குச் சுதந்திரம் உண்டு; சட்டப் பாதுகாப்பு உண்டு; குடியுரிமை உண்டு. உரிமையெல்லாம் இருக்கு. நாமெல்லாம் எந்த சமயத்தைச் சார்ந்தவர்களானாலும், ஆண் பெண் என்றாலும் எந்த மொழி பேசினாலும் இந்நாட்டின் குடிமக்கள் தான்.

### மன்னராட்சிக்கும் மக்களாட்சிக்கும் உள்ள வேறுபாடு

| மன்னராட்சி | மக்களாட்சி |
|---|---|
| தனி மனித அதிகாரம் | மக்களிடமே அதிகாரம் |
| கருணையும் கடமையும் | சலுகை அல்ல ; உரிமை |
| உரிமையற்ற "குடிகள்" | சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட "குடிமக்கள்" |

மன்னராட்சியில் உணவு உயிரன்று, நீரும் உயிரன்று, மன்னரே உயிர். மக்களாட்சியில் மக்களே உயிர். அவர்கள் எல்லோரும் இந்நாட்டு மன்னர்.

இதுவரை மன்னராட்சியும் மக்களாட்சியும் என்ற இந்நாடகத்தைப் பார்த்த உங்கள் எல்லோர்க்கும் நன்றி.

## சிந்தனைக்கான கேள்விகள்

பலரும் பாகுபலி படம் பார்த்திருப்பீர்கள். பாகுபலியில் வரும் ஆட்சி முறை எத்தகையது என்பதைத் தெரிந்தவர்கள் பேசவும்.



இப்போது நம் மாநிலத்தை (தமிழ்நாடு) ஆள்பவர்கள் யார் என்று தெரியுமா? அவர்களை யார் தெரிவு செய்தது? பாகுபலி திரைப்படத்தில் மன்னனைத் தெரிவு செய்யும் இராஜமாதா போன்றா அல்லது மக்களா?

மக்களுக்கு எந்த ஆட்சி முறையில் உரிமைகளும் பாதுகாப்பும் உள்ளன. மக்கள் எங்கு அதிக சுதந்திரம் அனுபவிக்கின்றனர்?

மக்களாட்சியே உரிமைகளைத் தந்துள்ளது. மக்களாட்சியாய் இருப்பதால் தான் நாம் நம்ம வகுப்புல உரிமைகளைப் பத்திப் பேச முடியுது. சுருக்கமாகச் சொன்னா, நாம ஏற்கெனவே பேசிய **"பன்முகத் தன்மைக் கொண்ட சமூக வாழ்வு"**, **"மனித மாண்பு"** இங்குதான்

போற்றப்படுகிறது.
பாதுகாக்கப்படுகிறது.
வளர்க்கப்படுகிறது.
வாழ் நெறியாக உள்ளது.

எனவே, சனநாயகப் பண்புகளின் அடிப்படையில் உருவாகும் அரசாங்கம்தான் சனநாயக அரசாக இருக்க முடியும். சனநாயக அரசின் கொள்கைகளையும் அதன் மக்களையும் காக்க உருவாக்கப்பட்டதுதான் அரசமைப்புச் சட்டம். இது சட்ட முறையிலான வடிவம். இவ்வரசமைப்புச் சட்டமே நம் உரிமைகளைக் காக்கும் அரண்; நம் சுதந்திரத்தைக் காக்கும் ஆயுதம். இவ்வாயுதம் தான் மக்களாட்சியின் பெருமையைக் காப்பவை. இத்தகைய சிறப்பு பெற்ற நம் அரசமைப்புச் சட்டம் எப்போது, யாரெல்லாம் இணைந்து உருவாக்கினார்கள் என்று பார்ப்போமா?

## அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு

1947-ஆம் ஆண்டு பி.ஆர்.அம்பேத்கர் தலைமையில் அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு ஏற்படுத்தப்பட்டது.

1. பி.ஆர் அம்பேத்கர் - தலைவர்
2. என்.கோபாலசாமி அய்யங்கார்

3. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்

4. கே.எம். முன்ஷி

5. சையது முகமது சாதுல்லா

6. என். மாதவராவ்

7. டி.டி. கிருஷ்ணமாச்சாரி

ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெற்றனர்.



இக்குழு தனது அறிக்கையை 1948-ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையிடம் ஒப்படைத்தது. 1949-ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபை அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக் கொண்டது. 1950-ஆம் ஆண்டு சனவரி 26-ஆம் நாளன்று இறையாண்மையுள்ள குடியரசு நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டது.

1949-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் நாள் அன்று இந்திய அரசமைப்புச் சபை இந்திய அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக் கொண்டது. அந்நாளையே இந்திய அரசமைப்புச் சட்ட நாளாகக் கடைப்பிடிக்கிறோம். இதனை தொடர்ந்து 1950-ஆம் ஆண்டு சனவரி 26-ஆம் நாளன்று அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்நாளையே நாம் குடியரசு நாளாகக் கொண்டாடுகிறோம்.

### இந்திய அரசமைப்புச் சட்டம்

- உலகின் நீளமான அரசமைப்புச்சட்டம்
- 22 பகுதிகள்
- 12 அட்டவணைகள்
- 395 பிரிவுகளைக் கொண்டுள்ளது.
- 114 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.




நம் இந்திய அரசமைப்புச் சட்டம் உயரிய மக்களாட்சிப் பண்புகளைப் வெளிப்படுத்தும் வகையில் அரசமைப்புச் சட்ட முகப்புரை உருவாக்கப்பட்டுள்ளது. இம்முகப்புரையை நாம் முழுமையாகப் படித்தால் போதும். நாம் எத்தகைய உரிமைகளுடைய குடிமக்களாய், சுதந்திரமாக, மக்களாட்சி மதிப்பீடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளோம் என்பதை உணர்ந்து கொள்ளலாம். வாருங்கள் நம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையை முழுமையாகப் படித்துப் புரிந்து கொள்வோம்.

முதலில் கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையைப் படிப்போம். மாணவர்கள் குழுவாக இணைந்து படிக்கவும். புரியாத சொற்களை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

# இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை
(Preamble to the Constitution of India)

இந்தியக் குடிமக்களாகிய நாம் இந்தியாவை

**இறையாண்மை கொண்ட**

**சமன்மை கொண்ட**

**சமயச்சார்பற்ற**

**சனநாயக**

**குடியரசாக**

அமைப்பதென உறுதி பூண்டுள்ளோம். இதன் மூலம் இந்தியாவின் அனைத்து குடிமக்களையும் பாதுகாப்பதுடன் இவர்களுக்கு

- சமூக, பொருளாதார, அரசியலில் அனைவர்க்கும் **நீதி**
- எண்ணத்தை வெளிப்படுத்த, எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, உண்மையைச் சொல்ல, வழிபாடு செய்ய **சுதந்திரம்**
- தகுநிலையிலும் வாய்ப்பிலும் **சமத்துவம்** அளித்தல்
- தனிமனிதர்களின் **மாண்பு,** நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் **சகோதரத்துவத்தோடு** உள்ளார்ந்த உறுதியுடையராய் வாழவும்

இந்திய அரசமைப்புச் சட்டத்தை 1949ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள் நமது அரசியல் நிர்ணய அவையில் ஏற்றுக்கொண்டு, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

# PREAMBLE
# TO THE CONSTITUTION OF INDIA

## The Constitution of India

### PREAMBLE

WE, THE PEOPLE OF INDIA,
having solemnly resolved to constitute India into a
SOVEREIGN SOCIALIST
SECULAR DEMOCRATIC REPUBLIC
and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;
LIBERTY of thought,
expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity;
and to promote among them all
FRATERNITY assuring the dignity of the
individual and the unity and
integrity of the Nation;

IN OUR CONSTITUENT ASSEMBLY
this twenty-sixth day of November, 1949, do
HEREBY ADOPT, ENACT AND GIVE TO
OURSELVES THIS CONSTITUTION.

**குழந்தைகளே!**

நம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையை படித்தீர்களா?

அதில் சொல்லப்பட்டுள்ள சொற்களைப் புரிந்து கொண்டீர்களா?

அதில் நீங்கள் கேள்விப்பட்ட, கேள்விப்படாத சொற்கள் உள்ளனவா? என்பதை வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

அரசமைப்பில் சொல்லப்பட்டுள்ள இம்முதன்மைச் சொற்களை நாம் அறிந்திருந்தாலும் அறியாவிட்டாலும் இம்மதிப்பீடுகள்தான் நம்

வகுப்பறையை
குடும்பங்களை
ஊர்களை
சமூகத்தை
அரசாங்கத்தை ஆள்பவை.

இவை நம் வாழ்க்கையுடனும், வாழ்க்கை முறையுடனும் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது.

நம்முடைய ஒவ்வொரு அசைவிற்கும், வாழ்க்கைக்கும், செயலுக்கும் நெருங்கிய தொடர்புடையதாக அரசமைப்புச்சட்டம் உள்ளது.

நம் நாடு எப்படிப்பட்ட நாடாக இருக்கிறது என்பதை அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. மீண்டும் ஒரு முறை நாம் படிப்போம். **இறையாண்மை கொண்ட, சமன்மை கொண்ட, சமயச்சார்பற்ற, சனநாயக, குடியரசு** ஆகிய உயரிய மதிப்பீடுகளைக் கொண்ட நாடாகக் கட்டமைப்போம் என்று நமது அரசமைப்புச் சட்ட முகப்புரை வெளிப்படுத்துகிறது. இவற்றை ஒவ்வொன்றாகச் சுருக்கமாகப் பார்ப்போம்.




**இறையாண்மை**

எவ்வித அந்நிய குறுக்கீடுகள் ஏதும் இல்லாமல் தனித்தன்மையுடன் நம்மை நாமே ஆள்வதையே இறையாண்மை என்கிறோம்.

**சமத்துவம்**

நாட்டின் வளங்கள் அனைத்தும் அரசிற்குச் சொந்தமானவை. இவ்வளங்கள் அனைத்து மக்களுக்கும் உரியவை. அவை அனைவர்க்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அனைத்து மக்களுக்கும் கண்ணியமான வாழ்க்கைக்கான பொருளாதார சமத்துவத்துடன் கூடிய பகிர்வுகள் இருக்க வேண்டும்.

**சமயச் சார்பின்மை**



பல சமயங்களுடைய இந்திய நாட்டின் அனைத்து சமயங்களையும் அரசு சமமாக நடத்தும் அரசின் செயல்பாடு எந்த ஒரு சமயத்தின் அடிப்படையிலும் இயங்காது.

**சனநாயகம்**

மக்கள் பங்கேற்புடன் நடைபெறும் ஆட்சியைத்தான் சனநாயக ஆட்சி என்கிறோம். நம் நாட்டை ஆள தேர்தல் மூலம் சனநாயக நெறிமுறையில் தெரிவு செய்தல் மக்களாட்சியின் ஒரு பகுதியாகும்.




**குடியரசு**

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்படுவதையே நாம் “குடியரசு” என்கிறோம்.

**குழந்தைகளே!**

அரசமைப்புச் சட்டத்தின் மிக முக்கியமான கருத்துகள் புரிந்திருக்கும் என நினைக்கிறோம். இப்போது மீண்டும் நமது அரசமைப்பு முகப்புரையின் முதல் வரியை படிக்கவும்.

**‘இந்தியக் குடிமக்களாகிய நாம்’**

இதில் ‘நாம்’ என்பதன் பொருள் என்ன? வகுப்பில் பகிரவும்.

நாம் எனும் போது அனைவரையும் உள்ளடக்கியுள்ளதா? அல்லது சிலரை விலக்கியுள்ளதா? என்பதைக் கவனத்தில் கொள்ளவும். அனைவரையும் உள்ளடக்கியுள்ளது எனில் நாம் என்பதில் அடங்குவோர் யார்?

நாம் பல்வேறு நம்பிக்கைகள், சமயங்கள், இனங்கள் ஆகியவற்றைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் நாம் யாராக இருக்கிறோம் என்பதே இங்கு முதன்மை பெறுகிறது.




இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்தியக் குடிமக்களாவார்கள். இந்தியாவில் உள்ள மக்கள் அனைவர்க்கும் சட்டம் பொதுவானது.

ஆனால் மன்னராட்சி காலத்தில் மக்களுக்குக் "குடிமக்கள்" என்ற தகுநிலை இருந்ததா? என்றால் இல்லை என்பதே உண்மை.

மன்னராட்சியில் நாமெல்லாம் குடிகள். எனவே குடிகள் அனைவரும் மன்னரைச் சார்ந்து அவருக்குக் கீழ்ப்படிந்து தான் இருக்க வேண்டும்.

மக்களாட்சியில் நாமெல்லாம் குடிமக்கள். இங்கு குடிமக்களுக்கு உரிமைகள் உண்டு. சுதந்திரம், சமத்துவம் உண்டு. சட்டத்தால் பாதுகாப்புப் பெறுபவர்கள் குடிமக்கள்.

நாம் பல்வேறு வகைகளில் வேறுபட்டாலும் நாம் அனைவரும் இந்நாட்டின் குடிமக்கள்தான். இந்திய அரசமைப்புச் சட்டம் அனைத்துக் குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் அரண்.

நம்முடைய அரசமைப்புச் சட்டத்தின் முதன்மையான மதிப்பீடுகளையும் மன்னராட்சிக்கும் மக்களாட்சிக்கும் இடையேயான வேறுபாட்டையும் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நினைக்கிறேன். இறுதியாக அரசமைப்புச் சட்டத்தின் முதன்மை நோக்கங்களைப் பார்க்கப் போகிறோம். அவை

### நீதி



சமூகம், பொருளாதாரம், அரசியல் என அனைத்து நிலைகளிலும் அனைவர்க்கும் நீதி கிடைத்திட வேண்டும்.

### சுதந்திரம்

- தான் எண்ணிய கருத்தை வெளிப்படுத்த சுதந்திரம்
- தான் எண்ணிய கருத்தைப் பிறர்க்கு எடுத்துச் சொல்ல சுதந்திரம்
- தான் நம்பும் ஒன்றின் மீது நம்பிக்கை வைக்கச் சுதந்திரம்
- உண்மையைச் சொல்வதற்கான சுதந்திரம்
- தான் விரும்பிய முறையில் வழிபாடு செய்ய சுதந்திரம்

### சமத்துவம்

மக்கள் அனைவரும் சாதி, சமயம், இனம், பாலினம், பிறப்பிடம், பொருளாதாரம், மொழி என எவ்வித பாகுபாடுகளுக்கும் உள்ளாகாமல் அனைவரும் சமமான குடிமக்கள் என்ற தகுநிலையைப் பெறுவதுடன் அனைவர்க்கும் சமமான வாய்ப்பு அளித்து அவர்தம் வாழ்வு உயர்வுறச் செய்தல்.

### சகோதரத்துவம்

இந்நாட்டின் குடிமக்கள் அனைவரும் தனிமனித மதிப்பைப் போற்றிப் பாதுகாப்பதுடன் நம் நாட்டின் ஒற்றுமையையும், பன்மைத் தன்மையையும் போற்றி ஒருமைப்பாட்டை வளர்க்கச் சகோதரத்துவத்துடன் வாழ உறுதி அளித்தல்.




அரசமைப்புச் சட்டத்தின் இம்முதன்மை நோக்கங்களை நாம் மனதில் ஏற்று பன்முகத் தன்மைக் கொண்ட இச்சமூகத்தைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். மீண்டும் இப்பாடத்தின் முதல் பக்கத்தில் உள்ள அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் சொல்லப்பட்டுள்ள மேற்கண்ட

நோக்கங்களைத் தெளிவாகப் படித்து வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும். அரசமைப்புச் சட்டம் நமக்கு அளித்துள்ள அடிப்படையான உரிமைகளை அடுத்த வகுப்பில் முழுமையாகப் படிப்போம்.

## பயிற்சிகள்

### 1) விடுபட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புங்கள்

1. இந்தியாவில் நடைபெறுவது ______________
(மக்களாட்சி / மன்னராட்சி)

2. இந்தியா ஒரு ______________________ நாடு
(சமயச்சார்பற்ற / சமயச்சார்புள்ள)

3. நாட்டின் வளங்கள் ______________ சொந்தமானவை.
(அனைவர்க்கும் / சிலர்க்கு)

4. நம் நாடு ______________ நாடு.
(இறையாண்மையுள்ள / இறையாண்மையற்ற)

5. நம் நாட்டை ஆளக்கூடியவர்கள் ______________ மூலம் தெரிவு செய்யப்படுகிறார்கள். (தேர்தல் / அமர்த்துதல்)

6. மக்களாட்சியில் மக்கள் ______________
(பங்கேற்கிறார்கள் / பங்கேற்பதில்லை)

### 2. சரியான பொருளுடன் பொருத்துக

a. சமத்துவம் ______________ எண்ணத்தில், எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, வழிபாடு செய்ய

b. சகோதரத்துவம் ______________ சமூகம், பொருளாதார, அரசியல்.

c. சுதந்திரம் ___________ தகுதிப்பாட்டிலும் வாய்ப்பிலும் சமத்துவம்.

d. நீதி ______________ தனி மனித மதிப்பு, நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு உறுதி அளித்தல்.

### 3) நாடகமாக நடித்துக் காட்டுங்கள்

இந்திய அரசமைப்பின் முகப்புரையில் வழக்கப்பட்டுள்ள முதன்மைக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு நாடகம் ஒன்றைத் தயார் செய்து அதனை வகுப்பில், பள்ளியில் நிகழ்த்திக் காட்டுங்கள்.

**4) கட்டுரைப் போட்டி**

1. "இந்தியக் குடிமக்களாகிய நாம்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை உருவாக்கி வகுப்பில் படிக்கவும்.

**5) உரக்கச் சொல்வோம்**

1. அனைவரும் பிறரைச் சமமாக நடத்துவோம்!
2. பிறரின் மாண்பு குலைய நடந்து கொள்ள மாட்டோம்!
3. பிறரின் சுதந்திரத்தில் தலையிட மாட்டோம்!
4. ஒவ்வொருவரின் உரிமையையும் மதிப்போம்!
5. எங்களுக்குள் பாகுபாடு காட்டமாட்டோம்!
6. அனைத்து இனத்தவருடன், சமயத்தினருடன் சகோதரத்துவத்துடன் பழகுவோம்!
7. வன்முறை எதற்கும் தீர்வல்ல என்பதை நம்புகிறோம்!
8. அரசமைப்புச் சட்டத்தின் உயரிய மதிப்பீடுகளின்படி நடந்து கொள்வோம்!
9. சட்டத்தை ஏற்று மதிப்போம்!
10. சட்டத்தின்படி நடப்போம்!

**6) இந்திய அரசமைப்புச் சட்ட முகப்புரையுடன் தொடர்புடைய அருஞ் சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | ம | த் | து | வ | ம் | உ | சி |
| ம | ந | ச | மா | ள | வ | க | ட் |
| த | ல | ம | ண் | ல | து | ண | ளா |
| ர் | ய | னி | பு | நீ | த் | ல் | க் |
| ம | சு | த | ந் | தி | ர | ம் | க் |
| ம் | ஏ | உ | ச | ளு | த | வு | ம |
| இ | ன | ரி | வ | ங | கோ | டி | ள |
| அ | ன் | மை | ர | த | ச | சா | ற |

**7. குழுவாகக் கலந்துரையாடவும்**

அரசமைப்பு முகப்புரையில் அளிக்கப்பட்டுள்ள முதன்மை நோக்கங்களான நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன குறித்தும் அவை நம் ஊரில் எவ்வகையில் நடைமுறையில் உள்ளன என்பதைப் பற்றியும் குழுவாகக் கலந்துரையாடவும்.

**8. பொருள் விளக்கத்தை அறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.**

“எல்லோரும் இந்நாட்டு மன்னர்!”



# குறிப்புகள்

# குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி

## Constitutional Rights Education Programme (CRE)

## குழந்தை பாதுகாப்புக் கொள்கை

**குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களுக்கான கொள்கை**

- 18 வயதுக்குட்பட்ட அனைவரும் குழந்தைகளே!
- அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்வுக்கான, வளர்ச்சிக்கான, பாதுகாப்பிற்கான மற்றும் பங்கேற்பிற்கான உரிமைகள் உள்ளன.
- மன்றத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் "குழந்தைகளின் சிறந்த நலனே" மையமாக இருக்கும். எப்போதும் "குழந்தைகளுக்கே முதலிடம்" என்பதை உறுதி செய்வேன்.
- அனைத்துக் குழந்தைகளையும் சமமாக நடத்துவேன்; சாதி, சமயம், இனம், பாலினம், பிறப்பிடம், நிறம், உடை போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டமாட்டேன்.
- இதுவரை குழந்தைகளுக்கு "உடல், மன, பாலியல் ரீதியாக" நான் எந்தத் தீங்கும் இழைத்ததில்லை. இனியும் இழைக்கமாட்டேன்.
- மன்ற நிகழ்வுகளில் எடுக்கப்படும் ஒளிப்படங்களை, காணொளிகளை உரிய இசைவின்றி எவரிடமும் பகிர்ந்து கொள்ளமாட்டேன்.
- எம் கவனத்திற்கு வரும், குழந்தைகள் மீதான வன்முறைச் சம்பவங்களை எமது அமைப்பிடமும், அவர்கள் ஆலோசனைப்படி, குழந்தை உதவி எண் 1098, குழந்தை நலக் குழுமம், மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகு, சிறப்பு சிறார் காவல் அலகு ஆகிய அமைப்புகளுக்கும் தெரிவிப்பேன்.

# குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி

“அரசமைப்பு உரிமைகளைப் பண்பாடாக வளர்த்தெடுப்போம்!” என்ற முழக்கத்தோடு வான்முகில் அமைப்பு குழந்தைகள் மத்தியில் அரசமைப்பு உரிமைக் கல்வியை முன்னெடுத்துள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் மதிப்பீடுகளையும், அது உத்திரவாதப்படுத்துகிற அடிப்படை உரிமைகளையும் குழந்தைகள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்; சமூக அக்கறையும் நல்ல மனித மதிப்பீடுகளும் கொண்ட குடிமக்களாக இவர்கள் உருவாக வேண்டும் என்ற உயரிய நோக்கில் இவ்வுரிமைக் கல்வி கொண்டு செல்லப்படுகிறது. பள்ளிகளில், வகுப்பறைகளில், விடுதிகளில், வீதிகளில், விளையாட்டு அரங்கங்களில், சமூகத் தளங்களில் இத்தகைய மதிப்பீடுகள் வெளிப்பட வேண்டும் என்ற பெருங்கனவுகளோடும் பேரார்வத்தோடும் உந்தித் தள்ளப்பட்டு, இம்முன்னெடுப்பு பலருடைய ஒத்துழைப்பில் உருவானது.

கடந்த ஆண்டு தமிழகம் – புதுவையில் 17 மாவட்டங்களில் 125 கிராமங்களில் 10 குடிமைச் சமூக அமைப்புகளின் உதவியோடு குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் தொடக்கப்பட்டுள்ளன. இக்கல்வித் திட்டத்தை பள்ளிகளிலும் விடுதிகளிலும் கொண்டு செல்வதற்கான ஆக்கப்பூர்வ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆறாம் வகுப்பு பயிலும் குழந்தைகளை மையப்படுத்தி, எட்டுப் பாடங்களை உள்ளடக்கிய “இந்தியக் குடிமக்களாகிய நாம்” எனும் இப்பாடநூல் மிக எளிமையாகவும், பல்வேறு செய்முறைப் பயிற்சிகள், கதைகள், வரலாற்று மற்றும் உண்மை சம்பவங்கள், கலந்துரையாடல்கள் வழியாக குழந்தைகளுக்கு புரியும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு கல்வியாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், சமூக அக்கறை கொண்ட ஆசிரியப் பெருமக்களின் பங்களிப்பு இதன் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தது. இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்களிலும் உள்ள முக்கியமான உரிமை சார்ந்த பிரிவுகள் இப்பாடநூலில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. இப்பாடநூல் அச்சு வடிவில் மட்டுமல்லாது, மின்னணு வடிவிலும் வெளிவருகிறது.


வான்முகில்
திருநெல்வேலி

**வான்முகில்**

**அரசமைப்பு உரிமைக் கல்வி**

15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல், திருநெல்வேலி

தொடர்பு கொள்ள : 94426 18117, 99943 68503

மின்னஞ்சல்: vaanmuhil@gmail.com